# கதையும் கற்பனையும்

(நாவல்)



"மாயாவி"



அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை—18
உரிமை பதிவு] 1951 [விலை ரூ. 1-8-0

*First Edition—January-1951*

## உள்ளுறை



Printed at the National Art Press, Madras-18

## சமர்ப்பணம்

இலக்கியத் தோழர், இனிய நண்பர்

ஸ்ரீ 'அகிலன்' அவர்களுக்கு.

# பதிப்புரை

'மாயாவி' இன்று தமிழ் நாட்டுக்கு மிகவும் பழகிப் போன எழுத்தாளராகி விட்டார். அவருடைய கதைகளில் உவமையும் வருணனையும் மனஸ்தத்துவமும் விறுவிறுப்பும் இருக்கும் என்பது ஒன்று; எல்லாவற்றையும் விடக் கதா சுவாரஸ்யம் மிகவும் விசேஷமாக இருக்கும். இதற்கென்று அவர் தனிப்பட்ட சில உத்திகளை மேற்கொண்டிருக்கிறார்.

இந்த நெடுங்கதையில் உண்மையாக நடக்கும் வரலாறாக ஒன்று வருகிறது. அதனிடையே கதாசிரியனுடைய கற்பனை ஒன்று வருகிறது. இரண்டும் சேர்ந்து கதையில் நடு நடுவே முடிச்சுகளை ஏற்படுத்திக் கடைசியில் அவிழ்க்கின்றன. அந்த அந்தப் பகுதிவரையில் எல்லாம் பொருத்தமாகவே தோற்றுகின்றன. ஆனால் அடுத்த பகுதி வரும் போது முன்பகுதி வெறும் கற்பனையாக முடிகிறது. இவ்வாறு கதையின் சுவாரஸ்யம் மேலும் மேலும் வளர்கிறது. கதையின் ஆரம்பத்தில் பிடித்த ஓட்டம் கடைசியில் வந்து தான் நிற்கும்படி செய்கிறது.

'மாயாவி' பம்பாயில் வாழ்கிறவர். தென்காசிக்கு அருகில் உள்ள ஊரில் பிறந்தவர். பிறந்த இடத்திலும் புகுந்தஇடத்திலும் அவர் சும்மா இராமல் அந்த அந்தப் பிரதேசங்களின் இயல்புகளைக் கண்ணாலும் கருத்தாலும் முகந்து உள்ளத்தே தேக்கி வைத்துக் கொண்டிருக்கிறார். அவற்றையெல்லாம் தம்முடைய கதைகளில் அள்ளிவிடும் ஆற்றல் அவரிடம் நிரம்ப இருக்கிறது. பழைய கதைகளைப் படித்துப் புதிய கதைகளை எழுதுபவர்களைப் போலன்றி, வாழ்க்கையையே படித்துக் கதை எழுதும் உண்மையான எழுத்தாளர் 'மாயாவி'. ஆகையால்தான் அவர் எழுதும் ஒவ்வொரு கதையும் சுவை மங்காமல் விளங்குகிறது; அலுப்புத் தட்டாமல் படிக்கும்படி இருக்கிறது.

'மாயாவி' யின் பெரிய நாவலாகிய 'மறுமலர்ச்சி' யை வெளியிடும் வாய்ப்பு அமுதநிலையத்தாருக்குக் கிடைத்தது. அந்த நாவல் தமிழ் மக்களின் உள்ளத்தை மிகக் கவர்ந்து விட்டது. இப்போது இந்த நெடுங்கதை வெளியாகிறது. இதற்கும் தக்க வரவேற்பு இருக்கும் என்றே நம்புகிறோம்.

பதிப்பாளர்

# அறிமுகம்

சுக்கரம் 'கிர்' ரென்று சுழன்றுகொண்டிருந்தது. அதன் மத்தியில் உருட்டி வைக்கப் பட்டிருந்த களிமண்ணில் அவனுடைய இருகைகளும் லாகவமாக வேலை செய்தன. இடையிடையே பக்கத்தில் இருந்த சால் நீரில் கைகளை நனைத்துக்கொண்டு, அம்மண்ணுருண்டையை அவன் சில இடங்களில் அமுக்கினான்; சில இடங்களில் நெகிழ்த்தி விட்டான். ஒருபக்கம் கொஞ்சம் குடைந் தெடுத்தான்; இன்னொரு பக்கம் கொஞ்சம் அப்பினான், இன்னும் என்ன என்னவோ ஆலோசித்து ஆலோசித்துச் செய்தான். மண்ணுருண்டை சிறிது சிறிதாக உருப்பெற்றது. நீண்ட கழுத்து, பெருத்த வயிறு, குறுகிய அடிப்பாகம், இப்படியாக அது வளர்ந்தது. கடைசியில் பார்த்தால், அது ஓர் அழகான தண்ணீர்க்கூஜா!

அருகே ஓர் அலுமினியத் தொழிற்சாலை. அங்கே அடுக்கடுக்காக இரும்பு அச்சுக்கள் ஒரு பக்கம் வைக்கப் பட்டிருந்தன. பிரம்மாண்டமான உலை ஒன்றில் வெள்ளியை நிகர்த்த அலுமினியம் உருகிக் கொண்டிருந்தது. தொழிலாளி ஒருவன் வந்தான். தன் கையில் இருந்த நீண்ட அகப்பையால் உருகிய அலுமினியத்தை முகந்தெடுத்து, ஒவ்வோர் அச்சிலும் வார்த்தான். சற்றைக் கெல்லாம் அவை குளிர்ந்து உறைந்துவிட்டன. அச்சைக்கழற்றினான். பார்த்தால் அவைகளும் தண்ணீர்க் கூஜாக்கள் தாம்!

ஒரே மாதிரியான பாத்திரத்தை இருவர் உருச் செய்தனர். ஒருவன் தனது மனத்திறனால் அதைச் சிருஷ்டித்தான்; மற்றவன், விசேஷத்திறன் எதுவுமின்றி அச்சின் உதவியாலே அதை ஆக்கிவிட்டான். இரண்டையும்

மக்கள் விரும்பினர்; வாங்கினர். ஒன்று மண்கூஜா; மற்றொன்று அலுமினியக் கூஜா. இரண்டையும் அதன் அதன் உபயோகத்துக்கு வைத்துக்கொண்டனர். அதை அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அவற்றின் உற்பத்தியைச் சிந்திக்கவில்லை. ஒப்பிட்டும் சிந்தித்தும் பார்த்திருந்தால், 'ஒன்று உரித்தெடுத்தது; மற்றொன்று கற்பனையின் பிறப்பு' என்பது அவர்களுக்கு எளிதாகப் புலப்பட்டிருக்கும். அதுமாத்திரமா? உரித்தெடுத்ததில் காணப்படும் உண்மைச் சொரூபமும், கற்பனையில் காணப்படும் கோணல் மாணல்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

அவ்வாறு இரு வேறுபட்ட முயற்சிகளால் உருவாக்கப்பட்ட ஒரே மாதிரியான இரு பொருள்களை நுட்பமாக ஒப்பிட்டு, அவற்றின் பாகுபாடுகளைக் காண்பது, வேடிக்கையான, ஆனால், ருசிகரமான அநுபவம். அதை எந்தத் தொழிலில் வேண்டுமானாலும் புகுத்தலாம்; செய்யலாம்; பிறகு ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டு ஆனந்திக்கலாம். வேறு எவரேனும் எத்தொழிலிலாவது இதைச் செய்து பார்த்து ருசி கண்டிருக்கிறார்களோ, என்னவோ? என் தொழிலில் அதைப் புகுத்திப் பார்த்து விட்டேன். அந்த அநுபவத்தின் பிறப்புத்தான், இந்தக் "கதையும் கற்பனையும்."

நடந்ததை நடந்தவாறு நயமாகச் சொல்லுவது கதை. கதைக்குக் கடுகி ஓடக் கால்கள் இல்லை. பொய் என்ற வேலியைத் தொட்டு விடாதவாறு, குண்டு சட்டிக்குள்ளே குட்டிக்கரணம் போட்டுக் கொண்டிருக்க வேண்டியது, அது. எனவே, அது எப்பொழுதும், அச்சில் வார்த்தெடுக்கப்பட்ட அலுமினியக் கூஜாவாகத்தான் இருக்க முடியும். அதன் உருவத்தை மாற்ற முடியாது.

ஆனால், கற்பனையோ? அது தறிகெட்ட மாடு. எங்கே வேண்டுமானாலும், தன் போக்குப்படி ஓடும்.

அதன் ஓட்டத்தைத் தடைசெய்ய 'மூக்கணாங் கயிறு' கிடையாது. அழகிய நீர்க்கூஜாவாக்கிய அதே மண்ணுருண்டையை, இறுதிப் பிரயாணத்தில் துணைவரும் தீச்சட்டியாகவும் வனைந்துவிடமுடியும். அது உண்மையை ஒட்டவும் ஒட்டும்; விரும்பினால் வெட்டவும் வெட்டும்.

கற்பனை உண்மையை ஒட்டிவிட்டால், அதைக் கதையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் அத்தனை ருசி கிடையாது. உண்மையை வெட்டிச் சென்ற கற்பனையை, உண்மையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் உள்ளத்துக்குச் சுவையான அநுபவங்கள் கிட்டுகின்றன. இந்த ரீதியில் உருவான கற்பனைதான், 'வானவில்' பகுதி. காதில் பராபரியாக விழுந்த செய்தியைச் சம்பவமான கதையுடன் ஒப்பிட்டபோது, கற்பனை தோற்றுவிடுகிறது. தோற்றால் என்ன? எல்லோரும் விரும்பிச் சுவைக்க ஒரு மொத்தக் கதை கிடைத்து விட்டதல்லவா?

'கதையும் கற்பனையும்' பாத்திரங்களை, அதாவது, உண்மைப் பாத்திரங்களையும், கற்பனைப் பாத்திரங்களையும் தனித்தனியே அலசி, அவற்றின் இன வேறுபாடுகளை இங்கே எடுத்துக் காட்டப் போவதில்லை. அவை உண்மைக் கதையில் சுய உருவோடு நடமாடுகின்றன; கற்பனைக் கதையில் மாற்றுருக் கொண்டு, மாறுபெயருடன் என் கண்முன் தோன்றுகின்றன. எனவே, அவற்றில் எது, எந்த வகையில் உயர்ந்த குணசித்திரம் என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு உங்களைத்தான் சார்ந்தது! நான் எந்த நோக்கத்தோடு அந்தக் கதையை அமைத்தேன் என்பதை விளக்கிவிட்டேன். அந்த நோக்காகிய கண்ணாடியைத் தரித்துக்கொண்டு, இப்பொழுது அந்தப் பாத்திரங்களைப் பாருங்கள்.

நீங்கள் ரசிக்கத் தக்க பாத்திரங்கள் எவையுமே கதைப் பகுதியிலோ, கற்பனைப் பகுதியிலோ தட்டுப்

படாவிடினும், இந்தப் புத்தகத்தை நீங்கள் ரசித்துப் படிக்கத்தான் போகிறீர்கள் என்பதை நான் நிச்சயமாகச் சொல்லுவேன். ஏனெனில், இந்தக் கதை பத்திரிகையில் வெளியாகி மூன்று வருஷங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றளவும் அதைப் பாராட்டி எழுதிக்கொண்டிருக்கும் நீங்கள் தந்த ஊக்கந்தான், என்னையும் பிரசுரத்தாரையும், அதைப் புத்தகமாகக் கொண்டு வரச் செய்திருக்கிறது.

இக் கதையை முன்பு தமது பத்திரிகையில் வெளியிட்ட, 'கலைமகள்' ஆசிரியருக்கும் இதை அழகிய புத்தகமாக்கி உங்களுக்கு அளிக்கும் அமுதநிலையத்தாருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகும்.

அந்தேரி,
15-12-1950

"மாயாவி"

# கதையும் கற்பனையும்



## முன்னுரை

"டாண், டாண் டாண்..........."

பார்ஸிக் கோயில் இராக் காவற்காரன் தூங்கி வழிந்தவாறு, தன் சேகண்டியைப் பன்னிரண்டு முறை ஒலித்து நடு இரவாகிவிட்டதை அறிவித்துவிட்டான்.

'இரட்டைத் தொழில் புரியும் என்போன்ற எழுத்தாளர்கள் அது வரையில்தான் கண் விழிக்கலாம்' என்ற என் தீர்மானத்தின் வரம்பையும் மிஞ்சி, நான் எழுதிக் கொண்டிருந்தேன்.

"தங்களின் அடுத்த நெடுங்கதையை எப்பொழுது அனுப்பப் போகிறீர்கள்?" என்று ஆசிரியர் ஏற்கனவே கேட்டுவிட்டார். ஆகவே, வேகம் இருக்கும்போதே கதையை முடித்துவிட வேண்டுமென்று ஒரு மூச்சாய் உட்கார்ந்துவிட்டேன்.

கதையை முடித்துவிட்டு மணியைப் பார்த்தபோது, இரண்டரையாகி யிருந்தது. அதுவரையில் வாயில் அடக்கி வைத்திருந்த தாம்பூலத்தை உமிழ்ந்துவிட்டு எழுதியதைத் திரும்பப் படிக்க ஆரம்பித்தேன்.

அழகாகத்தான் அமைந்திருந்தது கதை. பெற்றவளுக்குத் தன் மக்களில் எவரும் விரும்பத் தகாதவர் இல்லை; எனினும் கைக் குழந்தையிடம் வாத்சல்யம் அதிக

மாயிருப்பது இயற்கை அல்லவா? புதிதாக உருவான கதையிடம் எனக்கும் அவ்வாறுதான் பிரியம் விழுந்தது. ஆயினும் படித்து முடித்ததும் அதில் ஒரு பெரிய குறை தென்பட்டது.

ஆசிரியர் கேட்ட நெடுங்கதைக்கு மாறாக அது அளவில் சிறிய கதையாகிவிட்டிருந்தது.

'எங்கே, எப்படிச் சந்தர்ப்பங்களை நுழைத்துக் கதையை நீட்டுவது?' என்ற ஆலோசனையில் ஆழ்ந்திருந்த போது, என் மனைவி அரை விழிப்புடன், "மணி என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

"மூன்று அடிக்கப் போகிறது."

"என்ன?"

"மணி மூன்றடிக்கப் பத்து நிமிஷங்கள் இருக்கின்றன; போதுமா?"

அவள் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு, "அது தெரிந்தது; இப்படிக் கண் விழித்தால் உடம்புக்கு ஆக வேண்டாமா? நாளைக்கு ஆபீசுக்குப் போகப் போகிறீர்களா, இல்லையா?" என்றாள்.

"மேள தாளத்துடன் போகப் போகிறேன்; போகாவிட்டால்........"

"ஆமாம்; இவ்வளவு நேரம் கண் விழித்து என்ன எழுதிக் கொண்டிருந்தீர்களாம்?"

"என்ன எழுதிக்கொண்டிருந்திருப்பேன்? தெரியாதா உனக்கு?"

"கதைதானே? 'ஊரிலிருந்து வந்த கடிதத்துக்குப் பதில் எழுதிப் போடுங்கள்' என்று நானும் ஒரு வாரமாய் முட்டிக்கொள்ளுகிறேன்; அதற்கு உங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. இந்தக் கதை - இது இப்பொழுது தலை போகிற அவசரம் பாருங்கள்!"

அப்பப்பா! இந்தப் பெண்கள் பேச ஆரம்பித்து விட்டால், இவர்களுக்குச் சமயமும் கிடையாது; சந்தர்ப்பமும் கிடையாது. அதிலும் எழுத்தாளர்களுக்குப் பெண்டு பிள்ளைகளெல்லாம் பெரிய 'கால்கட்டு'கள்தாம். இதனால் துறவிதான் எழுத்தாளனாக வர முடியும் என்று நான் சொல்லத் தயாராயில்லை. இருந்தாலும், இந்தப் பெண்டு பிள்ளைகளுக்கும் கொஞ்சம் சமயமறிந்து நடந்து கொள்ளத் தெரியவேண்டும். மணிமணியான சந்தர்ப்பங்களைத் தேடி அலைந்துகொண்டிருந்த என் மனதை, மனைவியின் இந்தச் சம்பாஷணை எங்கேயோ பின்னல் இழுத்துச் சென்றுவிட்டது. தொந்தரவு இல்லாதிருக்க வேண்டுமென்று அவர்களைத் தூங்க வைத்துவிட்டு, இரவில் எழுத ஆரம்பித்தேன். அந்த இரவில்கூட என் மன ஓட்டத்தைத் தடை செய்ய எழுந்து வந்துவிடுவதென்றால்?

ஆனால் தர்க்கம் செய்துகொண்டிருக்க அது சமயமல்லவே! மேலும் மனைவி அப்படி அலுத்துக்கொண்டதற்கும் காரணம் இருந்தது; முக்கியமான சமாசாரத்தைத் தாங்கிவந்த அந்தக் கடிதத்திற்கு உடனே பதில் எழுதிப் போடாமல் காலம் கடத்தி வந்தது என் தவறுதானே?

"நாளைக்குக் கட்டாயம் எழுதிப் போட்டுவிடுகிறேன்" என்று அவளுக்குச் சமாதானம் சொல்லித் தூங்கச் செய்தேன்.

எந்த விஷயத்திற்குப் பதில் எழுதவில்லை என்று என் மனைவி குறைப்பட்டுக்கொண்டாளோ, அந்த விஷயம் இதுதான்: குறிப்பிட்ட கடிதம் ஊரில் என் தந்தையிடமிருந்து வந்திருந்தது. அதில் அவர், தம்மால் வயற்கரைகளுக்குப்போய் நிலபுலன்களைக் கவனித்துக்கொள்ள

அறவே முடியவில்லை என்றும், ஆகவே இனிமேலாவது வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டு ஊருக்கு வந்துவிடும்படியும் எழுதியிருந்தார்.

அவரிடமிருந்து வரும் கடிதம் ஒவ்வொன்றிலும் இந்தக் கோரிக்கை வெளியிடப்பட்டிருக்கும். அவைகளுக்கு ஏதாவது சாக்குப் போக்குகள் எழுதி நான் தட்டிக் கழித்து வருவேன். ஆனால் இந்தக் கடிதம் சற்றுத் தீவிரமாக இருந்ததோடல்லாமல், என் உணர்ச்சியைக் கிளப்பிவிடும்படி எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தின் பிற்பகுதியில் அவர் எழுதியிருந்தார் :

" ராமு, கை கட்டிச் சேவகம் புரிவதில்தான் உன் மனசு அமைதியைக் காண்கிறதென்றால், அதற்கும் இப்பொழுது நம் ஊரிலே சந்தர்ப்பம் இருக்கிறது. தெற்குத் தெருப் பண்ணை, கோபாலையர் இங்கே ஒரு பெரிய பஞ்சாலை தொடங்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். அவரிடம் சொல்லி உனக்கு அங்கு ஒரு கௌரவமான ஸ்தானம் வாங்கிக் கொடுப்பது எனக்குக் கஷ்டமானதல்ல. எப்படி இருந்தாலும், இந்த வயசுக் காலத்தில் நீ என் அருகில் இருந்தால் மனசுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கும்...."

அவருடைய கடைசி வாக்கியம் என்னை உருக்கிவிட்டது. அந்தக் கடிதத்தை மனைவியிடம் காட்டி ஆலோசனை கேட்டபோது, அவள் சொன்னாள் : " அவர் எழுதியிருப்பது நியாயந்தான். 'ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை' என்றிருக்கும் நீங்கள் என்றென்றும் இப்படிச் 'சேவகா விருத்தி' செய்து காலம் தள்ளுவது முடியாதுதான். போதாததற்கு, 'அங்கு வேறு வேலை செய்து வைத்துவிடுகிறேன்' என்றுகூட எழுதியிருக்கிறார். இருந்தாலும், உழைத்த நாளெல்லாம் உழைத்துவிட்டுக் கடைசிக் காலத்

தில், கம்பெனியின் 'பிராவிடெண்டு பண்டு' பணம் கைக்குக் கிடைக்க ஆறேழு மாசங்களே இருக்கையில், அதைக் கைநழுவ விட்டுவிட்டுப் புறப்பட்டுப் போவது எப்படி? ஆகவே 'டிசம்பர் முடிவில் பம்பாய்க் குடித்தனத்தை ஒழித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்' என்று எழுதிப் போடுங்கள்; வேறு என்ன செய்வது?''

அவள் எளிதாகச் சொல்லிவிட்டாள். அவள் வார்த்தையில் காரியமும் இருந்தது. எனினும் தந்தையின் நெடுநாளைய ஆதங்கத்தின்முன், 'மறுபடியும் ஆறேழு மாசங்கள் காத்திருங்கள்' என்று எழுதிப் போடுவதை என் மனசு லேசாக ஒப்புக்கொண்டு விடவில்லை.

இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் அந்த ஒரு வாரமாக இருந்தேன். பதினைந்து வருஷங்கள் மெய் வருந்த உழைத்துவிட்டு, கைக்கு வரவேண்டிய பணத்தை ஏழு மாசங்கள் வேலைக் குறைவு ஏற்பட்ட காரணத்துக்காகக் காரியாலயத்துக்குத் தாரை வார்த்துவிட்டுப் போகவும் மனசு இடம் கொடுக்கவில்லை; இப்பொழுது போனால், ஊரிலே தகுதியான உத்தியோகம் கிடைக்கும், பெற்றோருக்கும் ஆறுதல் அளித்தாற்போல ஆகும் என்ற நினைவையும் மாற்றிக்கொள்ள முடியவில்லை. ஆகவே எவ்வித முடிவுக்கும் வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

இடையே, மனைவி தினமும் நச்சரித்துக்கொண்டேயிருந்தாள், 'பதில் எழுதிவிட்டீர்களா? பதில் எழுதிவிட்டீர்களா?' என்று. கடைசியாக இன்று, அவள் இஷ்டப்படியே எழுதிப் போட்டுவிடுவது என்று உட்கார்ந்தேன். ஊரிலிருந்து வந்த கடிதத்தை ஒரு முறை ஆரம்பத்திலிருந்து படித்துக்கொண்டு வந்தேன். 'பண்ணைக் கோபாலையர்' என்ற சொல்லுக்கு வந்ததும், என் வாசிப்புச் சட்டென்று நின்றது. அந்த நிமிஷத்தில்

கடிதம் எழுத உட்கார்ந்த நான் கதாசிரியரின் உருக் கொண்டுவிட்டேன்.

பண்ணைக் கோபாலையர், அவர் சோகவாழ்வு, வயசு காலத்தில் அவர் செய்த விபரீதமான செய்கை, சமீபத்தில் ஊர் சென்று திரும்பிய என் நண்பன் ஒருவன் கூறிய ரகசியச் செய்தி - இவைகளெல்லாம் என் மனசில் மின்னல்போல் தோன்றின. ஆஹா! உருக்கமான கதைக்கு எவ்வளவு உயர்வான சம்பவங்கள்!

மறு நிமிஷம் நான் கடிதத்தை மடித்து வைத்துவிட்டு எழுதும் பலகையை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டேன். நெடுங்கதைகளே எழுதி எழுதிப் பழக்கப்பட்டிருந்த எனக்கு எந்தக் கதையும் பத்துப் பதினைந்து இரவுகள் கண் விழிக்காமல் முடிவுறுவதில்லை. ஆனால் இந்தக் கதையை, பதினைந்து மணி அவகாசங்கூட இல்லை; அதில் பாதிக்கும் குறைவான காலத்தில் எழுதி முடித்துவிட்டேன். சம்பவங்கள் கற்பனையைத் தூண்டிவிடுமாறு அமைந்திருந்ததால், நடை தடங்கல் இல்லாமல் ஓடியது.

முழுக்க முழுக்க, கோபாலையரின் வாழ்க்கையில் நான் கண்டு கேட்டவைகளை வைத்தே கதையை அமைத்தேன். 'இந்தப் பத்திரிகையில் வரும் கதைகளிலுள்ள பாத்திரங்களின் பெயர்கள் அனைத்தும் கற்பனையே; அவை யாரையும் குறிப்பனவல்ல' என்ற ஆசிரியரின் குறிப்பை உறுதிப்படுத்தவும், ஏற்கனவே ஏற்பட்ட அநுபவங்களைக் கொண்டும், கதா பாத்திரங்களில் என்னைத் தவிர எல்லோருடைய பெயரையும் மாற்றி அமைத்தேன்.

பண்ணைக் கோபாலையரை ராவ்பகதூர் ராஜாங்கமையராக்கிக் கதையை ஆரம்பித்தேன். 'வான வில்' என்ற தலைப்பை உடைய அந்தக் கதை பின்வருமாறு ஓடிற்று.

# முதல் பாகம்

## வான வில்

### 1

வானவில்லின் நிறங்களை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள், அவை அனைத்தும் ஒரே ஒளியின் பல்வேறு கிரணங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதுபோன்று மனித உள்ளத்தையும் எந்த மனத்தத்துவ ஆராய்ச்சியாளனாவது ஆராய்ந்து பார்த்தானானால், மனிதனின் விதவிதமான வெளித் தோற்றங்களுக்கும், திடீர் மாறுதல்களுக்கும் அர்த்த காமத்தைத்தான் காரணமாகக் காட்ட முடியும்.

இந்த முடிவுக்கு உதாரணத்தைக் தேடி வெளியே எங்கும் போகவேண்டியதில்லை. எங்களூர் ராஜாங்கமையரின் வாழ்க்கைக் கதையைக் கேட்டாலே போதும். ஆம்! ஓர் எழுத்தாளனுக்குக் கற்பனைத்திறமை எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் மன ஆராய்ச்சியிலும் இருக்க வேண்டும் என்பதை எனக்கு உணர்த்தி வைத்ததே, அவர் வாழ்க்கைச் சரித்திரந்தானே?

ராவ்பகதூர் பட்டம் பெற்ற ராஜாங்கமையர் எங்களூர்வாசி. கலெக்டராக இருந்து நிறையப் பணம் சம்பாதித்தபிறகு ஓய்வுபெற்று ஊரோடு தங்கியிருந்தார். யாரும் குறை கூறும் வண்ணம் எக்குணங்களும் அவரிடம் இருந்ததாக நான் அன்று கேள்விப்பட்டதில்லை. அதற்கு மாறாக, தர்மிஷ்டர், சமத்துவ நோக்குடையவர் என்ற புகழுரைகளையே நான் அடிக்கடிக் கேட்டிருந்தேன்.

ஆனால் உலகில் தியாகம் அல்லது சோகம் இவைகளின் பின்னாலல்லவா புகழ் எப்பொழுதும் மறைந்து நிற்கிறது? ராஜாங்கமையரின் விஷயத்திலும் இந்த விதி விலகிவிடவில்லை. எனினும், அவர் வாழ்க்கையில் அது தலைகீழாக நிகழ்ந்தது. ஊரை வந்தடைந்து, ஊர்வாசிகளிடத்து நற்பெயரையும் மதிப்பையும் சம்பாதித்துக் கொண்டபிறகு சோகப்பகுதி அவர் வாழ்க்கையில் ஆரம்பமாயிற்று.

நான்கே பேருடைய அந்தச் சிறிய குடும்பம், மூன்று வருஷங்களில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. இறுதியில் எஞ்சி நின்றவர் ராஜாங்கமையர் தாம்.

முதல் முதலில் அவர் மனைவி, நாற்பது வயசுகூட நிரம்பாத அந்த நித்திய லக்ஷ்மி கணவனுக்குச் சோக வாழ்வை ஆரம்பித்து வைத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றாள். ஒரே நாள் ஒரே நிமிஷத்தில் அவளை மாரடைப்பு என்ற பாசக் கயிற்றை வீசி யமன் இழுத்துச் சென்றான்.

ராஜாங்கமையர் அந்தத் துயரத்தை மறப்பதற்காகப் பெண்ணிடம் புறப்பட்டுச் சென்றார். சாரதாவை அவர் படித்த வரனுக்கு வாழ்க்கைப் படுத்தியிருந்தார். மேல் நாடுகளுக்குச் சென்று நெசவாலை நுட்பங்களைக் கற்று வந்திருந்த மாப்பிள்ளை பிறரிடம் கைகட்டிப் பிழைக்கலாகாது என்று, கோயம்புத்தூரில் புதிய ஆலை ஒன்றை நிர்மாணித்து அதை அவன் பொறுப்பில் விட்டிருந்தார். பெண்ணும் மாப்பிள்ளையும் நடத்தும் சந்தோஷ வாழ்க்கையைப் பார்த்துத் தம் துயரத்தை மறக்கடிக்க வேண்டுமென்று அவர் கோயம்புத்தூருக்குச் சென்றார்.

ஆனால் விதி, கோயம்புத்தூர் என்ன, பூகோளத்தில் எங்கிருந்தாலும் விடாமல் துரத்திவருவதன்றோ? அது

அவ்வூரில் அடுத்தபடியாகத் தன் கைவரிசையைக் காட்டிற்று. ஆலேயில் மின்சாரத்தால் இயங்கும் ஏதோ ஒரு யந்திரம் கோளாறுற்றுப் போனபோது, அதைச் சரி செய்துகொண்டிருந்த மாப்பிள்ளையை மின்சாரத் தாக்குதல் பலி கொண்டுபோயிற்று.

தம் துயரை மறக்க வந்த ராஜாங்கமையர் இப்பொழுது பெண்ணின் துயரை மாற்ற வழி கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. போதாததற்கு, அவள் அச்சமயம் ஆறு மாசம் கர்ப்பிணியாக வேறு இருந்தாள்.

அந்தக் கர்ப்பந்தான் அவள் வாழ்க்கைக்கு எல்லேக் கல்லாக இருந்தது. கணவனேப் பறிகொடுத்த அதிர்ச்சி அவளே நெடுநாள் உயிருடன் வைத்திருக்கவில்லே. நான்கே மாசங்களில், பிரசவக் கோளாற்றினுல் அவளும் அவளுடைய உருக்கொண்டு மண்ணில் விழுந்த குழந்தையும் ஒரே நாளில் ஒருவர் பின் ஒருவராய் எல்லோரும் செல்லும் வழியில் சென்றனர்.

## 2

இந்தக் கதைகளையெல்லாம் அவ்வப்போது ஊருக்குப் போய்வந்த நண்பர்கள் எனக்குக் கொண்டுவந்தார்கள். ராஜாங்கமையர் பிறகு ஊருக்குத் திரும்பி வரவேயில்லே என்றும், வாழ்க்கையில் வெறுப்படைந்து சந்நியாசியாகப் போய்விட்டாரென்றும் செய்திகள் பராபரியாக என் செவிகளில் விழுந்தன.

சென்ற தடவை ஊருக்கு வந்த அன்று தெற்குத் தெருவில் இருந்த என் மாமாவின் வீட்டிற்குப் போகப் புறப்பட்டேன். எங்கள் கிராமத்துக்கு அரண்மனேயாக விளங்கிய ராஜாங்கமையரின் மூன்றடுக்குப் பங்களாவின் வாசலில் வந்ததும் என் கால்கள் தாமாகத் தயங்கி நின்றன.

என் பார்வை அந்தத் துரதிருஷ்ட வீட்டை நோக்கிச் சென்றது.

‘லக்ஷக்கணக்கில் பணத்தைப் போட்டு, நகரத்துப் பாணியில் பிரம்மாண்டமாக அமைத்திருந்த அந்தப் பங்களாவில் சனியன் புகுந்திருந்ததோ, என்னவோ, யார் கண்டார்கள்? நிம்மதியாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசையுடன் கட்டியவரை, அந்த மாளிகையில் இரண்டொரு வருஷங்கள்கூட வாழச் செய்யாது விரட்டி விட்டது அதன் செயலாகத்தான் இருக்க வேண்டும்’ என்று நான் எண்ணமிட்டேன்.

பங்களாவின் விசாலமான கீழ்த்தளத்துத் திண்ணையில் ஊஞ்சல் ஒன்று அறுந்து தொங்கிக்கொண்டிருந்தது. ராஜாங்கமையரின் வாழ்க்கை ஊஞ்சல் அறுந்துபோனதை எனக்கு அது நினைவு படுத்திற்று. ஊஞ்சலின் கம்பிகள் தொங்கிக்கொண்டிருந்த உத்தரத்தில் ‘கீச்சுப் பீச்’சென்று கத்திக்கொண்டு வெளவால்கள் தலைகீழாய்த் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்தப் பங்களா கட்டி ஒரு வருஷமான பின்னர் ஒரு முறை நான் ஊருக்கு வந்திருந்தேன். அப்பொழுது அந்தத் தெருவில் நுழைந்ததுமே வாசல் தோட்டத்திலிருந்து ரோஜாவின் நறுமணம் காற்றுடன் கலந்து வந்தது. இன்று வெளவால் புழுக்கையின் நாற்றந்தான் தெருவை நிறைத்திருந்தது.

அன்று அழகிய பூஞ்செடிகள் வைத்துப் பயிரேற்றப் பட்டிருந்த வாசல்புறத்துத் தோட்டம், இன்று கழுதைகளுக்கும் பன்றிகளுக்கும் வாசஸ்தலமாக இருந்தது. நல்ல வேளையாக அந்தப் பாழடைந்த பங்களா தெருக்கோடியில் இருந்தது. இல்லாவிட்டால், தெரு ஜனங்கள் சதா பன்றிகளும் கழுதைகளும் பரிவாரங்கள் புடைசூழப்

பவனி வந்துகொண்டிருக்கும் காட்சியைத்தான் காண வேண்டி யிருக்கும்.

அதிருஷ்டம் கெட்ட இடம் என்பதாலோ, ராஜாங்கமையர் அவ் வீட்டுச் சாவிகளை யாரிடமும் கொடுத்துவிட்டிருக்காததாலோ, கிராமத்தில் எவரும் அந்தப் பங்களாவின் வெளிவாசலைத் தாண்டி உள்ளே சென்றதில்லை. ஒரே நெருஞ்சி முள்ளும் எருக்கிலைப் புதருமாக அதன் புல்லுத்தரை நடைபாதையெல்லாம் இன்று அடைக்கப்பட்டிருந்தன.

'வாழ்க்கையில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளை அறிந்து கொள்வதற்கு மனிதன் இன்னொரு மனிதனின் வாழ்க்கையைத்தான் ஊடுருவிப் பார்க்கவேண்டும் என்பதில்லை; அறிவுடைய எவனுக்கும் வாழ்வையும் தாழ்வையும் இந்தப் பாழடைந்த பங்களாவே உணர்த்திவிடும்' என்று எண்ணியவாறு அன்று என் வழியே நடந்தேன்.

இவை நடந்து சில மாசங்களான பின்னர், இன்று மறுபடியும் நான் ஊருக்கு வந்திருந்தேன். ஆனால் இன்று நான் கேட்ட செய்தி !

'ராஜாங்கமையர் ஊர் திரும்பிவிட்டார் ; அவர் பாழடைந்த பங்களா இப்பொழுது புத்துயிர் பெற்றுவிட்டது' என்று கேட்டிருந்தால்கூட நான் ஆச்சரியம் அடைந்திருக்க மாட்டேன். ஏனெனில், 'துயரம் மனிதனைச் சில சமயம் பித்தனாக்கிவிடும் ; அதன் வேகத்தில் அவன் எதையாவது செய்துவிடுவான். பிறகு, அதன் ஜ்வாலை அவிந்து குளிர்ந்ததும், அவன் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிடுவான்' என்ற வரையில் மனத்தத்துவ ஆராய்ச்சியில் நான் கண்டுபிடித்து வைத்திருந்தேன். ஆனால்—

'சந்நியாசியாகப் போய்விட்டாரென்று கூறப்பட்ட ராவ்பகதூர், இன்று கிருகஸ்தராக ஊர் திரும்பியிருந்

தார். அதிலும், யாரோ ஓர் இளம் பெண்ணை - அழகும் நாகரிகமும் நிறைந்த யுவதியை - அவள் கணவனிடமிருந்து இழுத்து வந்துவிட்டார்' என்ற செய்தியைக் கேட்ட போது, மனத்தத்துவ ஆராய்ச்சியில், நான் எவ்வளவு பின்னே நிற்கிறேன் என்பது எனக்குத் தெற்றெனப் புலப் பட்டது.

வேண்டுமென்றே அன்று மாலை அவர் பங்களாவுக்குப் போகப் புறப்பட்டேன். தெருவில் நுழைந்ததும் வாசனை மூக்கைத் துளைத்தது. ஆனால் அது ரோஜாவின் மென்மை யான மணமல்ல; மல்லிகையின் எரிந்த வாசனை.

தைரியமாகப் பங்களாவுக்குள் நுழைந்துவிட்டேன். வாசல்புறத்துத் தோட்டத்தில் இருபுறமும் மல்லிகைச் செடி வேலி பிடிக்கப்பட்டு வழிவிட்டிருந்தது. அந்த ம்ல் லிகைச் செடிகள் அவைகளின்-பூக்களில்தான் தீவிர மணம் இருந்ததென்றால் தோற்றத்தில்கூட அவைகளுக்கு ஒரு கவர்ச்சி இல்லையே! வெண்மையான பூக்களை நிறைத்துக் கூடைபோல் குவிந்து நின்ற அவைகள் தலை நரைத்து வயசு முதிர்ந்த கிழவர்களையல்லவா நினைவுபடுத்தின?

மல்லிகைச் செடியிலிருந்து என் பார்வையைப் பங்க ளாத் திண்ணையை நோக்கித் திருப்பியபோது, என் நினை வின் பிரதிபிம்பமாக ராஜாங்கமையர் தென்பட்டார். அன்று அறுந்து தொங்கிய ஊஞ்சலில் இன்று அவர் படுத்து ஆடிக்கொண்டிருந்தார். வாழ்க்கை ஊஞ்சலுக்கு இந்த வயசில் ஒட்டுப்போட்டவராயிற்றே இவர்? இந்த ஊஞ்சலுக்கு ஒட்டுப்போட இவருக்கு அதிக நேரமா பிடித்திருக்கப்போகிறது?

வாசலில் இருந்த மல்லிகை மலர்களைப்போல அவர் தலை நரைத்துப் போயிருந்தது. முகத்தில் காணப்பட்ட சுருக்கங்கள், சென்ற துயர வாழ்க்கை விடுத்துப்போன

வடுக்களா ? அல்லது இப்பொழுது மேற்கொண்டிருக்கும் கபட வாழ்க்கையை வெளிப்படுத்தும் சின்னங்களா ? சில வருஷங்களுக்கு முன் இதே பங்களாத் திண்ணையில் இதே ஊஞ்சலில் அவரை முதல் முதலாகப் பார்த்தேன். அன்று அவருக்கு ஒரு மயிர்கூட நரைத்திருக்கவில்லை. பொலிவு ஒடிய முகத்தில் இப்பொழுது........?

எங்கிருந்தோ திடீரென ரோஜாவின் நறு மணம் வீச, திகைத்துப் பார்வையைத் திருப்பினேன். திண்ணையோரத்தில் இருந்த கிராதியின் அருகே ஒரு நாற்காலியில், நூல் பை பின்னிக்கொண்டு ராஜாங்கமையரின் பெண் சாரதா உட்கார்ந்திருந்தாள். என் உடல் ஏனோ கிடுகிடென்று ஒரு நிமிஷம் ஆடிற்று. கண்களைத் துடைத்துக் கொண்டு படியேறி அவளை நோக்கினேன். இறந்துபோனதாகக் கூறப்பட்ட சாரதாவேதான்; சந்தேகமே இல்லை!

அவளை முதல் முறையாகவும் கடைசி முறையாகவும் பார்த்துச் சில வருஷங்கள் ஆகிவிட்டனவென்றாலும் அந்த அழகிய வதனம், கொடி போன்ற மெல்லிய சரீரம், சிரித்த முகம், குறுகுறுவென்ற கண்கள், இத்தனை ஆகர்ஷணங்கள் பொருந்திய அவளுடைய உருவம் கலையுருவில் என் அகக் கண்களில் எப்பொழுதும் நின்றது.

அவளைப் பார்த்த பிறகுள்ள வருஷங்களில் நான் எத்தனை கதாநாயகிகளைச் சிருஷ்டித்தேனோ, அவர்கள் அனைவரும் இந்த மனப்பிம்பத்திலிருந்து உரித்து எடுக்கப் பட்டவர்களே. பிரம்மதேவனின் வார்ப்புப் பட்டறையில் அழகுருவுக்கு அச்சுக் கிடையாது. எப்பொழுதாவது ஒழிந்தபோது அவன் தன் கையால் இத்தகைய பிம்பங்களைச் செய்தனுப்புகிறான். அதனால்தான் உலகில் எல்லோரும் மனமோகனமான உருப் படைத்திருப்பதில்லை. 'அந்தப் பிரம்மதேவன் இன்னும் சப்தகோடிகாலம் உயிரோடு

இருக்கட்டும். நல்ல உருவம் ஒன்றைப் படைத்து, அதை ஒரு கதாசிரியனுக்கு அச்சுருவாகக் காட்டிக்கொடுத்தானே' என்று என் ஒவ்வொரு சிருஷ்டியின் ஆரம்பத்திலும் அவனை வாழ்த்துவேன். 'ஒரே ஓர் அச்சுத்தான் கிடைத்திருக்கிறது. இனி ஒரு பொழுதும் அது மறுபடி கிடைக்காது. ஆகவே இந்த அச்சை நான் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்' என்று கதை எழுதாதபோதும் அவ்வுருவை அடிக்கடி நினைவுக்குக் கொண்டுவந்து மெருகு கொடுத்து வைப்பேன். ஆனால் இன்று, அந்தக் கிட்டாத பண்டத்தை, அந்த அச்சுக்கு அச்சை, மறுபடி காணக்கிடைத்தபோது, என்னை மறந்து நோக்கிக்கொண்டிருந்தேன்.

"யாரப்பா நீ?" என்ற ராஜாங்கமையரின் அதிகாரமான குரல்கூட என் பார்வையைத் திருப்பிவிட முடியாது போயிற்று.

எனினும் அவர் கேள்விக்குப் பதில் வந்தது; "கீழத் தெருக் கிருஷ்ணையரின் பிள்ளை ராமு நான்."

"ராமுவாவது, சோமுவாவது!" என்று அவர் முணுமுணுத்துக்கொண்டது என் காதில் விழாமற் போய் விடவில்லை.

"சாரதா, நீ உள்ளே போ; இந்த ஊரில் இப்பொழுது புதுப் புதுப் பைத்தியங்களெல்லாம் கிளம்பி யிருக்கின்றன" என்று அவர் தொடர்ந்து கூறினபோதுங்கூட என் பார்வை அது லயித்திருந்த இடத்தைவிட்டுப் பெயரவில்லை.

புதுமையுடன் என்னை நோக்கிக்கொண்டிருந்த சாரதா வீட்டிற்குள் மறைந்து செல்லும் வரையில் கண்கள் அவளைத் தொடர்ந்து விட்டு, ராஜாங்கமையரிடம் திரும்பின.

"இங்கே எங்கே வந்தாய்?" என்று அதட்டும் தோரணையில் அவர் என்னைக் கேட்டார்.

"நான் பம்பாயிலிருந்து வந்திருக்கிறேன். நீங்கள் மறுபடி இங்கே குடி வந்துவிட்டீர்களென்று கேள்விப்பட்டுப் பார்க்க வந்தேன்."

"பம்பாயிலிருந்துதானே வந்திருக்கிறாய்? பின் என்ன, எங்கேயோ காட்டிலிருந்து வந்தவனைப்போல அப்படிப் பார்க்கிறாயே? மேலும் என்னைப் பார்க்க வந்தவன்........"

"இல்லை; இவள் உங்கள் பெண் சாரதாதானே?"

"ஆமாம்; ஆமாம்; ஆமாம்."

"ஆனால், அவள் செத்துப் போய்விட்டதாக........"

"அட சீ; போ அப்பா; உனக்கு ஒரு வேலை இல்லையா? டேய் முனுசாமி, நாளைமுதல் அந்த வெளிகேட்டை அடைத்துப் பூட்டுப் போட்டுவிடடா. ஊர்ப் பைத்தியங்களின் தொந்தரவு வரவர அதிகமாய்ப்போய்விட்டது."

ராஜாங்கமையர் ஊஞ்சலிலிருந்து எழுந்து உள்ளே சென்று வீட்டு வெளிக்கதவைப் படாரென்று சாத்தித் தாழிட்டுக்கொண்டார்.

## 3

நான் வீட்டிற்குத் திரும்பியதும், "அம்மா, நம் ஊரில் உலகின் எட்டாவது அதிசயம் நிகழ்ந்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே நுழைந்தேன்.

"நீ என்னடா சொல்லுகிறாய், ராமு?" என்று கேட்டவாறு என் தாய் அடுக்களையிலிருந்து வெளியே வந்தாள்.

"ஆமாம்; செத்தவர்கள் பிழைத்து வந்திருக்கும் அதிசயம் நம் ஊரில் நடந்திருக்கிறது."

என் தாய் வெறுமனே சிரித்தாள். நான் ஏதோ வேடிக்கை பேசுகிறேன் என்று நினைத்துக்கொண்டு அவள் சொன்னாள்: "ராமு, நீ கதைகள் எழுத ஆரம்பித்தாலும

ஆரம்பித்தாய்; நிறையப் பொய் சொல்லக் கற்றுக்கொண்டு விட்டாயடா.''

''இல்லையம்மா; அந்த ராவ்பகதூர் ராஜாங்கமையரின் பெண் சாரதாவை........''

அம்மா என்னை இடைமறித்து, ''ஓ, அதையா சொல்கிறாய்? நீ அங்கே எப்படிப்போனாய்? அவர்தாம் வீட்டுக்குள் ஒருவரையும் வரவிடுவதில்லையாமே!''

''எப்படியோ போனேன்; சாரதாவையும் பார்த்தேன் அம்மா! அந்தப் பெண் செத்துப் போனதாகச் சொல்வதெல்லாம் பொய்யா, என்ன?''

என் அன்னை சொன்னாள்: ''அதொன்றும் பொய் யல்லடா ராமு. நீ பார்த்த பெண்—அவள் சாரதா அல்ல; அவளைத்தான் இந்தக் கிழம் புருஷனிடமிருந்து இழுத்து வந்திருக்கிறது.''

''இந்த ஊரில் புதுப் புதுப் பைத்தியங்களெல்லாம் கிளம்பி யிருக்கின்றன'' என்று ராஜாங்கமையர் சற்றுமுன் கூறிய வார்த்தைகள் அந்த நிமிஷத்தில் என் மனசில் எழுந்தன. ஆம்; அந்தப் பெண்ணைக் கணவனிடமிருந்து பிரித்து அழைத்து வந்துவிட்டாரென்று சொல்ல, நிச்சயமாக இவ்வூராருக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும். சொந்த மகளைப் பரஸ்திரீ என்று கதை கட்டி அவளை ஆசை நாயகியென்று வாய் கூசாது கூறும் பழியை எவர்தாம் சகித்துக்கொண்டிருக்க முடியும்? இந்த அபாண்டத்தினால் மனம் புண்ணானதாலேதான் ராஜாங்கமையர் இவ்வூர் வாசிகளிடத்து அத்தனை வெறுப்படைந்து அவர்களைத் தம் வீட்டினும் அநுமதிக்க மனம் கொள்ளாதிருக்க வேண்டும்.—இவ்வாறு ஓடின என் சிந்தனைகள்.

"என்னடா ஆலோசிக்கிறாய் ராமு? கற்பனைக்கும், ஒவ்வாத விசித்திரமாக இருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிறாயா?"

"இல்லையம்மா; ராஜாங்கமையர் சொல்வதுபோல், உங்களுக்கெல்லாம் நிச்சயமாகப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது."

"பைத்தியந்தானே? ஆனால் எங்களுக்கல்ல; அந்தக் கிழத்துக்குத்தான் பிடித்திருக்கிறது. இவ்வளவு வயசுக்கு அப்புறம் ஒரு குடும்பப் பெண்ணை மோசம் செய்து அழைத்து வந்திருக்கிறது, பார்."

"இந்தப் பேச்சை நான் நம்பமாட்டேன் அம்மா; உருவந்தான் ஒருகால் ஒன்றுபட்டு இருந்ததென்றாலும், பெயர்கூட அந்தப் பெண்ணுக்கு........"

அம்மா சிரித்துகொண்டு, "நீயும் ஏமாந்து போனாயா?" என்றாள்.

"என்ன?"

"ஆமாம்; ஊரை ஏமாற்றிவிட வேண்டுமென்று அவர் அவளைச் சாரதா என்று கூப்பிட்டு வருவதோடல்லாமல், தம் பெண் என்றும் புரட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால், அவள் உண்மையான பெயர் வசந்தியோ என்னவோவாம்."

"இல்லையம்மா; உன் வார்த்தை எனக்கு நம்பிக்கை தரவில்லை. இதில் ஏதோ சூது இருக்கிறது. சாரதா இறந்துவிட்டாளென்ற செய்தியே உண்மையாக இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். அது சரி; யார் உனக்கு இந்தக் கதைகளெல்லாம் சொன்னார்கள்?"

"கற்பனையில் புத்தியைச் செலவிட்டுச் செலவிட்டுக் கண்முன் கண்ட சம்பவங்கூட உனக்குக் கற்பனையாகத் தென்படுகிறது ராமு. நான் சொன்னால், நீ எதையும் நம்பமாட்டாய்; சாரதாவுக்குப் பிரசவ வைத்தியம் பார்த்த

அந்த டாக்டர் கோவிந்தனை நாளைக்கு ஊருக்கு வரப் போகிறுன். அவனைக் கேள்; அவன் உனக்கு எல்லா வற்றையும் விரிவாகச் சொல்லுவான்.''

" டாக்டர் கோவிந்தனு? அவர் யாரம்மா ?''

" உனக்குத் தெரியாதா ? மேலத்தெரு ராகவனின் பிள்ளை கோவிந்தனை நினைவில்லையா? குழந்தைப் பருவத்தில் நீங்கள் இருவரும் ஒன்ருய் விளையாடியவர்களாயிற்றே !''

இருபது வருஷங்களுக்கு மேலாக வெளியூர் வாழ்க்கையை மேற்கொண்டதால், ஊரில் பலரை நான் மறந்து போயிருந்தேன். பாருங்களேன் : சிறு பிராயத்தில் கைகோத்து விளையாடிக்கொண்டிருந்த அந்தச் 'சாளவாய்க் கோவிந்தன்' இன்று ஒரு பெரிய பிரசவ சர்ஜனுகி, கோயம்புத்தூரில் மருத்துவ ஆஸ்பத்திரி நடத்தி வருகிருன் என்பதை அன்று என் தாய் கூறித்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

## 4

மறுநாள் காலையில் டாக்டர் கோவிந்தன் வந்ததும் வராததுமாய் அவனைப் பார்க்கச் சென்றேன்.

" ராமுவாடா நீ ? அடையாளமே தெரியவில்லையே ! ஏண்டா இப்படித் தலையெல்லாம் சொட்டை விழுந்து கிழவன்போல....'' என்ருன் அவன், என்னைத் தெரிந்து கொண்டதும்.

"நீதான் டாக்டராயிற்றே அப்பா; இந்த வழுக்கை மறைய ஏதாவது மருந்து கொடேன் '' என்றேன், அவன் பரிகாசத்தை ஏற்றுக்கொண்டு.

" அந்த வைத்தியம் நான் படிக்கவில்லையேடா ! நான் படித்ததெல்லாம் ஒரு ஜீவனிலிருந்து மற்ெருரு ஜீவனைப்

பிரித்தெடுக்கும் வைத்தியம் அல்லவா ? வேண்டுமானால், உன் மனைவியை என் 'மட்டர்னிடி ஹோமு'க்குப் பிரசவத்திற்கு அனுப்பி வை."

"கோயம்புத்தூருக்குத்தானே ? பேஷாக அனுப்புகிறேன். ஏனென்றால் கோயம்புத்தூருக்கும் பம்பாய்க்கும், வீட்டின் கொல்லைக்கும் வாசலுக்கும் உள்ள தூரந்தானே இருக்கிறது !"

"இப்பொழுது நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டு விட்டாயடா ராமு. அன்றைக்கெல்லாம் 'ஊமைக் கோட்டான்' போல எவ்வளவு கேலி செய்தாலும் வாயைத் திறக்கமாட்டாய்."

"பேசுவது மாத்திரம் என்ன ? ராமு இப்பொழுது கதைகள்கூட எழுதுகிறானடா கோவிந்தா !" என்றாள், அப்பொழுது அங்கே காபியுடன் வந்த அவன் தாய்.

"ஏண்டா, அப்படியாடா ? எனக்குத் தெரியவே தெரியாதே ! எந்தப் பத்திரிகைகளுக்கு எழுதுகிறாய் ? என்ன பெயரோடு எழுதுகிறாய் ?"

நான் என் உபதொழிலை அவனுக்கு விளக்கியதும் அவன் முதுகு பிரியும்படியாகச் சந்தோஷத்தட்டுத் தட்டி விட்டு, "அட பாவி! மாயாவி என்ற பெயருடன் எழுதுகிறது நீயாடா? ஏண்டா, எங்கிருந்தடா இந்தத் தொழிலைக் கற்றுக்கொண்டாய் ?" என்றான்.

சம்பாஷணை இப்படி வேறு பாதையில் சென்று கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. பல வருஷங்களுக்குப் பிறகு சந்தித்துக்கொண்ட நாங்கள் ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்குத் தெரிந்துகொண்டுவிட்டோம். இனி வந்த விஷயத்தைத் தொடங்கவேண்டுமென்று தீர்மானித்தவனாய், "அது இருக்கட்டுமடா கோவிந்தா. நான் இப்பொழுது

ஒரு பெரிய விஷயத்திற்கு உன் வாக்குமூலத்தை வாங்க வந்திருக்கிறேன் '' என்றேன்.

" வாக்குமூலமா ? நீ என்ன, வக்கீல் தொழில் வேறு செய்துவருகிறாயா ?''

என்றைக்குமே கோவிந்தன் இப்படித்தான்; வேடிக்கையாகவும் குறும்பாகவும் பேசுவான். அவனுடைய தமாஷ் பேச்சு எனக்கு வெறுப்பை அளிக்கவில்லை. எனினும், அந்தத் தமாஷான நிலையிலே, ராஜாங்கமையரின் வாழ்க்கைக் கதையை அவனிடமிருந்து வரவழைத்துவிட வேண்டுமென்று விரும்பினேன்.

கோவிந்தன் அவர் கதையை எனக்கு விரிவாகச் சொன்னான். விளங்கும் வகையில் கோவையாகச் சொன்னான். தன் மட்டர்னிட்டி ஹோமில்தான் சாரதா பிரசவித்தாள் என்றும், பிரசவித்த சில மணி நேரத்துக்கெல்லாம் அவளும் குழந்தையும் இறந்துவிட்டார்கள் என்றும் அவன் கூறினான்.

" அப்படியானால், இப்பொழுது ராஜாங்கமையருடன் வந்திருப்பவள் சாரதா அல்லவா ?'' இவ்வளவுக்குப் பிறகும் சந்தேகம் தெளியாத என்னிடமிருந்து இந்தக் கேள்வி தான் பிறந்தது.

" இவளா ? இவள் வசந்தி அல்லவா ? இருவரும் ஒரே அச்சில் வார்த்தெடுத்த பொம்மைகள்போல் வித்தியாசமற்று இருப்பார்கள்.''

" அதிருக்கட்டும்; ஆனல், இவளையும் ராஜாங்கமையரையும் பற்றி ஊரார் கட்டியிருக்கும் கதை விஷயமாக உன் அபிப்பிராயம் என்ன ?''

" என் அபிப்பிராயமா ? உண்மையான அபிப்பிராயம் கூறுமளவு நான் இவ் விஷயத்தில் மனசைப் புகவிட்டதில்லை. ஆனல் ஊரார் பேசிக்கொள்வது, அவர்கள்

கட்டிய கதையுமல்ல; கற்பனையுமல்ல. வசந்தியின் கணவ னின் கூக்குரலே அவர்கள் வாயிலாக இன்று எதிரொலிக் கிறது. உண்மை எங்கே இருக்கிறதோ ? அது கடவுளுக் குத்தான் தெரியும். இருந்தாலும் ராமு, அழகிய மனைவி யரைப் படைத்தவர்கள் பாக்கியசாலிகள் என்று நான் முன்பு எண்ணியிருந்தேன். ஆனால் அவர்கள் பாக்கிய சாலிகள் அல்ல; துர்ப்பாக்கியசாலிகள்தாம் என்பதையே இச் சம்பவத்திலிருந்து கற்றுக்கொண்டேன்.''

"கதையை விளக்கமாகச் சொல், கோவிந்தா'' என்று நான் துடித்தேன்.

"இன்னும் விளங்கச் சொல்லவேண்டுமா ? அப்படி யானால் கேட்டுக்கொள் : இந்த வசந்தியின் கணவன் ராதாகிருஷ்ணன் ராஜாங்கமையரின் மில்லில் காரியதரிசி. பெண்ணைப் பறிகொடுத்துப் பரிதவித்து நின்ற ராஜாங்க மையர், எப்படியோ ஒரு நாள் இந்த வசந்தியைப் பார்க்க நேரிட்டது. அவள் உருவம் அவர் மனசில் எவ்வித ஆவலைத் தூண்டிற்றோ, தெரியாது. அவளை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தால் தம் மனசு ஆறுதல் அடையும் என்று ராதாகிருஷ்ணனுக்கு அறிவிக்கச் செய்தார்.

"விகற்பமற்ற மனத்துடன் ராதாகிருஷ்ணன் அவர்க ளுக்குள் பழக்கம் ஏற்படுத்தி வைத்தான். கிட்டத்தட்ட அவர் வீடே நாளடைவில் வசந்தியின் வாசஸ்தலமாக மாறிப்போயிற்று.

"அவர் அவளுக்கு அழகிய ஆடைகளை வாங்கித் தந்தார்; உயர்தர அணிகலன்களைச் செய்து போட்டார். அடிக்கடி அவளை அழைத்துக்கொண்டு உலாவச் சென்றார். படக் காட்சிகளுக்குக் கூட்டிப்போனார். அதைப்போலவே ராதாகிருஷ்ணனின் ஸ்தானத்தையும் உயர்த்திவைத்தார். சாதாரணக் காரியதரிசியாக இருந்தவன், மில்லின் மானே

ஜர் ஆனன். பதவி உயர்ந்தது; வரும்படி உயர்ந்தது; பணம் புரண்டது. ஆனல்—

"உலகம் இந்த உயர்வுகளுக்கெல்லாம் வழக்கம் போலத் தவருன முடிவையே வெளிப்படுத்திற்று. அதன் முடிவு தவருனது என்றுகூட நான் சொல்லமாட்டேன். பாசத்திலிருந்துதான் காதல் உற்பத்தியாகிறது என்பது உண்மையானல், அதன் முடிவும் ஒருவாறு உண்மையாகவே இருக்கலாம். மனித உள்ளத்தின் மாறுதல்களுக்கு அடிப்படையான காரணம் அர்த்தகாமம் என்றபோதிலும், அந்த அர்த்தகாமம் வெறும் அன்பின் பிம்பந்தான் என்று எப்படி நிச்சயமாகக் கூறுவது? அல்லது அதில் சரீர சுகத்தின் கலப்பே கிடையாது என்றுதான் எப்படிச் சொல்வது?

"உண்மை என்னவோ தெரியாது. ஆனல், நாளடைவில் ராதாகிருஷ்ணன் உலகம் கூறிய பழியில் நம்பிக்கை கொண்டுவிட்டான். அவன் உலகின் பழியைத் தன் மனைவிக்குக் கூறி, ராஜாங்கமையருடன் பழகுவதைப் படிப்படியாகக் குறைத்துவரச் சொன்னன்.

"அதற்கு அவள் கூறிய பதில் அவன் சந்தேகத்தை வலுக்கச் செய்தது. அவள் சொன்னள் : 'உலகம் அப்படிச் சொல்லிற்றென்ருல் அதை நீங்கள் உடனே நம்பிவிட்டீர்களாக்கும்! அழகாயிருக்கிறதே உங்கள் நடை. இன்று இப்படி நினைப்பவர், அன்று எதற்காக என்னை இவருக்கு அறிமுகம் செய்துவைத்தீர்கள்? ஊர் வாய்க்கு மூடி போட விரும்பினல், அதற்கு வழி உங்களிடந்தான் இருக்கிறது. நீங்களும் எங்களுடன் இங்கே வசிக்க வந்துவிடுங்கள். அப்பொழுது, பொய் உலகின் கண்களுக்குத் தவருன லட்சியமுடையவராகத் தோற்றும் இப்பெரியவர் என் மாமனராகவோ தந்தையாகவோ ஆகிவிடுவார். அப்

படிச் செய்வதை விடுத்து, நம் இருவரையும் கண்கள் போலப் பாதுகாத்துவரும் இம் முதியவரின் மனதை முறி யச்செய்து, என்னை இவரிடமிருந்து இழுத்துப் போக முய லாதீர்கள்.'

" அவள் பேசிய இப் பேச்சுக்குப் பிறகு ராதாகிருஷ் ணன் வாயே திறக்கவில்லை. அவன் மனசில் என்ன போராட்டங்கள் நிகழ்ந்தனவோ, யார் கண்டார்கள்? அல்லது உலகின் பழியை மெய்ப்பிக்கும் சம்பவம் எதை யேனும் அவன் காண நேரிட்டதோ ? தெரியாது. ஆனால் இரண்டொரு நாட்களுக்குப் பிறகு அவன் திடீரென்று தலை மறைந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டபோது எவரும் ஆச்சரியப் படவில்லை.

"பிறகு என்ன ? ராஜாங்கமையர் தம் கோயம்புத்தூர் மில்லை விற்றுவிட்டார். அவருடன் வசந்தியும் இங்கே புறப்பட்டு வந்துவிட்டாள்."

கோவிந்தன் இப்படிக் கூறி முடித்துவிட்டு, "ஏண்டா ராமு, நீதான் கதாசிரியனாயிற்றே? 'வாழ்க்கை நுட்பங் களை ஆராய்ந்து முடிவு காண முடியாதவன் கதாசிரியனாக முடியாது என்று மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருப் பதுபோன்று, நீதான் சொல்லேன்: இந்த ராஜாங்கமையர்- வசந்தியின் உறவு எந்த முறையில் இருக்கலாம் என்று" எனக் கேட்டான்.

"நானும் ஒன்றும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை அப்பா; வானவில்லின் அழகிய நிறங்களைப் பார்த்துச் சொக்கி நின்றேன். 'அடே, அவை உண்மை நிறங்கள் அல்ல; ஓர் ஒளியிலிருந்து வீசும் ரேகையின் தோற்றங்கள்' என்று நீ எனக்கு இப்பொழுது உணர்த்தியிருக்கிறாய். அந்த ஓர் ஒளி - அது அக்கினிப் பிழம்பான சூரியனின் கதிரா, அல்லது குளுமையான வெளிச்சத்தைத் தரும்

சந்திரனின் ஒளியா என்பதை இனிமேல்தான் கண்டறிய வேண்டும்" என்று கூறிவிட்டு அன்று கோவிந்தனிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

## 5

'ராஜாங்கமையர் வசந்தியிடம் காட்டிவந்த அன்பு மெய்யான பாசமா? அல்லது சரீர இச்சைக்கு உட்பட்ட காமமா?' என்பதை ஆராய்ந்து அறிவதாகக் கோவிந்தனிடம் கூறிவிட்டு வந்தேனே தவிர, அதைக் கண்டறியச் சமயமோ சந்தர்ப்பமோ எனக்கு எப்பொழுதும் கிடைக்கவில்லை. அம்முறை ஒரு மாசம் ஊரில் தங்கி யிருந்துவிட்டு, பிறகு பம்பாய்க்குத் திரும்பி, என் வேலைகளில் ஆழ்ந்துபோனேன்.

ஆனால், நான் கண்டுபிடிக்கவில்லை யென்பதனால், உண்மை வெளிப்படாமல் இருந்துவிடவில்லை. நேற்று ஊரிலிருந்து வந்த அந்த நண்பன் கூறிய செய்தி—

"நம் ஊர் ராஜாங்கமையரின் விஷயம் தெரியாதே ராமு? எவளோ ஒரு பெண்ணை இழுத்துவந்து, அவளை 'மகள் - மகள்' என்று சொல்லி ஏமாற்றிக்கொண்டிருந்தாரே; அந்தச் சூது வெளிப்பட்டுவிட்டது. அவளுக்கு அவரிடம் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது!" என்றான் அந்த நண்பன்.

"என்ன? உண்மையாகவா?" என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம்; ஊர்ப்பழியை மறைப்பதற்காக, எங்கிருந்தோ ஒரு வாலிபனைக் கூட்டிக்கொண்டு வந்து, வீட்டோடு வைத்துக்கொண்டு 'அவன்தான் அவளுடைய கணவன்' என்று வேறு இன்னமும் ஏமாற்றிவிடப் பார்க்கிறார்."

இந்தச் செய்தியைக் கேட்டபிறகு, "வான வில்லுக்கு அழகிய நிறங்களைத் தரும் கிரணம், தகிக்கும் சக்தியுடைய சூரியனின் ஒளியிலிருந்துதான் வருகிறது; மென்மையான சந்திரனின் ஒளியிலிருந்து வருவதல்ல" என்று என் மனம் கூறிற்று.

## 6

'வானவில்' கதையை நான் இத்துடன் முடித்திருந்தேன். ஆம்! கதை முடிந்துவிட்டது. ஆனல் கற்பனை? அதற்கு முடிவேது? அது 'கதைக்குள் இன்னும் நுழைய எங்கே இடம் இருக்கிறது?' என்று தேடிக்கொண்டிருந்தது; ஆசிரியர் கேட்ட நெடுங்கதை வேண்டாமா?

ஆனல் மனிதனின் மனம் என்ன யந்திரமா, முடுக்கி விட்டதும் நிற்காமல் ஓடுவதற்கு? ஒருகால் எழுத உட்கார்ந்த போதிருந்த வேகத்துடன் இருந்திருந்தேனகில், கதையை நீளமாக்க ஏதாவது சம்பவம் உதித்திருக்கும். ஆனல், இடையே என் மனைவிதான் அதைக் கையைப் பற்றி இழுத்து எங்கேயோ கொண்டுபோய் நிறுத்தி விட்டாளே!

மணி ஐந்து அடித்துவிட்டது. வாசலில் பால்கார 'பையா' வந்து நின்று, கதவுத் தாழ்ப்பாளை 'டொக்கு டொக்'கென்று தட்டினன். எங்கள் யந்திர வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் ஆரம்பித்துவைப்பது 'பையா'வின் இந்த 'டொக்கு டொக்கு' சப்தந்தான். மனைவி குழந்தைகள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராய் எழுந்து விட்டனர். இனிமேல் நான் எழுதினற்போலத்தான்! எழுதும் பலகையைத் தூக்கிச் சாய்த்துவிட்டுப் பல் தேய்க்கச் சென்றேன்.

மனைவி காபிபோட 'ஸ்டவ்'வைப் பற்றவைத்து விட்டாள். கடைசிக் குழந்தை கையில் தம்ளரை எடுத்து வைத்துக்கொண்டு, " அம்மா, தாப்பி தாப்பி " என்று சுருதிபோட ஆரம்பித்து விட்டாள்.

" விடிய விடிய விழித்தீர்களே, கதையையாவது எழுதி முடித்துவிட்டீர்களோ, இல்லையோ ?" என்று என் மனைவி மறுபடியும் ஆரம்பித்தாள்.

நான் முகம் கழுவிக்கொண்டிருந்தேன். தண்ணீர் பட்டதும் கண்கள் 'ஜிவ்'வென்று எரிந்தன. அதைவிட எரிந்தது மனைவியின் இக் கேள்வி.

கதையை முடித்திருந்தேனுகில், ஒருவாறு அவளுக்குச் சமாதானமாகப் பதில் சொல்லியிருப்பேன். ஆனால் அது முடிந்தும் முடியாததாகிவிட்டது ஒன்று; மேலும் அதைப் பெருக்க முடியாதபடி அவளே தடைசெய்து விட்டது மற்றொன்று; இவை இரண்டும் சேர்ந்து அவள் கேள்விக்கு ஆத்திரமான பதிலையே தயார் செய்தன.

" நீங்கள் இருக்கும் வீட்டில், எவனாவது உருப்படியாக எதையாவது எழுதிவிட முடியுமா ?"

" போதும், போதும். தெரியாமல் கேட்டுவிட்டேன். காலையில் எழுந்திருந்ததும், வசைபுராணத்தை ஆரம்பித்து விடாதீர்கள்."

அவளுடைய தந்திரம் அது : கெஞ்சினால் மிஞ்சுவாள்; மிஞ்சினால் கெஞ்சுவாள்.

சிறிது நேரத்தில் அவள் காபித் தம்ளரை என் கையில் தந்துகொண்டே, " நான் யாருக்காகச் சொல்லுகிறேன் என்பதுகூடத் தெரியாமல் என்னிடம் கோபித்துக் கொள்கிறீர்களே. இப்படிக் கண்விழித்து, நாளைக்குக் கீழே படுத்துக்கொண்டால், உங்கள் அவஸ்தையை அந்த ஆசிரியர் வந்து அநுபவிக்கப்போகிறாரா ?" என்றாள்.

பசித்திருந்த வயிற்றில் காபி சென்றதும், என் மனசுங்கூடக் குளிர்நிலையை எய்திவிட்டது. அதை உணர்ந்துகொண்டு அவள் இன்னும் சொன்னாள்: "என்னை என்ன வேண்டுமானாலும் கோபித்துக்கொள்ளுங்கள்; ஆனால், ஊர்க் கடிதத்திற்கு உடனே சமாதானமாகப் பதில் எழுதிப் போடாவிட்டால், உங்கள் அப்பா, உங்களைக் கூட்டிச்செல்லப் பம்பாய்க்கே வந்துவிடுவார்."

அவள் சொல்வதும் நியாயமானதே. அப்பா இந்தக் கடிதத்தை எழுதியிருக்கும் தோரணையைப் பார்த்தால் அதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லையானால், இங்கே புறப்பட்டு வந்தாலும் வந்துவிடுவார். ஆகவே, 'அவர் கடிதத்திற்கு உடனே பதில் எழுதிவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பது' என்று மறுபடியும் மேஜைக்கு வந்தேன்.

"ம-ா-ா-ஸ்ரீ அப்பா அவர்களின் திவ்யபாத கமலங்களுக்கு அடியேன் ராமு, அநேக கோடி நமஸ்காரம்" என்று தொடங்கினேனோ இல்லையோ, வாசற்கதவுத் தாழ்ப்பாள் மறுபடி ஓசைப்பட்டது. "தந்தி ஸேட்" என்ற குரல் அந்த ஓசையைத் தொடர்ந்து வந்தது.

இந்தத் தந்திகள், எவ்வளவு முற்போக்கானவர்களையும் ஒரு நிமிஷம் கலங்கத்தான் வைத்துவிடுகின்றன. தந்தியைக் கையெழுத்திட்டு வாங்கிப் படிப்பதற்குள் என் மனசில் நூற்றுக்கணக்கான தூர் எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

அந்த எண்ணங்களின் பிரதி பிம்பமாகவே தந்தியின் சமாசாரமும் இருந்தது.

"அம்மா வாயுக் கோளாற்றினால் படுக்கையாகி விட்டாள். உடனே புறப்பட்டு வருக."

மனித இச்சைப்படி எந்தக் காரியந்தான் வெற்றியாக நடக்குமென்று நம்புவதற்கிருக்கிறது? நான் எதையோ

ஒன்றை மனதில் கொண்டு 'ஆறு மாசம் சென்று வருகிறேன்' என்று அப்பொழுது எழுத உட்கார்ந்ததென்ன? அன்றிரவு ரெயிலுக்கே குடும்பத்துடன் ஊருக்குப் புறப்பட நேர்ந்த நிர்ப்பந்தம் என்ன ?

## 7

இரண்டு நாட்களுக்குப் பின்னர் ஊரை வந்து அடைந்தேன்.

'எப்படி வந்தேன் ?', 'அந்த இரண்டு நாள் பொழுதும் எவ்வாறு கழிந்தது ?' என்பதொன்றும் எனக்குத் தெரியாது. என் மனம் ஒரே ஒரு நிலையில் லயித்திருந்தது. 'அம்மாவைப் பார்க்கவேண்டும்; அவளை உயிருடன் பார்க்கவேண்டும்' என்ற சிந்தனையைத் தவிர வேறு ஒன்றும், அந்த இரண்டு நாள் பொழுதிலும் என்னிடம் எழுந்ததில்லை.

வீட்டுக்குள் நுழைந்ததும், "அம்மா !" என்று அலறிக்கொண்டு அவள் படுத்திருந்த கட்டிலை நோக்கி ஓடினேன்.

"வந்தாயா ராமு ?" என்று என்னை அணைத்துக் கொண்டாள் அன்னை. பிறகு சொன்னாள் : "இனி நான் பிழைத்துவிடுவேன்; நீ வந்துவிட்டாய்." அவள் கண்களில் நீர் துளித்திருந்தது.

பதினைந்து நாட்கள் இரவு பகல் பணிவிடை செய்து, என்னைப் பெற்றவள் பிழைத்தெழுந்து நடப்பதைக் கண்டேன். பிரசவத்தின் வேதனையைத் தாய், குழந்தையின் முகக்காட்சியில் மறந்துவிட முயன்றாலும், அயர்வு, அவளைச் சோர்வடையச் செய்துவிடுவதில்லையா ? அவ்வாறுதான், பதினைந்து நாட்கள் கண்விழித்த அயர்வு,

அதற்கு முன் செய்த ரெயில் பிரயாணத்தின் அலுப்பு எல்லாம் என்னிடம் இப்பொழுது ஒருமுகமாகத் தலை காட்டின.

தாய்க்குத் தலைக்கு ஜலம் விட்ட அன்று, பகலில் என்னை அறியாதவாறு, நாற்காலியில் சாய்ந்து கண்ணயர்ந்துவிட்டேன். நல்ல தூக்கத்தில் மனைவி வந்து என்னை எழுப்பினாள். "உங்களைப் பார்க்க மேலத்தெருச் சுப்புணி வந்திருக்கிறார்; பாருங்கள்" என்றாள் அவள்.

"யார்? டாக்டர் கோவிந்தனா?" என்று கேட்டேன் நான்.

"டாக்டர் கோவிந்தனா? அது யாரது?" என்று அவள் வியப்புடன் கேட்டாள்.

"நீ ஒரு கதாசிரியனின் மனைவி என்பதையே மறந்து விடுகிறாயடி" என்று அவளுக்குச் சிரித்துக்கொண்டே பதில் கூறினேன்.

"போதுமே, உங்கள் பரிகாசம்! வாருங்கள்; அவர் வெகு நேரமாகக் காத்திருக்கிறார்" என்று கூறிவிட்டுச் சென்றாள் என் தர்மபத்தினி.

என் 'வானவில்' கதையில் டாக்டர் கோவிந்தனாக உருவாக்கியிருந்த அந்தச் 'சாளவாய்ச் சுப்புணி'யைப் பார்க்க எழுந்து நடந்தேன்.

"போன தடவை நாம் சந்தித்துக்கொண்டபோது, இடைக்காலம் இருபது வருஷங்களாகி யிருந்தது. இப்பொழுது இருபது மாசங்களுக்குள்ளே சந்தித்துக் கொண்டுவிட்டோம். ஏண்டா? நான் வந்திருக்கிறேன் என்று உனக்கு ஞான திருஷ்டியில் தெரிந்ததா? புறப்பட்டு வந்துவிட்டாய். கோவில்பட்டியில்தானே இருக்கிறாய்?" என்ற கேள்விகளுடன் சுப்புணிக்கு முகமன் கூறினேன்.

"ஏன் நிறுத்திவிட்டாய்? இன்னும் சொல்லப்பா; இனி நாம் எப்பொழுதும் பிரியவே போகிறதில்லை; இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்யப்போகிறோம்.''

"என்னடா புதிர் போடுகிறாய்? ஏண்டா? கோவில் பட்டி கோபால்மில்ஸ் வேலையை விட்டுவிட்டாயா என்ன? எப்பொழுது அங்கிருந்து வந்தாய்?''

'கேள்வியைப்பாரடா கேள்வியை! வந்து நாற்பது வருஷகாலமாயிற்றே. போடா பழி! சென்ற தடவை நான் வண்டியை விட்டு இறங்கியதும் இறங்காததுமாய் என்னைப் பார்க்க நீ ஓடிவரவில்லையா? அதுபோல இப்பொழுது நானே, வந்ததும் உன்னை....''

"ஆமாண்டா; கோவில்பட்டி வேலை என்ன ஆயிற்று? லீவில் வந்திருக்கிறாயா?''

"இல்லை, வேலைக்கே தலைமுழுகிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். பழைய முதலாளிதாம் புதிய மில் ஒன்றைத் தொடங்கப்போகிறாரே? ஏண்டா இப்படி ஒன்றையும் அறியாதவன் போலப் பசப்புகிறாய்? எந்த மில்லில் உனக்கு உதவி மானேஜர் வேலை தயாரிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த மில்லிலே காரியதரிசியாக வேலை ஏற்றுக்கொள்ள நான் கோபாலையரால் வரவழைக்கப்பட்டிருக்கிறேன். அது இருக்கட்டும் போன தடவை சந்தித்துக்கொண்ட போது, அவருக்கும் அந்த நளினுவுக்கும் உள்ள உறவின் உண்மையை அறியச் செய்த ஆராய்ச்சியின் முடிவுஎன்ன ஆயிற்று?''

"முடிவா? இரு; இதோ வந்துவிட்டேன்'' என்று கூறி நான் உள்ளே எழுந்துசென்றேன். பெட்டியில் இருந்த என் 'வானவில்' கதையின் கையெழுத்துப் பிரதியை எடுத்துவந்து, "இதோ; இதைப் படித்துப் பார்; இதில் இருக்கிறது என் முடிவு'' என்று அவன் கையில் அதைக் கொடுத்தேன்.

அதை அவன் படித்து முடித்துவிட்டு, "அட பாவி!" என்ருன்.

"நான் ஒரு பாவத்தையும் அறியேனே அப்பா" என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்.

"இதுதான் உன் முடிவா?"

"ஆமாம் அப்பனே; ஆமாம். முடிவு உண்மையாகவே நடந்துவிட்டபிறகு, அதுதானே என் தீர்மானமாகவும் இருக்க முடியும்?"

"ஏண்டா? இந்தக் கதையை எந்தப் பத்திரிகைக்காவது அனுப்பிவிட்டாயா என்ன?"

"இல்லே; அனுப்பவில்லே."

"போகட்டும்; அனுப்பாதவரையில் நல்லதாயிற்று."

"என் அப்படிச் சொல்லுகிருய்? கதை நன்ருக இல்லேயா?"

"கதையைப் பொறுத்தவரையில் நன்ருகத்தான் இருக்கிறது. ஆனல், கோபாலேயர் அதைப் படிக்க நேரிட்டால், அதிலும் நீதான் அதை எழுதினய் என்று தெரிந்துகொண்டால், அவர் உன்னேப்பற்றி என்ன நினைப்பார்? வெறுமனே அவரை ஒரு ராவ்பகதூராகவும், என்னே ஒரு டாக்டராகவும், சாவித்திரியைச் சாரதாவாகவும், நளினியை வசந்தியாகவும், ராமகிருஷ்ணனே ராதாகிருஷ்ணனகவும் மாற்றிவிட்டதால், இந்தக் கதை தம்மைத்தான் குறிக்கிறது என்பதை அவர் தெரிந்துகொள்ளாமல் இருந்துவிடுவாரா?"

"தெரிந்து கொள்ளட்டுமே; உண்மைக்குப் புறம்பான தொன்றையும் நான் எழுதி விடவில்லேயே?"

"எழுதவில்லேயா? ஆமாம்; ஆனல், அதைக் கொலே தான் செய்திருக்கிருய். முன்தடவை சந்தித்துக்கொண்ட போது நான் சந்தேகமாகக் கூறிய செய்திகளேயும், ஊர்

வம்பையும் வைத்துக்கொண்டு, கோபாலேயரை நீ சந்தித்து விட்டு வந்து என்னைக் கண்டதுபோலவும், நான் உன் சந்தேகத்துக்குச் சாதகமான செய்திகளைத் தெரிவித்தது போலவும், உன் கதையின் தலைப்புக்கு உகந்த விதமாய் அதை வளர்த்துக்கொண்டு போயிருக்கிறாயே? மேலும் உன் கதையின் முடிவு ஒரே அபாண்டமாக அல்லவா போய்விட்டது? என்டா, கோபாலேயரிடம் இப்பொழுது வந்திருப்பவன் நளினியின் கணவன் ராமகிருஷ்ணனே தான் என்பது உங்களில் யாருக்காவது தெரியுமா?''

“எங்களுக்கு எப்படித் தெரியும்? நானே அல்லது இவ் வூரில் வேறு எவருமோ அவனை இதற்குமுன் பார்த்திருந் தால் அல்லவா அந்த உண்மை தெரியப்போகிறது? அதிருக் கட்டும்; ஆனல், நளினிக்கு இப்பொழுது பிறந்திருக்கும் குழந்தை ? அதைப்பற்றி என்ன சொல்லுகிறாய்?''

''அந்த ஒரு விஷயந்தான் எனக்கும் இன்னும் மர்ம மாக இருக்கிறது. அதைப்பற்றி நளினியையே கேட்டு விடுவது என்றிருக்கிறேன்.''

என் மனசில்கூடச் சட்டென்று ஓர் ஆலோசனை தோன்றிற்று. பிரபல மராட்டி ஆசிரியர் காண்டேகர் எழுதிய நவீனம் ஒன்றைச் சமீபத்தில் படித்திருந்தேன். அதில் அவர் ஒரு சிறு கதையை எழுதிவிட்டு, அக்கதை யில் விவரித்திருக்கும் வாழ்க்கையை இன்பமாகவும் துன்பமாகவும் அநுபவித்த பலரைச் சந்தித்துப் பேசுவ தாக நாவலைப் புனைந்திருந்தார். அதுபோல, நான் கதை யின் முக்கிய பாத்திரங்களையே கண்டு, அவர்களிடமிருந்து வாக்குமூலங்களைச் சேகரிக்க முடியுமானல்....?

முடியுமானல், என் கதையைச் சிறந்த நிகழ்ச்சிச் சித்திரமாக ஆக்கிவிடமுடியும்; இல்லாவிட்டால், கதைக் கும் கற்பனைக்கும் உள்ள வித்தியாசத்தையாவது தெரிந்து

கொள்ள முடியும். ஆனல், அவர்கள் அதை எனக்குச் சொல்ல வேண்டுமே! சொன்னலும் அது ஒளிவு மறைவு இல்லாத உண்மையாக இருக்க வேண்டுமே!

இந்தச் சிந்தனையைத் தடைப்படுத்திக்கொண்டு, என் அப்பா உள்ளே வந்தார். "ராமு, காலையில் சொன்னேனே, அவ்விஷயமாகச் சற்று முன் கோபாலையரிடம் சென்றிருந்தேன். அவர் உன்னை அங்கு வரச்சொன்னர். போய்வருகிருயா?" என்று கேட்டார் அவர்.

காலையில் அப்பா என் வேலை விஷயமாகக் கோபாலையரிடம் ஏற்கனவே பேசி ஏற்பாடு செய்துவிட்டதாகச் சொல்லியிருந்தார். அதற்காகத்தான் என்னைக் கோபாலையர் பார்க்க விரும்பியிருக்க வேண்டுமென்று எண்ணிப் புறப்படத் தயாரானேன்.

போகும்போது அப்பா சொன்னர்: "ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேனே ராமு. உன் 'சாமுண்டியின் சாப'ப் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு போ; அதை அவர் படிக்க வேண்டுமென்ருர்."

'சாமுண்டியின் சாப'ப் புத்தகம் மாத்திரம் அல்ல; 'வான வில்'லின் கையெழுத்துப் பிரதியையும் எடுத்துக் கொண்டு நான் சுப்புணியுடன் கோபாலையரின் பங்களாவுக்குள் நுழைந்தேன்.

## 8

காம்பவுண்டுச் சுவரைத் தாண்டியதும் ரோஜாவின் மணம் 'கம்'மென்று வீசிற்று. பார்த்தால் அங்கு ஒரு மல்லிகைச் செடிகூட இல்லை. 'சே! நம் கற்பனை இங்கேயே பொய்த்துவிட்டதே' என்று எண்ணிக்கொண்டு திண்ணையில் ஏறினேன். அங்கேயும் என் கற்பனை ஊஞ்சலைக் காணவில்லை. ஆனல், அதற்குப் பதிலாக, கண்ணுக்கு

எதிரே ரேழியில் ஒரு தொட்டில் தொங்கிக்கொண்டிருந்தது. அதை ஒரு யுவதி ஆட்டிக்கொண்டிருந்தாள். அவள் தான் நளினியாக இருக்கவேண்டும். அவள் விஷயத்தில் மாத்திரம், ஊரார் வாக்கும் என் கற்பனையும் பொய்க்க வில்லை. சில வருஷங்களுக்குமுன் சாவித்திரியை எவ்வுருவத்தில் நான் பார்த்திருந்தேனே, அப்படியே இருந்தாள் இவள்.

நாங்கள் உள்ளே சென்றோம்.

"வாருங்கள் சுப்பிரமணியம். நீங்கள் எப்பொழுது கோவில்பட்டியிலிருந்து வந்தீர்கள்? அப்பா எழுதின கடிதம் கிடைத்ததா?" என்று அவள் சுப்புணியை வரவேற்றுக் கேட்டாள்.

"கிடைத்துத்தான் புறப்பட்டு வந்தேன். இப்பொழுதுதான் வந்து இறங்கினேன். உடனே முதலாளியைப் பார்க்கக் கிளம்பி வந்துவிட்டேன்."

"முதலாளியைப் பார்க்கத்தான் வந்தீர்களாக்கும்? உங்களை இங்கே வரவழைக்கச் செய்த என்னைப் பார்க்க வரவில்லையாக்கும்! இருக்கட்டும்; நண்பர் யார், தெரியவில்லையே?"

"இவனா? இவன்தான் நம் மில்லில் உதவி மானேஜர் பதவி ஏற்றுக்கொள்ளப் போகும் ராமு."

"அடடா! மாயாவியா? நமஸ்காரம். உட்காருங்கள். நான் பார்க்க விரும்பிய இருவரும் ஒன்றாய் வந்திருப்பது என்ன ஆச்சரியம், பாருங்கள்!"

'என்னைப் பார்க்க விரும்பினாளா? எதற்காக?' என்ற ஆச்சரியத்துடன் நான் அவளுக்குப் பதில் அஞ்சலி செய்தேன்.

"சரியான சமயத்தில்தான் வந்திருக்கிறீர்கள். அப்பாவும் அவரும் சற்று முன்புதான் வெளியே போனார்கள்.

வருவதற்கு நேரமாகும். உட்காருங்கள்; நிற்கிறீர்களே! இருங்கள், இதோ ஒரு நொடியில் காபி கொண்டுவருகிறேன்" என்று நளினி என் ஆச்சரியத்தை இன்னும் வளர்த்துக் கொண்டே பேசினுள்.

"சிரமப்பட வேண்டாம். நாங்கள் இப்பொழுதுதான் காபி சாப்பிட்டுவிட்டு வருகிறோம்" என்றேன்.

"பரவாயில்லை; உங்களுக்கு நான் இப்பொழுது நிறையத் தொந்தரவு கொடுக்கப்போகிறேன். அதைச் சமாளித்துக் கொள்ள முன்னலேயே ஏதாவது கொடுத்துச் சரி செய்ய வேண்டாமா?" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு, எங்கள் பதிலுக்காகக் காத்திராது உள்ளே சென்றாள்.

அவள் தலை மறைந்ததோ இல்லையோ, சுப்புணி தொட்டிலை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அவன் வேகத்தைக் கண்டு நான் பயந்துவிட்டேன். "அட பாவி! என்னடா செய்யப்போகிறாய்?" என்று எழுந்து அவனைத் தொடர்ந்தேன்.

"ஒன்றும் இல்லையடா; வாடா, குழந்தையைப் பார்க்கலாம்."

நாங்கள் இருவரும் குழந்தையைப் பார்த்தோம். பார்த்துத் திகைத்தோம். ஊரார் கூறிய கணக்குப்படி நான்கு மாசத்துக் குழந்தை இருக்கவேண்டிய தொட்டிலில், இரண்டு 'வயசுக்கு உட்பட்ட ஆண் குழந்தையொன்று தூங்கிக் கொண்டிருந்தது. தவிர, குழந்தைக்கு நளினியின் சாயலோ, கோபாலையரின் சாயலோ இல்லாதது எங்களைப் பின்னும் திகைப்பில் ஆழ்த்தியது.

"உன் கதையைக் கிழித்துக் குப்பையில் போடடா" என்றான் சுப்புணி, என் பக்கம் திரும்பி.

"பொறுடா, அவசரப்படாதே; அது மாத்திரம் உண்மைக்கு மாறாக இருக்குமானல், அதற்குக் குப்பைக்

கூடை கூடப் போதாது. தீக்குச்சிதான் சரியான மருந்து.''

திரும்ப நாற்காலியில் வந்து உட்கார்ந்ததும், நான் சுப்புணியிடம், "ஏன்டா, உனக்கு நளினியிடம் நெருங்கிய பழக்கம் உண்டா ?'' என்று கேட்டேன்.

"அப்படி நெருங்கிய பழக்கம் ஒன்றும் இல்லை. ஏதோ ஒன்றிரண்டு தடவை ஆபீஸ் காரியமாக ராமகிருஷ்ணனைப் பார்க்கப் போயிருந்தபோது, அவளைப் பார்த்திருக்கிறேன்; அவ்வளவுதான். ஆனால் அவள் எல்லோரிடமும் விகற்பமின்றிக் கலகலப்பாகப் பழகுவாள் என்று ராமகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.''

நளினி வந்துவிட்டதால் எங்கள் பேச்சு நின்றது. அவள் கையில் இருந்த 'டிரே'யில் காபிப் பாத்திரங்களுடன் ஒரு நோட்டும் இருந்தது. 'டிரே'யை மேஜையின்மீது வைத்ததும், அவள் அந்த நோட்டை எடுத்து வேறொரு புறமாக வைத்துக்கொண்டாள். காபியைக் கலந்து எங்களுக்குத் தந்துவிட்டு, "உங்கள் சிறுகதைத் தொகுதி ஒன்று புத்தகமாக வந்திருக்கிறதாமே ? அதைக் கொண்டு வரச் சொல்லி அப்பா சொல்லியிருந்தாரே; கொண்டு வந்திருக்கிறீர்களா ?'' என்று கேட்டாள்.

புத்தகத்துக்குள் மடித்துவைத்திருந்த 'வான வில்' கதையை எடுத்துச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு புத்தகத்தை அவள் கையில் கொடுத்தேன். அதை அவள் படித்துக் கொண்டிருக்கையில் நாங்கள் காபி சாப்பிட்டு முடித்தோம்.

நான் வெற்றிலை பாக்குக்காகப் பையைத் தடவினேன். வந்த அவசரத்தில், என்னிடம் எப்பொழுதும் இருக்கும் வஸ்துவை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டேன்.

என் தவிப்பை உணர்ந்துகொண்ட சுப்புணி சொன்னான்: "அப்பனே, இப்பொழுது வெற்றிலை பாக்கையும் குதப்பிக்கொண்டு உட்கார்ந்துவிடாதே. அவர்கள் உன்னிடம் ஏதோ பேசவேண்டுமென்றார்கள்."

"ஏன், வெற்றிலை பாக்கு வேண்டுமா? இதோ கொண்டுவருகிறேன்" என்று எழுந்தாள் நளினி.

நான் அவளைத் தடுப்பதற்கு முன்பே, "வேண்டாம், வேண்டாம்; அவனுக்கு வெறும் வெற்றிலை பாக்கு மாத்திரம் போதாது. பிரம்ம பத்திரமும் வேண்டும். அதையும் கொடுத்துவிட்டீர்களோ, அப்புறம் அவனைப் பேசவைக்க அந்தப் பிரம்மாவாலும் முடியாது" என்றான் சுப்புணி.

எழுந்த நளினி அங்கிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்துகொண்டே, "கோபித்துக் கொள்ளாதீர்கள், மாயாவி அண்ணா; உங்கள் வாயை அடைக்க வெற்றிலை பாக்கு உதவுவதுபோல், உங்கள் ஊரார் வாயை அடைக்க உதவுமானால் நான் ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைக்கவும் தயாராக இருக்கிறேன். ஆனால் உங்களூர்க்காரர்கள் வாயை அடைக்க உதடுகளை ரணசிகிச்சை செய்து ஒன்றாய்ப் பொருத்திவிட்டாலுங்கூடச் சாத்தியமாகாதுபோல் இருக்கிறது" என்றாள்.

புண்ணிலிருந்து கசியும் ரத்தத்தைப்போல், நளினியின் கண்களிலிருந்து கசிந்த கண்ணீரை நான் வருத்தத்துடன் நோக்கினேன். அவள் மேலே சொன்னாள்: "மாயாவி அண்ணா, உங்களை இப்பொழுது இங்கே வரவழைத்திருப்பது அவ்வேலையில் எங்களுக்கு உதவுவதற்காகத்தான்." அவள் தன் பக்கத்தில் இருந்த நோட்டை எடுத்து என்முன் நீட்டி, "இதோ, இதில் ஒரு கதை எழுதியிருக்கிறேன். ஆச்சரியப்படாதீர்கள். நான் எப்பொழுதும் எந்தப் பத்திரிகைக்கும் கதை எழுதியவள் அல்ல. ஆனால்

பசியோடு இருப்பவனுக்கு எதையாவது தின்னவேண்டு மென்று தோன்றுகிறதல்லவா ? அது போல, என் மன வேதனை இதை எழுதச்செய்தது. இது கதை அல்ல; என் வாழ்க்கையில் நடந்த முடிவுறாத சோதனையின் நிகழ்ச்சிக் குறிப்பு. இதை எழுதுவதற்குக்கூடப் போதிய ஊக்கத் தைத் தந்தது உங்கள் பெயர்தான். போன மாசம் உங்கள் அப்பா இங்கே வந்திருந்தார். கிராமத்தில் ஒதுக்கி வைக் கப்பட்டவர்களிலும் கேவலமான நிலையில் இருந்த எங்கள் வீட்டுக்குள் நுழைந்த முதல் மனிதர் அவர்தாம்.

"அப்பா தொடங்கப்போகும் மில்லில் உங்களுக்கு ஒரு கண்ணியமான வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அவர் வந்திருந்தார். பேச்சின் நடுவில் நீங்கள்தாம் 'மாயாவி' என்ற பெயருடன் எழுதி வருபவர் என்பதை அவர் சொன்னார். உடனே என் மனசிலும், 'இந்த ஊர்க்காரர்கள் வாயை அடைக்க உண்மைச் சம்ப வங்களை நான் ஏன் ஒரு கதைபோல எழுதிப் பிரசுரிக்கச் செய்யலாகாது ?' என்ற எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் இதோ, இக்கதையாக உருவாகி யிருக்கிறது.

"இதை நீங்கள் படித்துவிட்டு உங்கள் நடையைப் போல் இருந்ததென்றால், கோபித்துக் கொள்ளாதீர்கள். ஏனென்றால் உங்கள் பெயரை நினைவில் வைத்துக்கொண் டும், பத்திரிகைகளில் வெளிவந்த உங்கள் கதைகளை முன் னால் விரித்து வைத்துக்கொண்டும் எழுதியதால் இதில் உங்கள் நடையே பிரதிபலிக்கலாம்.

"படித்ததும், திருத்தம் ஏதேனும் தேவையிருந்தால் செய்து, ஏதாவது சிறந்த பத்திரிகையொன்றில் பிரசுரிக் கச் செய்வதோடு, அப்பத்திரிகையின் இதழை இக்கிரா மத்தில் ஒவ்வொரு வீட்டாரையும் படிக்கச் செய்வீர்களா னால், ஓர் அபலைப் பெண்ணின்மீது பலவந்தமாகப் போர்க்

கப்பட்ட பழிப் போர்வையைக் கிழித்தெறிந்தவர்கள் ஆவீர்கள்.''—தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கையில் அதன் ஆவியெல்லாம் கெட்டிலின் மூக்கின் வழியாக வெளி வருகிறது அல்லவா? அதுபோன்று நளினியின் கொதித்த நெஞ்சின் ஆவியாக இவ்வார்த்தைகள் வெளி வந்தன.

அவள் கொடுத்த நோட்டை, நான் உடனே திறந்து படித்தேன்.

# இரண்டாம் பாகம்

## அந்தி மயக்கம்

### 1

ஒவ்வொருநாளும் அந்தி மயங்கும் வேளையில் நானும் என் கணவரும் ஊர்ப் பார்க்கிற்கு உலாவச் செல்வோம்.

நகருக்கு வெளியே கச்சேரி மேட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தப் பூந்தோட்டம் மிகவும் அழகாகவும் காற்ளுேட்டம் உள்ளதாகவும் இருந்தது. உயரமான இடத்தில் அமைந்திருந்ததால், ஒரு புறம் ஊரின் முழுத் தோற்றமும், மற்ளுெரு புறம் மேற்கு மலைத் தொடரில் சூரியன் மறையும் காட்சியும் அவ்வேளையில் பார்க்க மனோரம்மியமாக இருக்கும்.

ஆனால் ஒரு நாளேனும் அக்காட்சியை நான் சந்தோஷத்தோடு பார்த்து அநுபவித்ததில்லை. சூரியன் மலைவாயில் விழுந்து வானம் செந்நிறம் காட்டிற்ளுே இல்லையோ, மனம் குழந்தைப் பருவத்து நினைவு ஒன்றிற்குத் தாவி ஓடும். அவ்வளவுதான்; உடனே என் உள்ளத்தில் அந்தி வேளைக்கும் அநுபவத்திற்கும் ஒரு பெரிய போர் தொடங்கிவிடும்.

தினத்தின் பிறப்பிற்கு எப்படி உஷக்காலம் அறிவிப்பாகிறதோ, அதுபோல அதன் மறைவிற்கு அறிகுறியாகத் தோன்றும் சந்தியாகாலம், "வாழ்வில் பகலைப்போலவே இரவிற்கும் சமமான ஸ்தானம் அளித்துத்தான் ஆக வேண்டுமாம். யார் அப்படிச் சொல்வது? அவர்கள் என்னைச் சற்றுப் பார்க்கட்டும். இதோ சூரியன் மறைந்து

கொண்டிருக்கிறான். அவன் விடுத்துச் சென்ற க்ஷண நேரத்துக்கிரணம் நான். இருந்தும் அந்தச் சிறிது நேரமாவது இரவைத் தள்ளி வைத்துவிடுகிறேனா இல்லையா? என்னைப்போலவே மங்கியதானாலும், இருளை விலக்கும் சாதனங்கள் எவ்வளவோ உலகில் இருக்கின்றன. அவைகளின் உதவியைப் பெற்றால், வரப்போகும் இருளைப்பற்றி எவரேனும் கவலைகொள்ள வேண்டுமோ?'' என்று சொல்லும்.

அந்தி வேளை இவ்வாறு கூறி முடித்ததும், குழந்தைப் பருவத்து அந்த அநுபவம் போர் முரசு கொட்டிக் கொண்டு கிளம்பும். "இல்லை, இல்லை. இல்லவே இல்லை. அந்தி வேளையின் வெளிச்சத்தைக் கொண்டு, உலகில் எவரும் இரவைப் பகலாக்கிவிட முடியாது. என்ன இருந்தாலும் இரவு இரவுதான்; பகல் பகல்தான். கைவிளக்கின் ஒளியைக் காட்டி, இது சூரிய ஒளியின் பிரதிபிம்பம் என்று எவரையாவது ஏமாற்றிவிட முடியுமா?'' என்று அது கூக்குரலிடும்.

சிறு பிராயத்து நினைவு கல்லில் செதுக்கப்பட்ட எழுத்துக்களைக் காட்டிலும் ஆழமாக மனசில் செதுக்கப் பட்டுப் போவதாலோ என்னவோ, ஒவ்வொரு நாள் போரிலும் அதுதான் வெற்றியடையும். அவ்வாறு நாள் தோறும் வெற்றியடையும் வண்ணம் அத்தனை பலம் பொருந்திய அந்த நினைவு—

மனித வர்க்கத்திற்குப் பொருந்தும் விதி பிராணி வர்க்கத்துக்குப் பொருந்ாது என்றிருக்குமானால் அதன் சித்தாந்தம் ஒருகால் தவறாக இருக்கலாம். ஆனால், பகுத்தறிவற்ற மிருக ஜாதிகளைவிடப் பகுத்தறிவுடைய மானிடனே உயர்ந்தவன் என்று கருதும் உலகில், அதன் முடிவு எவ்வாறு தவறிவிட முடியும்?

## 2

அந்த அநுபவம் ஏற்பட்டபொழுது எனக்கு ஏழெட்டு வயசு இருக்கும். எங்கள் வீட்டில் அப்பொழுது லக்ஷ்மி என்ற பரம சாதுவான பசு ஒன்று இருந்தது. அதன் வம்சம் எங்கள் குடும்பத்துக்குப் பாரம்பரைச் சொத்து. அதன் மூதாதையான பசுவை வாங்கியதிலிருந்துதான், எங்கள் குடும்பத்திற்குத் தனம் பெருகி வந்தது என்று நாங்கள் எல்லோரும் அதனிடம் ஓர் அலாதி வாத்ஸல்யமும் பெருமதிப்பும் கொண்டிருந்தோம்.

அந்த லக்ஷ்மி ஒரு முறை கன்று ஈன்று, அந்தக் கன்று உடனே செத்துப்போய்விட்டது. முதலில் கன்றைக் குடிக்கவிடாமல் அதனிடம் பால் கறக்க முடியாமல் போனதாலும், மடியில் பால் கட்டிப் பசுவுக்குத் தாங்க முடியாத வேதனையை அளித்ததாலும், அப்பா, செத்த கன்றின் தோலினால் ஓர் உருவம் செய்துவரச் செய்து அதைப் பசுவின்முன் நிறுத்தி வைத்துக்கொண்டு பால் கறந்துவிட முயன்றார். ஆனால் லக்ஷ்மி அந்தத் தோல் கன்றை ஒரு முறை நாக்கால் நக்கிப் பார்த்ததும், அதை ஒரே முட்டாக முட்டித் தள்ளிவிட்டு, கால்களை உதைக்க ஆரம்பித்துவிட்டது.

பிறகு லக்ஷ்மியின் கன்று போலவே இருந்த வேறொரு கன்றை எங்கிருந்தோ கொண்டுவந்து அதைக் குடிக்கவிட முயன்றனர். ஆனால் அம் முயற்சியும் அந்தத் தாய்ப் பசுவிடம் பயன்பெறவில்லை. லக்ஷ்மி அக்கன்றைத் தன் அருகிலே நெருங்க விடவில்லை.

இரண்டொரு நாட்களுக்குப் பிறகு வேறு என்ன என்னவோ முயற்சிகளெல்லாம் செய்தும் பசுவை

ஏமாற்றிப் பால் கறக்க முடியாமற்போகவே, அது தன் கன்றைஇழந்த சோகத்திலும், பால் கட்டி நின்ற வேதனை யிலும் இறந்து போயிற்று.

அந்தி வேளை போதித்த, "இரவை என்னைப்போன்ற மங்கிய வெளிச்சத்தைக் கொண்டு பகலாக்கிக் கொள்ளுங் கள்" என்ற போதனையை என் அநுபவம் ஒப்புக் கொள்ளாத காரணம் இதுதான்.

"ஓர் அறிவற்ற ஜந்துவையே, அதன் கன்றென்று பிறிதொன்றைக் காட்டி ஏமாற்ற முடியவில்லையே! மங்கிய வெளிச்சத்தைக் கொண்டு அதன் துயர இருளைப் போக்கடிக்க முடியவில்லையே! அப்படியிருக்க, அறிவில் உயர்ந்த மனிதன் மாத்திரம் எவ்வாறு கை விளக்கின் ஒளியில் இரவைப் பகலாக்கிவிட முடியும்?" என்ற முடிவு தான் லக்ஷ்மியின் வாழ்க்கை அநுபவத்திலிருந்து என் னிடம் தோன்றும்.

## 3

இவ்வாறு ஒவ்வொரு நாளும், பார்க்கிற்கு வந்ததும் நான் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவது என் கணவருக்கு வியப்பாக இருந்திருக்கும். "ஏன் நளி, இங்கே வந்த வுடன் ஏன் இப்படித் தினமும் மௌனமாகிவிடுகிறாய்? வீட்டில் சதா என் வாயைப் பிடுங்கிக்கொண்டிருக்கும் உனக்கு இங்கே மௌனமாக இருப்பது எப்படிச் சாத்திய மாகிறது?" என்று அவர் சிரித்துக்கொண்டே கேட்பார்.

நான் அன்று வரையில் இந்த வேடிக்கையான மனப் போராட்டத்தை அவருக்குச் சொன்னதில்லை. சொன் னால், அவர் சிரி சிரி யென்று சிரிப்பாரென்றும், கேலி செய்து என்னை அழ வைத்து விடுவாரென்றும் எனக்குத் தெரியும். ஆனால், இன்று..........?

இன்று அவர் ஆரம்பிக்கும்போதே கடுமையாக ஆரம்பித்தார்; "நளி, நாளை முதல் நாம் பார்க்கிற்கு வருவதை அடியோடு நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான்'' என்றார்.

"ஏன்?" என்றேன் நான், ஒன்றும் அறியாதவள் போல.

"நாம் இங்கே வருவது மௌன சாஸ்திரம் கற்றுக் கொள்ள அல்லவே! நளி, கணவன் மனைவியரிடையே ரகசியம் எதுவும் இருக்கலாகாது. அப்படி இருந்தால் அது அவர்கள் வாழ்க்கைப் படகின் உல்லாசப் பயணத்தை மாற்றி நடுக்கடலில் நங்கூரம் போட்டு நிறுத்திவிடும்."

அவர் சொல்லில் என்றும் காணாத கடுப்புத் தொனித்தது. ஆம். எவ்வளவு நாட்களுக்குத்தான் என் ஊமை நாடகத்தைச் சகித்திருப்பார்?

நான் அவர் முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "ஆனால் எவர் மனைவியாவது பிறர் கேலி செய்யும் பைத்தியக்கார எண்ணங்களை மனசில் புதைத்துக்கொண்டு இப்படி மௌனமானால்......?" என்றேன்.

அவர் என் கன்னத்தில் லோசாகத் தட்டி விட்டு, "என் நளினி ஒன்றும் அப்படிப் பைத்தியம் பிடித்தவள், அல்லவே? அவளை உற்சாகமற்றவளாகச் செய்துவிடும் விஷயத்தைக் கேட்டுப் பிறர் நகைப்பார்கள் என்றால் உலகில் ஒவ்வொருவரும் தங்கள் துக்கத்திற்கெல்லாம் நகைத்துத்தான் ஆகவேண்டும்'' என்றார்.

அவர் இப்படிச் சொன்னாரே தவிர, என் மனப் போராட்டத்தைச் சொன்னதும் கடகட வென்று சிரிக்க ஆரம்பித்தார்.

"பார்த்தீர்களா? 'நீங்கள் இப்படிச் சிரிப்பீர்கள்; என்றென்றைக்கும் என்னைக் கேலி செய்ய உங்களுக்கு விஷயம் கிடைத்துவிடும்' என்றுதானே இவ்வளவு நாட்களாக இதை

உங்களிடம் சொல்லாமல் ஒளித்து வந்தேன்?" என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் சொல்லவில்லை. இடையே அதற்குக் குந்தகம் ஏற்பட்டு விட்டது.

என் கணவரின் கேலிச்சிரிப்பின் எதிரொலியாகப் 'பார்க்'கின் வேறொரு பக்கத்திலிருந்து இன்னொரு சிரிப்பு என்னை நோக்கி வந்தது. 'நாங்கள் மெதுவான குரலில் சம்பாஷித்துக் கொண்டிருந்ததை யாரோ ஒட்டுக் கேட்டு விட்டுத்தான் இவ்வாறு சிரித்துக்கொண்டு வருகிறார்கள். சீ! கணவன் மனைவியரின் ரகசியப் பேச்சை ஒளிந்து கேட்ட அந்த மனிதன் எவ்வளவு கேவலமான சுபாவம் உடையவனாயிருப்பான்!' என்று எண்ணியவாறு நான் சிரிப்பு வந்த இடத்தை அருவருப்புடன் நோக்கினேன். ஆனால்—

எனக்கு நேராக ஓடி வந்துகொண்டிருந்த மனிதரைப் பார்த்ததும் இந்த எண்ணம் கணத்தில் மறைந்து போயிற்று. "இதோ இருக்கிறாளடா என் சாவித்திரி; இதோ இருக்கிறாளே. எனக்குத் தெரியும், அவள் என்னை அப்படி ஒரேயடியாகத் தவிக்கவிட்டுப் போக மாட்டாளென்று" என்று கூறியவாறு ஒருபெரியவர் ஓடி வந்தார். அவரோடு அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஒரு வேலைக்காரனும் வந்துகொண்டிருந்தான். "இது நம்ம சாவித்திரியம்மா இல்லீங்க யசமான். வாங்க; நாம் வீட்டுக்குப் போகலாம்" என்று அவரை அழைத்துச் சென்றுவிட முயன்றுகொண்டிருந்தான் அவன்.

அந்தப் பெரியவர் அவனைத் திமிறிக்கொண்டு ஒரு பாய்ச்சலில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துவிட்டார். "சாவித்திரி, என்னைத் தவிக்கவிட்டு ஏனம்மா இப்படி ஒளிந்து கொண்டிருக்கிறாய்?" என்று வாஞ்சை தோன்ற அவர் என் முகத்தை நிமிர்த்த ஆரம்பித்ததும், நான்

அருகில் இருந்த என் கணவரைப் பயத்துடன் கட்டிக் கொண்டேன்.

பெரியவர் ஏமாற்றத்துடன் என் கணவரின் பக்கம் திரும்பினர். "அடேய்? நம் ராமகிருஷ்ணன் இல்லையோடா? ஆமாம், அவன்தான். அப்பா ராமகிருஷ்ணு, நீ நூறு வயசு நன்ருயிரு. எப்படியோ என் சாவித்திரியை யமன் வாயிலிருந்து கூட்டி வந்துவிட்டாயே. அடே, இனி என் பெண்ணை என்னிடம் ஒப்படைத்து விடு" என்று அவர் ஏதேதோ சம்பந்தமற்ற பேச்சாகப் பேசிக்கொண்டே யிருந்தார்.

எனக்கு நொடியில் எல்லாம் விளங்கிவிட்டது. என் கணவர் வேலையாக இருந்த கோபால் மில்லின் சொந்தக் காரர் அந்தப் பெரியவர். பாவம்! மிகவும் நல்லவரென்று பெயரெடுத்திருந்த அவரைச் சமீப காலத்தில் துயர வாழ்வு பீடித்திருந்தது. மனைவி, மாப் பிள்ளை, பெண் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராய் அவ ரைத் தனியே தவிக்கவிட்டு, இறந்துபோய்விட்டனர். கடைசியாகத் தம் உயிரையே நிலை நாட்டியிருந்த பெண் சாவித்திரி சென்ற மாதத்தில் பிரசவக் கோளாற்றிற்குப் பலியானபோது அவருக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டு விட்டது.

என் கணவர் முன்பு ஒரு நாள் அந்தச் சாவித்திரியை முதல் தடவையாக எங்கேயோ பார்த்துவிட்டு வந்து என் னிடம், "நளி, உலகத்தில் இரட்டையர்கள் ஒரே தாயின் ஒரே பிரசவத்தில்தான் பிறப்பதுண்டு என்று கேள்விப்பட் டிருக்கிறேன். ஆனல், வெவ்வேறு தாய்மாக்கு ஒரே ரூபமுடைய குழந்தைகள் பிறந்திருப்பதை நான் இன்று தான் கண்டேன். உனக்கும் எங்கள் மில் முதலாளி கோபாலையரின் பெண் சாவித்திரிக்கும் வித்தியாசம் கண்டு

பிடிப்பது, உங்களைப் படைத்தானே, அந்தப் பிரம்ம தேவனுல்கூட முடியாது'' என்றார்.

நான் சாவித்திரியைப் பார்த்ததில்லை. எனினும், என் கணவரின் அன்றைக் கூற்றிலிருந்து சித்தப்பிரமை அடைந்திருக்கும் இந்தப் பெரியவர் என்னைத் தம் மகளென்று தீர்மானித்து ஓடிவந்து நிற்பது தவறல்ல என்பதை உணர்ந்துகொள்ள நேரமாகவில்லை.

அன்று அவரைச் சமாதானம் செய்து அனுப்புவதற்குள் எங்களுக்குப் போதும், போதும் என்று ஆகிவிட்டது.

கிழவரின் தலை மறைந்ததும், "பார்த்தாயா நளி? இயற்கை ஒருபோதும் தவறான உண்மையை உணர்த்தாது. எங்கேயோ சில சந்தர்ப்பங்களில் அதன் நியதி ஒத்து வரவில்லை என்பதனுல், அப் போதனை முழுவதும் ஆதாரமற்றது என்று கூறிவிடுவது தவறாகும். சற்று முன் உன் லக்ஷ்மியின் அநுபவத்தை ஒப்பிட்டு அந்தியின் கூற்றைக் கேலி செய்தாயே! இப்பொழுது, இதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார் என் பதி.

"நன்றாயிருக்கிறதே நீங்கள் விஷயங்களை ஒப்பிட்டு அளவிடும் தோரணை! பெண்ணை இழந்து புத்தி பேதலித்திருக்கும் ஒரு மனிதர், அவளைப் போன்றிருக்கும் என்னைக் கண்டு தம் மகள் என்று புலம்பினதால், அந்தி வேளையின் வாக்குப் பலித்ததாகிவிட்டதா?''

"ஆமாம் நளி; நீ மாத்திரம் அவருடன் சில நாட்கள் இருந்து, சாவித்திரியைப்போலவே நடந்து வந்தாயானுல் நிச்சயமாக அவர் சித்தம் தெளிவடைந்துவிடும்.''

நாங்கள் வேடிக்கையாகத்தான் இவ்வாறு தர்க்கித்துக் கொண்டு வீடு திரும்பினோம்.

இரவு சாப்பாடு ஆனதும், மில் முதலாளி கோபாலையரின் குடும்ப டாக்டர் என் கணவரைத் தேடி வந்தார்.

"ராமகிருஷ்ணன், உங்கள் கோபாலையரின் விஷயமாக உங்களைக் கண்டு போக வந்தேன்" என்று அவர் ஆரம்பித்ததும், மாலையில் கணவர் சொல்லிய சொல்லுக்கு என் மனம் தாவிச் சென்றது.

ஆமாம்! என் கணவர் விளையாட்டாகக் கூறிய தீர்மானத்துடனே டாக்டரும் வந்திருந்தார். எல்லோருக்கும் நல்லவராக இருந்த அந்தப் பெரியவரின் மனப்பிராந்தியைத் தெளிய வைக்கும் வழி என் கணவரின் கையில்தான் இருக்கிறதென்றும், அவர் மனசு வைத்து என்னைச் சில காலம் கோபாலையருடன் வசிக்க அநுமதித்தால், அவருடைய பைத்தியம் தெளிவடைந்து விடுமென்று தாம் உறுதி கூறுவதாகவும் அந்த டாக்டர் சொன்னார்.

"என் மனைவியிடம் ஆலோசித்துக்கொண்டு காலையில் பதில் சொல்லுகிறேன்" என்று என் கணவர் அவரிடம் சொல்லி அனுப்பினார்.

டாக்டர் போனதும், நான் ரேழிக்கு வந்தேன். "நல்ல வேளை! எங்கே அவசரப்பட்டுக்கொண்டு 'ஆகட்டும்' என்று தலையசைத்துவிடுகிறீர்களோ என்று பயந்துகொண்டிருந்தேன். சீ! முன்பின் தெரியாத ஓர் அந்நியர் - அதிலும், பைத்தியம்பிடித்த ஒருவருடன் தனியாய் வசிப்பது.- அதெல்லாம் என்னால் ஒன்றும் முடியாது. தவிர, அந்தப் பரீக்ஷை வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எனக்குத் துளிகூட இல்லை" என்றேன் நான்.

என் கணவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு ஏதோ தீர்மானத்துக்கு வந்தவர் போலச் சொன்னார்: "நளி, உன் மனசுக்கு விரோதமாக நான் எதையும் செய்யச் சொல்லத் தயாராயில்லை; இருந்தாலும், தயாளமும் நற்குணங்களும் நிரம்பிய ஒரு பெரியவரின் வாழ்க்கை அலங்கோலமடைந்து கிடக்கையில், அதைச் சீர்திருத்த

உதவுவதற்கு நாம் பின்வாங்குவது நன்றியுடைய செய்கை அல்ல. அவருடைய மில்லில் எனக்கு வேலை கிடைத்திருக்கிறது; அவர் எனக்கு முதலாளி; நாளைக்கு வேறு எவ்விதமாக வாவது புத்தி தெளிந்து, நான் அவருக்கு உதவ மறுத்து விட்டதை அறிந்தால், என்னை வேலையை விட்டு விலக்கினாலும் விலக்கிவிடுவார் என்றெல்லாம் எண்ணி, நீ இக்காரியத்தில் ஈடுபடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதே நிலையில் என்போன்ற ஒரு வாலிபர், அல்லது நடுத்தர வயசுடைய ஒரு மனிதர் இருந்தாலுங்கூட, உன்னை அங்கேபோய் வசிக்கும்படி நான் கேட்கமாட்டேன். ஆனால், உன் தந்தையிலும் வயசானவர்; அவரைப் பழைய நிலையை அடையச் செய்தால், நமக்கு மாத்திரம் அல்ல, எல்லோருக்குமே கை கொடுத்து ஆதரிக்கக் கூடியவர் என்ற வகையில் அவர் இருப்பதாலேயே உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். நளி, சற்று ஆலோசித்துப் பார். இந்தக் கோபாலையரின் நிலையில் உன் அப்பாவோ, என் அப்பாவோ இருந்திருந்தால், அவர் பைத்தியத்தை மாற்ற நீ சிறிதாவது தயங்குவாயா ?''

கணவரின் கடைசிச் சொல்லைக் கேட்டபோது, எனக்குப் பொட்டில் அறைபட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. ஆம்! என் தந்தையும் கடைசிக்காலத்தில் பைத்தியம் பிடித்துத்தான் இறந்துபோனார். அவர் பைத்தியத்தை மாற்ற எங்கள்கையில் மருந்தில்லாது போயிற்று. அரண்மனைபோன்ற வீடு வாசல்களையும், அமோகமான சொத்துக்களையும், வியாபாரத்தில் பறிகொடுத்துப் புத்தி பேதலித்துப்போன அப்பாவின் சித்தத்தைத் தெளிய வைக்க, அபலைகளாய் நின்ற என் கையிலும் அம்மா கையிலும் அப்பொழுது என்ன இருந்தது? கடைசியில் அவர் பைத்தியமாகவே மறித்துப் போனார். அம்மாவும், என்னை இவர்கையில் ஒப்படைத்து விட்டு, அவரைப் பின்பற்றி

னாள். அன்று முதல், என்னைக் கண்கலங்க விடாது வைத்துக்கொண்டிருக்கும் பதி, எப்பொழுதாவது இழிவையோ அழிவையோ தரும் செய்கையில் என்னை ஈடுபடுத்த மனம் கொள்ளுவாரா? ஆகவே, அந்தக் கிழவருக்காக இல்லாவிட்டாலும், என் கணவருக்காகவாவது நான் அவருடைய இச்சையைப் பூர்த்தி செய்வதுதான் கடமையாகும் என்று தீர்மானித்தவளாய், மறுநாள் கோபாலையரின் பெண் சாவித்திரியாக அவர் மனையேறினேன்.

## 4

விதி வேடிக்கையாக ஆரம்பித்து வைக்கும் காரியங்கள் சில சமயங்களில் எவ்வளவு விபரீதமாகத் திரும்பி விடுகின்றன! சந்தியா காலத்தின் எந்தக் கூற்றை நான் 'அந்தி மயக்கம்' என்று காரியமற்றதாய் நிச்சயித்திருந்தேனே, அந்த அந்தி மயக்கமாக நானே உருவெடுத்துக் கோபாலையரின் சித்தப் பிரமையை ஒரே மாசத்தில் தெளிவடையச் செய்துவிட்டேன்.

அந்த ஒரு மாசத்தில் ஒரு நாளேனும் நான் கோபாலையரை விட்டு அப்புறம் இப்புறம் போகவில்லை. சாப்பாடு, படுக்கை முதலிய எல்லாம் எனக்கு அங்கேதான். டாக்டர் கற்பித்திருந்தபடி அவரை 'அப்பா, அப்பா' என்று அழைத்துக்கொண்டு என்னைமுழுவதும் சாவித்திரியாகவே மாற்றிக்கொண்டேன். நான் ஆடுவது வெறும் நாடகம் என்பதை என் மனசு உணராமல் இல்லை; எனினும் அதே சமயம் அது அவ்வாழ்வில் ஓர் இன்பத்தைக் கண்டது. இழந்த தந்தையின் அன்பை நான் மறுபடி பெற்று விட்டது போன்று பூரித்து நின்றது.

'அப்பா' என்று நான் கோபாலையரை அழைக்குந்தோறும், என் அப்பாவே முன்னால் நிற்பது போலத்

தோன்றும். அவர் 'சாவித்திரி' என்று என்னை அருகில் உட்காரவைத்து முதுகைத் தடவிக்கொடுத்தால், நான் சாவித்திரியாகவே ஆகிவிட்டது போன்ற உணர்ச்சிதான் என்னுள் எழுந்து நிற்கும்.

என் கணவர், பாவம், சிவனே என்று ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு அந்த ஒரு மாசத்தையும் கழித்தார். இடையே ஒன்றிரண்டு தடவைகள் அவர் இங்கே வந்திருந்தார். தம் முயற்சி வெற்றியடைந்து வருகிறது என்பதை எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டு அச்சமயம் திரும்பச் சென்றுரேயன்றி பாசம் எங்கள் இருவரையும் எவ்வாறு பிணைத்து வருகிறது என்பதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை.

கோபாலையரின் பைத்தியம் முழுவதும் தெளிவடைந்தது. ஆனால் அந்தப் பைத்தியம் என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டது. 'அவரை விட்டுப் போகவேண்டுமே!' என்று எண்ணினால், என் மனசை எங்கிருந்தோ துக்கம் வந்து அடைத்துக்கொள்ளும்.

அப்பாவின் - ஆம்; அவரை என் அப்பாவாகவே மனசு தீர்மானித்துவிட்டபிறகு, பெயரைக் குறித்து எழுதுவது என்னவோபோல் இருக்கிறது—அப்பாவின் பைத்தியந்தான் தெளிந்தது. ஆனால் அவர் உடல்நிலை இன்னும் சரியாகவில்லை. அன்று அவரைப் பார்க்க வந்திருந்த டாக்டர், "நளினியம்மா, பெற்ற பெண் கூட இத்தனை கருணையுடனும் கருத்துடனும் தகப்பனுக்குச் சேவை செய்ய மாட்டாள். அப்படி ஒருமனத்துடன் உழைத்து எங்கள் கோபாலையரின் மனசைச் சரிசெய்து விட்டீர்கள். அதுபோல, இன்னும் சிறிதுகாலம் தங்கி அவர் உடம்பையும் பழைய நிலைக்குக் கொண்டுவந்து விட்டீர்களானல், எனக்கு வெகுகாலம் வரையில் அவரை வைத்திய முறையில் பார்க்க

வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. உங்கள் கணவரிடம் நானே வேண்டுமானாலும் சொல்லுகிறேன். இன்னும் ஒன்றிரண்டு மாசங்கள் பிறந்த வீட்டுச் சுகத்தை அநுபவித்துக்கொண்டு இங்கு இருங்கள்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

அந்த டாக்டரின் நியதிப்படி, நான் அப்பாவுடன் தினமும் மாலையில் பார்க்குக்கு உலாவப் போவேன். ஆனால் அந்திப் பொழுதாகும் வரையில் அங்கே தங்கியிருக்கமாட்டேன். 'அது இப்பொழுது என்னைப் பார்த்து நகைக்குமே!' என்று வெயில் மறையு முன்பே அப்பாவை அழைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி விடுவேன். அவர் மனசில் எப்பொழுதும் உல்லாசம் நிறைந்திருக்க வேண்டுமென்று அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்துக்கொண்டு பல முறை சினிமாவுக்குக்கூடச் சென்றேன்

அப்பாவின் உடம்பு தேற ஆரம்பித்து விட்டது. அவர் இப்பொழுது காலையில் சிறிது நேரம் மில்லுக்குக் கூடப்போய் வந்துகொண்டிருந்தார். அவர் தேறிவிட்டார்; ஆனால் நான் தேறுவதற்கு?

என் கணவர் இப்பொழுது தினமும் மாலையில் என்னைப் பார்த்துவிட்டுப் போக வந்து கொண்டிருந்தார். ஆனால் ஒரு முறையேனும், ''இனி நீ வீட்டுக்கு வந்து விடலாமே'' என்று வாய் திறந்து சொல்லவில்லை.

வேறு என்ன என்னவோ விஷயங்களையெல்லாம், என்னைத் தனியே கூப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்தார். மில்லில் அவர் மானேஜர் ஆக்கப்பட்டதையும், அவர் வரும்படி முன்னைக்கு இப்பொழுது பல மடங்கு வளர்ந்து விட்டதையும், ஹோட்டலில் அவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கக்கூடாது என்று அப்பா ஒரு சமையற்காரனை ஏற்பாடு செய்து அனுப்பியிருந்ததையும், இவை போன்ற

இன்னும் எத்தனையோ சமாசாரங்களையும் சொன்னார். ஆனால் சொல்லவேண்டிய முக்கிய சமாசாரம் ஏன் அவரிடமிருந்து வரவில்லை?

ஒரு வேளை அப்பா அளித்திருந்த இந்தச் சலுகைகளுக்குப் பிரதியாக நான் இங்கேயே இருக்கட்டும் என்று தீர்மானித்து விட்டாரோ என்றுகூட நான் சில சமயம் நினைத்துவிட்டு உடனே என் பேதைமையை எண்ணிச் சிரித்துக் கொள்வேன்.

## 5

இந்நிலையில் ஒரு நாள் மாலையில் நானும் அப்பாவும் வழக்கம்போலப் பார்க்குக்குப் போயிருந்தோம். உலக விஷயங்களைப் பற்றி வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் பேசிக்கொண்டிருக்கும்போது அந்தி நெருங்கி வருவதைக் கண்டு நான் வீட்டுக்குப் புறப்பட எழுந்தேன்.

''எழுந்திருங்கள் அப்பா, வீட்டிற்குப் போகலாம்; நேரமாகி விட்டது'' என்றேன் நான்.

''உட்கார் சாவித்திரி. இன்னும் கொஞ்ச நேரம் சென்று புறப்படலாம். உன்னிடம் ஒரு சமாசாரம் பேச வேண்டும்'' என்றார் அவர்.

''சாவித்திரியா? அப்பா, இன்னும் எத்தனை நாளைக்குத் தான் என்னைச் சாவித்திரி என்றே அழைத்துவரப் போகின்றீர்கள்? நாடகம் முடிந்ததும், ராஜபார்ட் வேஷக்காரன் தன் பகட்டான ஆடைகளையெல்லாம் கழற்றிவிட வேண்டும்; தெரியுமோ இல்லையோ? நானும் என் போலி உடைமைகளைக் கழற்றவேண்டிய காலம் வந்து விட்டது. ஆகவே என்னை இனி நளினி என்றே அழையுங்கள். அதுதான் எனக்கு இடப்பட்ட பெயர்'' என்றேன் நான், மேற்கே செக்கச் செவேலென்று வர்ணம் பூசிக்

கொண்டிருந்த அடிவானத்தை வெட்கத்துடன் பார்த்துக் கொண்டே.

ஆனால் அப்பா இந்தப் பேச்சினால் சிறிதும் அதிர்ச்சி யுறாதவர் போன்று சிரித்துக்கொண்டு சொன்னார்: "நளினி என்ற பெயர் உனக்கு இடப்பட்டதாக இருக்கலாம். ஆனால் எப்பொழுது சாவித்திரியாக வந்து என்னைப் புனர் ஜன்மம் அடையச் செய்தாயோ, அப்பொழுதே நீயும் புனர்ஜன்மம் அடைந்து விட்டாய். சாவித்திரி, ராஜ பார்ட் வேஷக்காரன்தான் தன் அங்கம் முடிவுற்றதும் பகட்டான ஆடைகளைக் கழற்றிவிடுவான். ராஜாக்கள் அவை களை எப்பொழுதும் கழற்றுவதே இல்லை."

"நீங்கள் என்னை வெறுமனே உயர்த்தி வைக்கிறீர் கள். நான் செய்த சிறிய சேவைக்காக ஏற்கனவே என் கணவரை உயர்த்தி வைத்துவிட்டீர்கள். அதுவே எனக்கு அதிகம். உங்களை 'அப்பா' என்று அழைக்க நான் பெரிய புண்ணியத்தையே செய்திருக்கவேண்டும். இருந்தாலும் நான் 'அப்பா' என்று உங்களிடம் உரிமை கொண்டாடி னாலும், நீங்கள் 'சாவித்திரி' என்று பாசத்தை என்மீது வர்ஷித்தாலும், உலகம் என்னை 'ராமகிருஷ்ணனின் மனைவி', 'சங்கரையரின் மகள்' என்றுதான் சொல்லும். அப்பா, அதோ அந்த வான முகட்டைப் பாருங்கள்; சூரியனின் மறைகிரணமான சந்தியாகாலம், இரவைப் பகலாக்கிவிட்ட தாகப் பெருமைப் பட்டுக் கொள்ளுகிறது. ஆனால் அதன் ஆட்சியெல்லாம் எவ்வளவு நேரத்திற்கு? இன்னும் சற்று நேரம் போனால், இருள் இந்த அந்தி மயக்கத்தை விழுங்கி விடப் போகிறது."

"அப்படியல்ல சாவித்திரி; நடுக்கடலில் வழிதவறி விட்ட கப்பலுக்குத் திசைகாட்டி யந்திரம் கரையைக் காட்டிவிடுவதில்லை. எனினும் புத்தியுள்ள மாலுமி, அதை

வைத்துத் திசையை நிர்ணயித்துக்கொண்டு கப்பலைச் செல்ல வேண்டிய மார்க்கத்தில் செலுத்தி விடுகிறான். அதுபோல் இந்த அந்தி நேரம், நிமிஷத்தில் மறைந்து போனாலும், ‘இருளைப் போக்கடிக்கும் சாதனங்கள் எத்தனையோ இருக்கின்றன’ என்பதை அது நமக்கு எடுத்துக் காட்டிவிடுகிறது. அப்படித்தான் என் மன இருளைப் போக்கும் ஒளியாக நீ எனக்குக் கிடைத்தாய். இனி இந்த ஒளியை ஒருபோதும் என்னிடமிருந்து பிரியவிட மாட்டேன்.

“சாவித்திரி, எந்தப் பேச்சைத் தொடங்கவேண்டுமென்று, உன்னை இப்பொழுது நிறுத்தி வைத்தேனோ, அந்தப் பேச்சை நீயே ஆரம்பித்து வைத்துவிட்டாய். ஆம்; ராமகிருஷ்ணனையும் என் வீட்டோடு வந்து விடும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். அதற்குமுன் உன் மன நிலையையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் இப்பொழுது உன்னை நிறுத்தி வைத்தேன்.”

அப்பாவிடமிருந்து வந்த இந்த முடிவு என்னை எங்கேயோ மேருவின் உச்சியில் ஏற்றிவைத்தது. நான் நிறைந்த களிப்புடன் வான முகட்டை நோக்கினேன். ஆனால் அங்கே சற்று முன்னிருந்த அந்த வெளிச்சங்கூட இல்லை; அதை ஒரே இருள் மூடி இருந்தது.

## 6

அன்று இரவு வழக்கம்போல என் கணவர் வந்தார். மாலையில் அப்பா தெரிவித்த விஷயத்தை நானே அவரிடம் சொல்லிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்ததற்கும் அவர் வந்து என்னைத் தனியாக வெளி வராந்தாவுக்கு அழைத்துக்கொண்டு வந்ததற்கும் எவ்வளவு பொருத்தமாக இருந்தது! அப்பா உள்ளே ஊஞ்சலில்

படுத்துப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். நாங்கள் வராந்தாவின் ஓரா தியண்டை வந்து நின்றோம்.

பௌர்ணமிக்குப் பிந்திய இரவு ஆதலால், சந்திரன் அப்பொழுதுதான் கிளம்பிக்கொண்டிருந்தான். அவன் உதயகிரணம் எங்கள்மீது விழுந்ததும், நான் என் பதியின் முகத்தை நோக்கினேன். அதில் என்றும் இல்லாத ஒரு கலவரத்தைக் கண்டதும் எனக்கு என்னவோபோல் இருந்தது.

அவர் அவ்வளவு அவசரமாக என்னை வெளியே அழைத்து வந்தாரேயன்றி, வெகு நேரமாகியும் ஒரு வார்த்தைகூடப் பேசாது கீழ்வானில் கிளம்பிக்கொண்டிருந்த மதியை நோக்கிக்கொண்டிருந்தார். இடையிடையே நீண்ட பெருமூச்சு அவரிடமிருந்து எழுந்து வீசிற்று.

என்னால் அந்த நிலையைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. எவ்வளவு உற்சாகத்துடன் அவர் வருகையை அப்பொழுது எதிர்நோக்கி யிருந்தேனே, அவ்வளவு உற்சாகமும் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கிற்று.

''ஏன் இப்படிப் பெருமூச்சு விடுகிறீர்கள்? வந்ததும் வராததுமாய், ஏதோ அவசர சமாசாரம் இருப்பதுபோல், என்னை இங்கே கூட்டிவந்து, இப்படி மௌனமாகப் பெருமூச்சு விடுவானேன்?'' என்று நான் அவருடைய தோளைப் பற்றிக்கொண்டே கேட்டேன்.

அவர் என் முகத்தைத் தமக்கு நேராகத் திருப்பி வைத்துக்கொண்டு, ''அவசரமான சமாசாரந்தான். ஆனால் அதில் எவ்வளவு அவசரம் இருக்கிறதோ, அவ்வளவு அசங்கியமும் இருப்பதாலே, உன்னிடம் எப்படிச் சொல்வது என்று தயங்குகிறேன். போகட்டும்; அதைக்கேட்டுத்தான் நீ என்ன செய்யப்போகிறாய்? எப்படியாவது அந்த அசங்

யத்தை நாம் துடைத்துக்கொண்டால் போதும். நளி, நீ இப்பொழுதே என்னுடன் வீட்டிற்கு வந்துவிடவேண்டும். இனி எப்பொழுதும் இவ் வீட்டுக்கு வரலாகாது'' என்றார்.

''என்ன!'' என்று ஏங்கினேன் நான்.

''என்ன, ஏன் என்பதையெல்லாம் விளக்கிக்கொண்டிருக்கும் தருணம் கடந்துவிட்டது. நளி, என்னை இப்பொழுது ஒன்றும் கேட்காதே. பேசாமல் புறப்படு.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால்.......''

''நான் சொல்வது, பார்ப்பது எல்லாவற்றையும் வீட்டுக்கு வந்து கேள்; சொல்கிறேன். நீ இப்பொழுது உடனே என்னுடன் கிளம்பு.''

அவருடைய இந்தத் திடீர்மாற்றம் எனக்கு ஒன்றுமே புலப்படவில்லை. நான் தயங்கி மேலே பேசாது நின்றதைக் கண்ட அவர் சொன்னார்: ''நளி, கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் குஞ்சுக்குத் தன் சிறிய உலகம் அடக்கமான இடத்தில் அமைதியாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், அந்த உலகம் எவ்வளவு கூர்கூரான முட்களை உடையது, அது ஒவ்வொன்றும் ஒவ்வொருவரையும் எப்படிக் கருணையின்றிக் குத்திக் கிழிக்கின்றது என்பதை அந்தக் குஞ்சுக்கு இரை தேடிக்கொண்டு வரும் தாய்ப்பறவைதான் அறியும். உன் தயக்கத்தைப் பார்த்தால், நான் விஷயத்தைச் சொன்னாலன்றி, நீ புறப்படமாட்டாய் என்று தெரிகிறது. சரி; அதையும் கேட்டுக்கொள். உன்னையும் கோபாலையரையும் சேர்த்து ஊர் கட்டிய கதைகளை இன்று நேற்றல்ல, கடந்த ஒரு மாசமாகக் கேட்டுக் கேட்டு என் காதுகள் புண்ணாய்விட்டன.''

கணவர் கூறிய செய்தி எனக்குப் புதிதல்ல. சில நாட்களாக இந்தப் பழி என் செவிக்குக்கூட அடிக்கடி வந்துகொண்டிருந்தது. ஆனால் கூரான அம்பாயிருந்தாலும்,

அது எத்தனை வேகத்துடன் வில்லிலிருந்து பாய்ந்து வந்தாலும், போர்வீரனின் மார்புக் கவசத்தைத் துளைத்துவிட முடியுமா என்ன? அதுபோலக் களங்கமற்ற கவசத்தை அணிந்துகொண்டிருந்த நான் எதற்காக இந்த ஊர் வம்புக்குப் பயப்பட வேண்டும் என்று இருந்தேன். ஆயினும், இன்று என் கணவரே அதில் நம்பிக்கை கொண்டவர் போல ஆவேசத்தோடு பேசியதைக் கேட்டபொழுது, என் ஆத்திரம் பெருகிற்று. "அப்படியானால், திமிர் கொண்ட உலகம் ஒரு பழிப்போர்வையைக் கொடுத்து, 'இதனால் உங்கள் மனைவியை இழுத்து மூடுங்கள்' என்றவுடனே, நீங்களும் அதைக் கையில் எடுத்துக்கொண்டு...." நான் என்னை அறியாமலே விசித்துவிட்டேன்.

அவர் என்னை அணைத்துத் தம் மார்பின்மீது சாய்த்துக் கொண்டார். "நளி, நான் அதையெல்லாம் நம்பி விடும்படி அத்தனை அறிவீனனாகப் போய்விடவில்லை. ஆனால், எத்தனை திமிர் கொண்டதானாலும், அந்த உலகின் மடியில்தான் நம் வாழ்நாள் கழியவேண்டுமென்று இருக்கையில் அந்தப் பழியைப் போக்கிக்கொள்ள வழி தேடாதிருக்க முடியவில்லையே!"

நான் அவரை இடைமறித்தேன். "இல்லை; நாம் அந்தப் பழிகார உலகத்தின் முகத்திலே விழிக்கப்போகிறதில்லை. நம் உலகம் இங்கே, இந்த வீட்டிற்குள்ளேதான் இருக்கிறது. நாம் இதை விட்டு வெளியே எங்கேயும் போக வேண்டாம். அப்பாகூட இன்று உங்களை இங்கே வந்து இருந்து விடும்படி கேட்க இருக்கிறார்."

இந்தப் பதிலினால் என் கணவரின் மனசு சமாதானம் அடைந்துவிடும் என்று நினைத்தேன். ஆனால் அது மிகவும் புண்பட்டிருந்தது என்பதை அப்பொழுது நான் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவர் சொன்னார்: "எந்த மனி

தனும் வீட்டிற்குள்ளேயே தன் வாழ்நாளைக் கழித்துவிட முடியாது. என்றைக்காவது ஒரு நாள் அவன் அதை விட்டு வெளியேறியே ஆகவேண்டும். பறவை எப்பொழுது வெளியே வரும் என்று மரத்தின் மறைவில் காத்திருக்கும் பருந்தைப் போல, உலகம் தன் இரை கூட்டைவிட்டு வெளியேறியதும் அதை ஒரேயடியாகக் குத்திக் கிழித்து விடும். நளி, சென்ற ஒரு வாரமாய் இரவு பகலாக எவ்வளவோ ஆலோசித்துவிட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்.''

''ஆனால் உங்களுடைய முடிவு, நான் கஷ்டப்பட்டுக் காப்பாற்றிய ஓர் உயிரை மறுபடியும் சவக்குழியில் தள்ளி விடுமே!''

''உண்மைதான் நளி. ஆனால், தாயின் தேகநிலை சரியாக இருக்குமட்டுந்தான் அவள் குழந்தையைக் கண்ணும் கருத்துமாகப் போஷிக்க முடிகிறது. எப்பொழுது அவள் நோய்வாய்ப் படுகிறாளோ அப்பொழுது தன் உடல் நலத்தை எளிதாக உதறிவிட்டுக் குழந்தையின் சுச்ரூஷைக்கு வர முடிவதில்லை. நான் மறுபடியும் சொல்கிறேன். உனக்கு இந்தப் பழியைத் தாங்கிக் கொண்டிருக்கும் வல்லமை உண்டானால் இரு; ஆனால் என்னால் இதை இனி ஒரு கணமும் தாங்க முடியாது. நீ என்னுடன் வரவில்லையானால்....?''

''நான் வரமாட்டேன். மாறாக நீங்கள்தாம் இங்கே வரப்போகிறீர்கள். அப்பாவின் வாத்சல்யம் ததும்பும் மனப்பூர்வமான வேண்டுகோளை ஒரு முறை கேட்டீர்களானால், எந்தப் பழியையும் தாங்கிக் கொள்ளும் வலிமை உங்களுக்கு ஏற்பட்டுவிடும்.''

நான் எப்படியும் அவர் மனசை அப்பொழுதே கரைத்து விடுவதாக இருந்தேன். ஆனால் அப்பா அச்சம

யம் வாசலண்டை வந்து நின்றதைப் பார்த்ததும், மேலே பேசாது நிறுத்திக் கொண்டேன். இனி அவரே இவரிடம் தம் கோரிக்கையை வெளியிடட்டுமே என்று இருந்தேன். ஆனல்—

இவர் அப்பாவைக் கண்டதுமே, படுவேகமாக வீட்டை நோக்கிக் கிளம்ப ஆரம்பித்தார்.

"எங்கே போகிறீர்கள்? அப்பா உங்களிடம் ஏதோ பேச வேண்டுமாம்" என்று நான் கூறினேன்.

"ஆமாம் ராமகிருஷ்ணு; உள்ளே வா ; சாவகாசமாய் உட்கார்ந்து பேச வேண்டிய விஷயம் அது" என்று அப்பா சொன்னர்.

அவர் எங்களைப் பாராமலே, "நாளை மாலையில் வருகிறேன். இப்பொழுது எனக்குக் கொஞ்சம் அவசரமான வேலை இருக்கிறது" என்று கூறிவிட்டு நடந்தார்.

'போகட்டும். போய், எல்லாவற்றையும் ஆற அமர ஆலோசித்து மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டு வரட்டும். அப்புறந்தான் அவருக்குத் தாம் எவ்வளவு பெரிய பிழை செய்ய இருந்தார் என்பது புலப்படும்' என்று இருந்துவிட்டேன் நான்.

அப்பாவும் அவருடைய பதிலைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு பேசாதிருந்து விட்டார். ஆனல்—

மறுநாள் போயிற்று; மற்ருெரு நாளும் சென்றது. மூன்ரும் நாள் பகலில் நானே அவரைக் கூட்டி வரும்படி மில்லுக்கு ஆள் அனுப்பினேன். போனவன் திரும்பி வந்து அவர் மில்லுக்கு வரவில்லை என்றும், வீட்டிலும் இல்லை என்றும், எங்கேயோ வெளியூர்ப் பயணம் போகிறவர் போலப் பெட்டி படுக்கையுடன் காலையில் வீட்டை விட்டுச் சென்ருரென்று சமையற்காரன் கூறுவதாகவும். எங்கே போயிருக்கிருர் என்பதைப்பற்றி அவ

னுக்கு ஒன்றும் தெரியாதென்றும் ஒரு பரபரப்பான செய்தியைச் சொன்னான்.

அதைக் கேட்டதும் என் மனம் விபரீதமாகக் கலங்கிற்று. அன்றிரவு, "என்னால் இந்தப் பழியைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. நீ இப்பொழுதே என்னுடன் வரவில்லையானால்....?" என்று அரைகுறையாய் அவர் நிறுத்திய வாக்கியம் என் முன் வந்து கூத்தாடிற்று.

வரவில்லையானால்........?

"வரவில்லையானால் முடிவு இதுதான். அது இன்னுமா உனக்குத் தெரியவில்லை?" என்று யாரோ என்னிடம் கேட்பது போலத் தோன்றிற்று.

அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னதும் அவர் உணர்விழந்தவர்போல ஆகிவிட்டார். "நீ அன்றைக்கே ஏன் என்னிடம் சொல்லவில்லை? இப்பொழுது அநியாயமாக மோசம்போய் விட்டாயே!" என்று புலம்பினார் அவர். எனினும், என் கணவரைத் தேடப் பல திக்கிலும் ஆட்களை ஏவினார். அவர்கள் எல்லோரும் வெறுங்கையுடனே திரும்பி வந்தனர்.

"நான் மோசம் போய்விட்டேனா? என் கணவர் என்னைப் புறக்கணித்து........?"

"ஆம், மோசம் போய்விட்டாய்" என்றது வாசலில் வந்து நின்ற கடிதம்.

கணவரின் கையெழுத்தைப் பார்த்ததும் ஆவலுடனும் அவசரத்துடனும் உறையைக் கிழித்துப் படித்தேன்.

"நளினிக்கு :

நீ எதில் ஆறுதலைக் கண்டாயோ, அதிலே நானும் ஆறுதலைக் கண்டுகொண்டு சௌக்கியமாய் இருக்கிறேன். என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்."

அவ்வளவுதான் அவர் கடிதத்தில் இருந்தது. கீழே கையெழுத்தா ஒன்ருே? ஹூம்! அந்தத் தபால் முத்திரை யாவது தெளிவாயிருந்ததா? அதுவும் என் தலையெழுத் தைப் போல மங்கிக் கிடந்தது.

பொழுது போகாதிருப்பவர்களுக்கு ஏதாவது புதி ரைப் போட்டு விடை கண்டுபிடிக்கச் சொல்லுவார்களே, அது போல என் பொழுதைத் தள்ள, அவர் இப்படி ஒரு புதிரை எழுதி அனுப்பி இருந்தார் போலும்!

அப்பா அந்தக் கடிதத்தைப் படித்ததும், "சரி, இனி நாம் கிராமத்திற்குப் போய்விட வேண்டியதுதான். இங்கே இருந்தால் எனக்கு மறுபடி பைத்தியம் பிடித்து விடும்" என்ருர்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் அப்பா?"

"ஆமாம்; ஊர்ப்பழியை உன் கணவன் இந்தக் கடி தத்தின் மூலம் ஸ்தாபித்துவிட்ட பிறகு இவ்வூரில் ஒரு நிமி ஷம் தங்கியிருப்பது நமக்குச் சாத்தியமாகுமா?" என்று அவர் புலம்பினர்.

நான் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விடாதிருப் பதற்காக அவர் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண் டேன்.

## 7

நாங்கள் கிராமத்துக்கு வந்துவிட்டோம். ஆனல் இங்கேயும்—

செத்த வீட்டுக்காரர்கள் எங்கே சென்ருலும், அவர் களைத் தொடர்ந்து அழுகையும் வந்து கொண்டிருப்பது போல, எங்களைத் தொடர்ந்து பழி இங்கேயும் வந்தது.

நகர வாழ்க்கையே ஊர்ப்பழியினல் நரக வாழ்க்கை ஆயிற்றென்ருல் கிராமத்தில் கேட்கவா வேண்டும்? ஒவ்

வொருவரும் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடி எங்கள் உறவைப் பற்றி வம்பளந்தனர்.

ஆனல் அப்பாவாவது நானுவது அதைப் பொருட் படுத்தாது இருந்து பார்த்தோம். எனினும் புண் வலித்துக் கொண்டே இருக்கையில் யாராவது நிம்மதியாகத் தூங்கி விட முடிகிறதா?

இரண்டு கஷ்டமான வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள்—

எவரை என் வாழ்நாளில் மறுபடி பார்க்க முடியா தென்று எண்ணியிருந்தேனே, அவரே ஓர் இரவு எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றார். ஏன்? அவர் மாத்திரமா வந்தார்? இல்லே, அவருடன் அவர் நிழலும் வந்தது.

அப்பாவாவது நானுவது அவர் கொண்டு வந்த குழந்தை யாருடையது என்று கேட்கவில்லே. அவரும் அதைப்பற்றிச் சொல்லவில்லே. இதைச் சொல்ல வேண் டுமா என்ன? அவருடைய கடிதந்தான் அதற்கு முன் அறிவிப்பாய் எங்களுக்கு எப்பொழுதோ கிடைத்திருக் கிறதே!

'எப்படியோ, அவர் வந்து விட்டார். இனி ஊர் வாய் மூடிவிடும்' என்றுதான் களிப்படைந்திருந்தேன். ஆனல் அது அவர் வருகையில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கிற்று. எப்படி நானும் அப்பாவும், அவர் கொண்டுவந்த குழந்தையை எங்களதாகவே ஏற்றுக் கொண்டோமோ, அப்படியே அது தன் கதையை வளர்த் தது.

வளர்த்தால் வளர்த்துவிட்டுப் போகட்டுமே. ஊரா ரைப் போலவே தவருன லட்சியத்திற்கு இலக்காகி, என்னே ஏங்கவிட்டுச் சென்ற அவர் இன்று தம் பிழையை உணர்ந்து திரும்பி வந்திருக்கவில்லேயா? அது போல

இவர்களும் தங்கள் பிழையை ஒரு நாள் உணர்ந்துகொள்வார்கள்.

அந்தி மயக்கத்தின்பின் இருள் வருவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம் உஷக்காலத்தின் பின் வெளிச்சம் வருவதிலும் இருந்துதானே ஆகவேண்டும்?

## 8

நளினியின் இந்தக் கதையைப் படித்து முடிப்பதற்குள், என் இடது கை எத்தனையோ தடவை சட்டைப் பையை நோக்கிச் சென்றது. வேறொன்றிற்காகவும் அல்ல; அங்கே இருந்த வானவில் கதையைக் கிழித்து எறிவதற்காகத்தான். 'சீ! ஊர்வம்பை ஆதாரமாகக் கொண்டு எவ்வளவு இழிவான கதையை எழுதிவிட்டேன்! ஆனால் நளினியின் முன் அதைக் கிழித்தெறிவது முடியாது' என்பதை எண்ணி என் கை ஒவ்வொரு சமயமும் பின் வாங்கிற்று.

'அந்தி மயக்க'க் கைப்பிரதியின் கடைசித் தாளிலிருந்து நான் பார்வையைத் திருப்பியதும் நளினி, "படித்துவிட்டீர்களா? எப்படி இருக்கிறது கதை?" என்று கேட்டாள்.

"உண்மை இப்படி ஒளிந்து கொண்டிருந்தால், ஊர்வம்பு வளராமல் என்ன செய்யும்? கதையையும் அழகாக அமைத்திருக்கிறீர்கள். நிச்சயமாக உங்கள் மீது ஏற்பட்டிருக்கும் பழியை இது போக்கி விடும்."

"அதிருக்கட்டும். ஆனால் எந்தப் பத்திரிகையாவது இதைப் பிரசுரிக்க ஏற்றுக் கொள்ளுமா?"

"பேஷாக ஏற்றுக்கொள்ளும். ஆனால் இதன் இறுதியில் ஒரு சம்பவம் மூடகமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் விளக்கிவிட வேண்டும்."

"நீங்கள் எந்தச் சம்பவத்தைச் சொல்கிறீர்கள்?"

"அதுதான், உங்கள் கணவரையும் அவர் குழந்தையையும் பற்றிய விவரம். அவர் உங்களைப் பிரிந்து சென்ற பின் நடத்திய வாழ்க்கை விவரத்தையும், மறுபடி தம் சந்தேகங்கள் தெளிவடைந்து, இக்குழந்தையுடன் இங்கே திரும்ப நேர்ந்த சம்பவத்தையும் விளக்கா விட்டால் உங்கள் கதை முடிந்ததாகாது."

"ஆனால், அந்த விஷயம் எனக்கே தெரியாதே!" என்று விழித்தாள் நளினி.

"எனக்குத் தெரியும்; நான் சொல்கிறேன்" என்று சொல்வதுபோல, தொட்டிலில் இருந்த குழந்தை அச் சமயம் எழுந்தது.

நளினி குழந்தையைத் தூக்கி வந்தாள். சற்று முன் அதை நான் தொட்டிலில் பார்த்தபோது முகம் தெளிவாகத் தெரியவில்லை. இப்பொழுது அதன் முகத்தை நன்றாகக் கவனித்துப் பார்த்ததும், அக்குழந்தையை இதற்கு முன்பு எங்கேயோ பார்த்திருப்பது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று.

அந்த உணர்ச்சியை உறுதிப்படுத்திற்று, குழந்தையிடமிருந்து வந்த, "நாயனா" என்ற மழலைச் சொல்.

"நாயனா இல்லேடா கண்ணா; மாமாடா; மாமா சொல்லு, பார்ப்போம்" என்று நளினி கொஞ்சியது என் செவியில் மாத்திரமே விழுந்தது.

சிந்தனை அதைக் கேட்க அங்கிருந்தால்தானே?

அது எப்பொழுதோ பம்பாயை நோக்கிப் பறந்து சென்றுவிட்டது.

## 9

பம்பாயில், கிருஷ்ணசாமி என்ற என் நண்பர் வேலை செய்துவந்த மில்லில், வாமன ராவ் என்ற ஆந்திரர் வேலை செய்து வந்தார். பர்மாவில் ஜப்பானியரின் கொடுரங்களையெல்லாம் அநுபவிக்கும் வண்ணம், யுத்த நெருக்கடி அங்கே தங்க வைத்துவிட்ட பலருள் அவரும் ஒருவர்.

சமீபத்தில் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் கப்பல் போக்குவரவு சாதாரணமானதும், அவர்களில் அநேகர் 'என்று காணப் போகிறோம்!' என்று தவித்த தாய்நாட்டுக்கு அவசர அவசரமாகத் திரும்பி வந்துகொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தோடு வாமன ராவும் இந்தியா திரும்பினர்.

அளவற்ற கஷ்டங்களை ஜப்பானியரின் குடை நிழலில் அநுபவித்துவிட்டு வந்த அனைவரும், தங்கள் சொந்த ஊருக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொண்டனர். ஆனல் வாமன ராவுக்குத் தம் சொந்த ஊரைப்பற்றி அதிகமாக ஒன்றுமே தெரியாது.

இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்பே அவர் குடும்பம் பர்மாவைத் தன் சொந்த பூமியாக்கிக்கொண்டது. அதன் பிறகு அவர்களுக்கு இந்தியாவுடன் தொடர்பே விட்டுப் போயிற்று. விசாகப்பட்டணத்திற்கருகே பார்வதிப்பூர் என்ற கிராமம் தம் பூர்விகம் என்ற அளவுக்குத் தான் வாமன ராவுக்கு அதைப்பற்றித் தெரியும்.

ஆகவே வறண்ட வாழ்க்கையுடனும், வாடிய வயிற்றுடனும் நாடு திரும்பியிருந்த அவர், தம்மை இன்னரென்று தெரியாத ஒரு கிராமத்தைத் தேடிச் செல்வதை விடப் பம்பாயில் ஒரு வேலையில் அமர்ந்து காலம் தள்ளலாமென்று அங்கு வந்திருந்தார்.

முப்பது வயதுக்குள்ளாகவே இருந்த அந்த வாலிபரைப் பர்மா வாழ்க்கை தன் அந்திக்காலத்தில் மிகவும் கொடுமைப்படுத்தியிருந்தது. அவருடைய பெற்ரேரையும் சொத்துக்களையும் யுத்தத்தின் முதல் நாள் குண்டுகள் விழுங்கின. கல்யாண வயதடைந்திருந்த சகோதரியுடன் கஷ்ட வாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று.

இந்த நிலையில் ராணுவத்தில் சேர்ந்து பர்மாவுக்கு வந்திருந்த நம் நாட்டு வாலிபன் ஒருவனேடு அவருக்குச் சிநேகம் உண்டாயிற்று. அவன் அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்தான். கஷ்டதசையில் இருந்த அவர்களுக்கு வேண்டிய பண உதவிகளைச் செய்தான். அதோடு அந்த உபகாரங்களுக்குப் பிரதியாக ஒரு காரியத்தையும் சாதித்துக்கொண்டான். வாமனராவின் சகோதரியும் அவனும் கணவன் மனைவியாயினர்.

வைதிகச் சடங்குகளுடன் முறையாகத் தம் சகோதரிக்குக் கல்யாணம் செய்துவைக்க முடியவில்லை எனினும், வாமனராவுக்கு அவள் தகுந்த வயசில் மனசிற்கு இசைந்த புருஷனேடு வாழ்வது திருப்தியாகவே இருந்தது. ஆனல்—

ராணுவத்தில் உத்தியோகம் வகிப்பவர்களின் விதியும், கொலைக்குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்காகக் கூண்டில் ஏறி நிற்பவர்களின் கதியும் ஒருதரப்பட்டவை என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. எவ்வாறு கொலைக் குற்றவாளியின் வாழ்க்கையில் அடுத்தாற்போல நிகழப் போவது விடுதலையா, மரண தண்டனையா, ஆயுள் முழுவதும் சிறைவாசமா என்பது நிச்சயமில்லையோ, அவ்வாறு தான் ராணுவத்தில் இருப்பவர்களின் வாழ்க்கையும் நிச்சயமற்றது என்பது வாமனராவுக்குச் சீக்கிரம் தெரியவந்தது யுத்த அரங்கத்தின் முன்னணிக்குச் சென்ற அவர் சகோ

தரியின் கணவன் எதிரிகள் கையில் சிக்கிவிட்டான் என்ற செய்தி ஒரு நாள் வாமன ராவைத் தேடி வந்தது.

அப்பொழுதுகூட அவருக்கு அவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை கொஞ்சம் இருந்தது. ஆனால், சில மாதங்களில் பர்மா ஜப்பானியரிடமிருந்து விடுபட்டு, அவர்களால் சிறைசெய்து வைக்கப்பட்டிருந்த அனைவரும் விடுதலை அடைந்துவந்தபோது, அந்தக் கூட்டத்தில் தம் மாப்பிள்ளை இல்லாததைக் கண்டதும், வாமன ராவுடைய அந்த நம்பிக்கை சிதறிப் போயிற்று.

அவ்வூர் வாழ்க்கையில் வெறுப்புற்ற அவர், அச்சமயம் கர்ப்பிணியாக இருந்த தம் தங்கையுடன் இந்தியாவுக்குத் திரும்பியிருந்தார். பம்பாயில் குடியேறிய சில நாட்களுக்கெல்லாம, அவர் சகோதரி ஓர் ஆண்மகவை ஈன்றாள்.

ஒரே ஒரு தடவைதான் - சென்ற வருஷம் - என் நண்பன் கிருஷ்ணசாமியுடன் வாமன ராவின் வீட்டுக்குச் சென்றிருந்த பொழுது, அவரையும் அவர் சகோதரியையும் அவள் குழந்தையையும் பார்த்திருந்தேன். எனினும், அவர்கள் முகம் எனக்குச் சிறிதும் மறந்து போகவில்லை.

ஆகவே, வாமன ராவின் வீட்டி ல்பார்த்த குழந்தையை இன்று நளினியின் மடியில் பார்த்ததும், என் மனம் நிமிஷத்தில் ராமகிருஷ்ணனுக்கும் வாமன ராவின் சகோதரிக்கும் முடிச்சுப் போட்டுவிட்டது.

நான் அவ்வாறு நிச்சயிக்க வேறொரு தகுந்த காரணமும் இருந்தது. ஐந்தாறு மாசங்களுக்கு முன்பு, வாமன ராவின் சகோதரி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள் என்றும், குழந்தையை அவள் கணவனே வந்து வாங்கிக் கொண்டு போய்விட்டான் என்றும், கிருஷ்ணசாமி சொல்லிக் கேட்டிருந்தேன். அதை வைத்துக்கொண்டு என் மனம் எழுப்பிய ஒட்டுச் சித்திரம் இதுதான்: 'ராமகிருஷ்

ணன் நளினியின் நடத்தையில் சந்தேகம் கொண்டு வெளி யேறிய பிறகு, பட்டாளத்தில் சேர்ந்து, நேரே பர்மா போயிருப்பான். அங்கே அவன் வாமன ராவின் சகோ தரியை மணந்திருப்பான். அவன் நளினிக்கு எழுதிய கடிதத்தில்கூட இவ்வுண்மை ஒருவாறு புலப்படுகிறதே. பிறகு ஜப்பானியரிடமிருந்து எப்படியோ தப்பி, பர்மாவில் வாமன ராவும் தன் மனைவியும் பம்பாய் சென்றுவிட்ட செய்தியைத் தெரிந்துகொண்டு இங்கே வந்திருப்பான். பம்பாயில் தன் மனைவி இறந்து மைத்துனன் சிறிய குழந் தையுடன் கஷ்டப்படுவதைப் பார்த்துவிட்டு, இனி நளினி தான் நமக்குக் கதிமோக்ஷம் என்று குழந்தையுடன் இங்கே புறப்பட்டு வந்திருப்பான்!'

'அந்தி மயக்க'க் கதையைப்பற்றி நான் ஏதோ ஆலோ சித்துக்கொண்டிருப்பதாக நளினியும் சுப்புணியும் நினைத் திருக்க வேண்டும். சுப்புணி சொன்னான்: "என்னடா ஆலோசிக்கிறாய்? உன்னால் இக் கதையைச் சரி செய்து அனுப்ப முடியாவிட்டால், என்னிடம் கொடு. நான் அதை முடித்து அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்."

நளினியும் நானும் அவனை ஆச்சரியத்துடன் பார்த் தோம். "அப்படியானால், நீங்கள் கூடப் பத்திரிகைகளுக் குக் கதை எழுதுகிறீர்களா, என்ன?" என்று கேட்டாள் நளினி.

"இல்லை; இதுவரை ஒன்றும் எழுதியதில்லை. ஆனால் உங்கள் கதையை முதலில் ராமு எழுதிவிட்டான். பிறகு நீங்களே எழுதியிருக்கிறீர்கள்; இன்னும் அந்தக் கதையில் உண்மை மறைந்திருப்பதால், மூன்றாவதாக நானும் அதில் கை வைக்கலாமென்று எண்ணுகிறேன்."

இந்தச் சுப்புணி 'அசட்டுப் பிசட்டு' என்று எதையோ உளறிக் கொட்டிவிட்டான். நளினி அவன் பேச்சில்

குறிப்பான விஷயத்தை எடுத்துக்கொண்டாள். "என்ன! இவரே என் கதையை எழுதியிருக்கிறாரா? எப்பொழுது எந்தப் பத்திரிகையில் அது வெளிவந்தது?" என்று அவள் வியப்புடனும் ஆவலுடனும் கேட்டாள்.

"இல்லை; அந்தக் கதை எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமாகவில்லை; பிரசுரமாகவும் போகிறதில்லை. சும்மா பொழுது போகாமல் எதையோ கிறுக்கினேன். ஒன்றும் நன்றாக இல்லை. ஆகவே அது எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பப் படாமல் மேஜையின்மீது கிடந்தது. சுப்புணி இன்று வந்த காலுடன் அதைப் படித்துவிட்டு, இப்படி ஏதோ பிதற்றுகிறான்" என்று நான் மழுப்பிவிடப் பார்த்தேன்.

ஆனால் நளினி என்னை விடுவதாக இல்லை. தான் எழுதிய கதையையே வேறொரு 'பழம்பெருச்சாளி'யும் எழுதியிருக்கிறது என்றால் புதிய எழுத்தாளர் எவருக்கும் அதைப் படித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழுவது இயற்கைதானே? "அது நன்றாக இல்லாவிட்டாலும், நான் ஒரு முறை அதைப் படித்துத்தான் ஆகவேண்டும். இப்பொழுது உங்கள் வீட்டுக்கு ஆள் அனுப்பட்டுமா? அதை எங்கே வைத்திருக்கிறீர்கள்?" என்றாள் அவள்.

"நீங்கள் ஆள் ஒன்றும் அனுப்ப வேண்டாம். கதை இங்கேயேதான் இருக்கிறது. அதைப் படித்துவிட்டு உண்மைக்கும் ஊர்வம்புக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று என் சட்டைப்பையில் இருந்த 'வானவில்' கதையை எடுத்து நளினியின் கையில் கொடுத்தான் சுப்புணி.

அவனைக் கோபத்துடன் விழித்துப் பார்ப்பதைத் தவிர அப்பொழுது வேறொன்றும் என்னால் செய்ய முடியவில்லை. நளினி அந்தக் கதையைப் படித்துவிட்டு, நானும்

அவள் நடத்தையில் சந்தேகம் கொண்டவன்தானென்று நிச்சயம் செய்துகொள்வாளே என்று, "நளினியம்மா, கதையைப் படிப்பதற்கு முன் ஒரு விஷயம்; இந்தக் கதையின் சம்பவங்களுக்கும் முடிவுக்கும் நான் எவ்விதத்திலும் ஜவாப்தாரியல்ல. இது ஊர்வதந்தியைக் கொண்டு எழுப்பப்பட்ட கற்பனைச் சித்திரம் என்பதை இதன் ஒவ்வொரு வாக்கியத்தைப் படிக்குந்தோறும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்" என்றேன்.

நளினியின் காதில் என் வார்த்தைகள் விழுந்தனவோ என்னவோ? அவள் கதையை ஊன்றிப் படித்துக்கொண்டிருந்தாள்.

"அட பாவி! நீ இப்படிச் செய்வாய் என்று தெரிந்திருந்தால், நான் இந்தக் கதையை இங்கே எடுத்துக் கொண்டு வந்திருக்க மாட்டேனே?" என்பவன் போல, நான் சுப்புணியை விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதோடு எந்த நிமிஷத்தில் நளினியிடமிருந்து கோபப் பார்வையும் கொடூரமான சொற்களும் என்மேல் பாயப்போகின்றனவோ என்றும் நான் பதறினேன்.

நளினி கதையைப் படித்துவிட்டு, புன்சிரிப்போடு பேச ஆரம்பித்ததும், நான் மாத்திரம் அல்ல, சுப்புணியும் கூடத் திகைத்துத்தான் போனான்.

"மாயாவி அண்ணா, எனக்காக நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும். இந்தக் கதையை இப்படியே பிரசுரத்துக்கு அனுப்பவேண்டும்."

"சீ, இதையா? அதிலும் உண்மை அனைத்தும் எனக்குத் தெரிந்த பிறகா? நன்றாய்ச் சொன்னீர்கள்! உங்கள் அனைவரையும் இழிவாக்கி எழுதப்பட்டிருக்கும் இந்தக் கதையை இப்பொழுதே கிழித்தெறியப் போகிறேன். இல்லை, இதைத் தீக்கு இரையாக்கிச் சாம்பல்கூட

வெளியே பறந்துவிடாதபடி பூமியில் புதைத்துவிடப் போகிறேன்."

"அழகிய பொருள்களை ஆக்குபவர்களே அழிக்கக் கூடாது; தெரியாதா உங்களுக்கு?"

"எதை அழகிய பொருள் என்கிறீர்கள்? இந்தக் கதையையா?"

"ஆமாம். அதுதான் என் கதைக்கு இப்பொழுது பூர்ணத்துவத்தை அளித்திருக்கிறது."

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே! உங்கள் ஏக்கத்தை, உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழி பெயரை, அழித்து வைப்பதற்குப் பதிலாக வளர்த்து வைக்கும் இந்தக் கதையில் நீங்கள் ஏன் இப்படி மோகம் கொண்டுவிட்டீர்கள்?"

"மாயாவி அண்ணு, சாதாரணமாக வீதியில் வளைய வரும்போது பசுவின் சாதுத்தன்மையை எவரும் சட்டை செய்வதில்லை. ஆனல் காட்டிலிருந்தோ மிருகக் காட்சிச் சாலையிலிருந்தோ, ஏதாவது ஒரு துஷ்டமிருகம் தப்பி வந்து நாட்டைக் கலக்கிவிட்டுப் போனதும், பசுவைப் பார்ப்பவர்களுக்கு அதன் சாத்துவிக மகத்துவம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அவ்வாறுதான் மெய்யும் பொய்யும். சாதாரணமாக வெளிவரும் மெய்யை உலகம் சாதாரணமாகவே வரவேற்கிறது. ஆனல் ஒரு பொய்யை எழுப்பிவிட்டு அதை மெய்ப்படுத்தும்போதுதான் அதன் சக்தி எல்லோர் கவனத்தையும் கவருகிறது.

"உங்கள் கதையை எந்தப் பத்திரிகையிலாவது பிரசுரித்துவிட்டு, அதே பத்திரிகையின் அதே இதழிலோ, அல்லது தொடர்ந்து வரும் இதழிலோ என் கதை வெளியானல்,ஜனங்கள் உண்மையையும் பொய்யையும் நன்ருக ஆராய்ந்து அறிந்து கொள்வார்கள்."

நளினி சொன்னது ஒரு வகையில் சரியாகவே எனக்குப் பட்டது. இருந்தாலும் அதில் சம்பந்தப்பட்ட மற்ற இருவரும் அதைப் படித்து அநுமதி தந்தபிறகே, பிரசுரத்திற்கு அனுப்பவேண்டும் என்று எனக்குத் தோன்றியது, ஆகவே அதை மனசில் கொண்டு நளினியிடம், "அது சரி நளினியம்மா; நீங்கள் என் எழுத்தின் மீது கொண்டிருக்கும் அன்பினுல்,இந்தக் கதை உங்கள் கதைக்குச்சோபை அளிக்கும் என்று நினைக்கிறீர்கள். ஆனுல் அது பிரசுரமானுல் விபரீதமான பலன் ஏற்படும் என்று உங்கள் கணவரும் கோபாலையரும் நினைப்பதாயிருந்தால்........?" என்று இழுத்தேன்.

"யாரைச் சொல்கிறீர்கள்? அப்பாவையா? அவராகவே இந்தச் சம்பவங்களைக் கொண்டு உங்களை ஒரு கதை எழுதச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர். அப்படி இருக்கையில்........?"

"இருக்கட்டுமே; ஆனுல், அவர் எதை எதிர்பார்த்து என்னைக் கதை எழுதச் சொல்ல விரும்புகிருரோ, அதற்கு மாருன முடிவையல்லவா இந்தக் கதை ஏற்படுத்தி வைக்கும்?"

"உங்கள் கதை மாத்திரம் வெளிவருவதாயிருந்தால் நீங்கள் சொல்வது சரிதான். ஆனுல் என் நிகழ்ச்சிக் குறிப்பு உங்கள் கதைக்கு எதிர்ப்பாக உடனே வரும் போது, எல்லோரது முடிவும் மாறிவிடாதா? அதோ, அப்பாவே வந்துவிட்டார். அவரையே இந்தக் கதையைப் படிக்கச் செய்து முடிவைத் தெரிந்துகொள்ளலாமே."

நான் வாசற்புறம் திரும்பினேன். கோபாலையர் மாத்திரம் உள்ளே வந்து கொண்டிருந்தார். எங்களைப் பார்த்ததும் அவர், "அடே, ராமுவும் சுப்புணியுமா? அப்பொழுதே வந்துவிட்டீர்களா? சுப்புணி, என் கடிதம் கிடைத்ததோடா உனக்கு?" என்ருர்.

"கிடைத்துத்தான் புறப்பட்டு வந்தேன். அவர் எங்கே, ராமகிருஷ்ணன்?"

"அவன் மில் கட்டிடத்தில் இருக்கிறான். முக்கியமான சில மிஷின்கள் இன்று வந்து இறங்கின. அவைகளைச் சரி பார்த்துக் கொண்டிருக்கிறான். என்னவோ அப்பா, நம் ஊர்ப்பிள்ளைகள் எல்லோரும் பரதேசங்களில் அங்கே அங்கே நாலு காசுக்காகச் சிதறிக்கிடக்க வேண்டாம்; நம்முடன் ஊரிலே சந்தோஷமாக இருக்கட்டும் என்று இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறேன். இனி இதை வெற்றிபெறச் செய்வது உங்கள் கைகளில் இருக்கிறது. என்ன ராமு? நீயும் இங்கே தங்கிவிட ஏற்பாடுகள் முடிந்துவிட்டன; தெரியுமோ, இல்லையோ?"

சற்று முன்பு - நளினியின் கதையைப் படிக்காதிருக்கையில் - இவ் வார்த்தைகளைக் கோபாலையர் கூறக் கேட்டிருந்தேனாகில், அவைகளைத் தவறாகவே அர்த்தம் செய்து கொண்டிருப்பேன். 'வான வில்லின் வித விதமான நிறங்கள் அனைத்தும் ஒரே ஒளியின் தோற்றமே. ஊராரின் கண்ணைத் துடைக்க இதுவும் ஓர் ஒளிமயக்கம். அவர்கள் குழந்தைகளுக்கு வேலை போட்டுக் கொடுத்துவிட்டால், தம் குற்றத்தை வெளிப்படையாகப் பேசமாட்டார்கள் என்று இந்த அங்கம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது' என்று நான் எண்ணியிருப்பேன். ஆனால், இப்பொழுது என் கற்பனை, தீர்மானம் எல்லாம் தேய்ந்து மாய்ந்து உருவற்றுப் போய்க்கொண்டிருக்கையில், அதை இன்னும் நன்றாகத் துவைப்பதாக இருந்தது கோபாலையரின் பேச்சு. இவ்வளவு உதார குணமும், தூய உள்ளமும் படைத்த மனிதரையா மாட்டிலும் கேவலமான அரக்க குணம் உடையவராய்ச் சிருஷ்டித்து விட்டேன்!

இவ்விதச் சிந்தனைகளினூடே அவருக்குப் பதிலும்

கூறினேன்: "ஸார், உங்களைப் போன்று இத்தனை விரிந்த நோக்குடையவர்கள், உலகத்தில் ஒருவர் இருவர்தாம் இருக்க முடியும்."

"ஏன், இருவர் மூவர் என்கிறாய்? என்னைப் போன்ற மனிதன் ஒருவனேதான் இருக்க முடியும்! அது நானே தான். ஆமாம் ராமு; ஊரார்கூட அப்படித்தானே இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? அப்பனே, உனக்கு விஷயம் ஒன்றும் தெரியாதா?" அவர் பேச்சில் எவ்வளவு துயர் நிறைந்திருந்தது!

"தெரியும்; நீங்கள் கேட்டதில்லையா ஸார், காமாலைக் கண்ணுடையவனுக்குப் பார்ப்பதெல்லாம் மஞ்சள் நிற முடையதாகத் தென்படும் என்று? அதுபோலச் சூதை யும் வாதையும் பார்வையில் கொண்ட உலகில், நல்லவர்கள் கெட்டவர்கள் எப்படித் தெரியப்போகிறார்கள்? அவர் களைச் சொல்வானேன்? நான்கூட........"

"நீ மாத்திரம் ஆகாயத்திலிருந்து குதித்து விட்டாயா என்ன? அதிலும் இந்த ஊரிலே இல்லாத உனக்கு வெளிக் கதைகளைக் கேட்டுத்தானே விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும்? அப்பனே ராமு, நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகும் வம்புக் கதைகளினால் என் மனம் புண்ணாய் உலைந்துவிட்டது. இதற்காக வீட்டுக்குள்ளே அடைந்து கிடந்தேன். வம்பு பேச வரும் எவரையும் என் அருகில் நெருங்க விடாதிருந்து பார்த்தேன். ஆனால் அவை அனைத்தும் ஊர்க்கதைக்குச் சாதகமாகவே போய் விட்டன. ராமு, உலகின் கண்களுக்கு ஒரே ஒரு பார்வை தான் உண்டு. அந்தப் பார்வை - அந்த விழிப்பு - அதில் களங்கம் ஒன்றைத்தான் அது காணும். வீட்டினுள் மறைந்துகொண்டாலும் சரி; வெளியே உலாவினாலும் சரி; அதன் விஷப் பார்வையிலிருந்து எவரும் தப்பிவிட

முடியாது. இதை உணர்ந்து கொண்ட பிறகு நான் வீட்டை விட்டு வெளியே வர ஆரம்பித்தேன். வெளியே உலாவி வருகிறேன். எல்லோரும் என்னைப் பார்க்கிறார்கள்; பேசுகிறார்கள். ஆனால் என் தலை திரும்பியதும் அவர்கள் சிரிப்பொலி எனக்குக் கேட்கத்தான் கேட்கிறது. அதை மாற்றியாகவேண்டும். இல்லாவிட்டால் எனக்கு வாழ்நாள் முழுவதும் சாந்தி இராது.

"ராமு, நீ பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதி வருவதாக உன் அப்பா சொன்னார். உன் கதைகளின் தொகுதி ஒன்றுகூட வெளிவந்திருப்பதாக அவர் சொன்னார். அதைக் கொண்டு வரும்படி அவரிடம் சொல்லி அனுப்பியிருந்தேனே; கொண்டு வந்திருக்கிறாயா?"

"இதோ இருக்கிறது அப்பா, அந்தப் புத்தகம். அவர் அப்பா கூறிய விஷயத்தைப் பற்றி முகவுரையில் கூட எழுதியிருக்கிறார்; இதோ, இதைப் படியுங்கள்."

நளினி தாயாராய்த் தன் கையில் வைத்திருந்த "சாமுண்டியின் சாப"ப் புத்தகத்தைக் கோபாலையரிடம் கொடுத்தாள். நான் ஆச்சரியத்தோடு மௌனமாய் நின்றேன்.

அந்தப் புத்தகத்தின் முகவுரையில், உள்ளே வெளியிடப்பட்டிருந்த கதைகள் எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி என் மனசில் பிறந்தன என்பதைப்பற்றி எழுதியிருந்தேன். அவைகளில் எந்தப் பகுதியைப்பற்றி இவர்கள் பேசிக் கொள்கிறார்கள், அதிலிருந்த எந்தக் கதைக்கும் இப்பொழுது எங்கள் பேச்சில் நிற்கும் விஷயத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதொன்றும் புரியாமல் நான் விழித்துக்கொண்டிருந்தேன்.

என் ஆச்சரியத்தைக் கோபாலையர் அதிக நேரம் வளரவிடவில்லை. அவர் முகவுரையைப் படித்துக் கொண்டு

வந்தபோது ஓரிடத்தில் சட்டென்று நிறுத்தி, "என்னப் பனே ராமு, இந்த வேலையைத் தானடா இப்பொழுது நானும் வேண்டி நிற்பது. 'எழுத்தாளனின் பேனாவுக்கு இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் சக்தி இல்லையே!' என்று ஒரு புறம் புலம்பியிருந்தாலும், அதற்கு மனிதனின் சாதாரண வாழ்க்கையில் நிகழும் அசந்தர்ப்பங்களை நிவர்த்தித்து விடும் சக்தி இருக்கிறது என்பதை உன்'களத்திரதோஷக்' கதையில் காட்டியிருக்கிறாய். அந்தக் கதையை நான் படிக்க வேண்டியதில்லை. அதை உன் அப்பா ஏற்கனவே எனக்குச் சொல்லியிருக்கிறார். அதில் எந்தப் பகுதி உண்மையான நிகழ்ச்சி, எவை உன் கற்பனைகள், அந்தக் கதையை எழுதியதால் உனக்கு ஒரு பெருத்த நஷ்டம் ஏற்பட்டதெனினும் அதனால் யார் யார் பலன் அடைந்தனர் என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். அதைத் தெரிந்து கொண்ட பிறகுதான், உன் எழுதும் சக்தியை என் மனத் துயரைப் போக்கவும் பயன் படுத்திக் கொள்வது என்ற தீர்மானத்துக்கு வந்தேன். ராமு, உன் பேனாவுக்கு வல்லமை இருக்கிறது. பிரமாதமாக இல்லாவிட்டாலும், எங்கள் வாழ்க்கையின் உண்மை நிகழ்ச்சிகளை ஒரு கதையாகப் புனைந்து, உலகத்தாரின்முன் வீசினாயானால், அது அவர்களின் கண்ணைத் திறந்து வைக்கும். எங்கள் தலை மீது ஏற்றப்பட்டிருக்கும் வீண் அபவாதமும் தொலைந்து போகும். அதைக் கேட்டுக் கொள்ளத்தான் உன்னை இப்பொழுது அவசரமாக வரச் சொல்லி அனுப்பினேன்."

"போலீசுக்குத் தப்பித் தலை மறைந்து வந்த திருடன் ஜீன்-வால்-ஜீனுக்குப் பாதிரி ஒருவர் புகலளித்து, அறுசுவையுடன் அன்னமளித்துப் பஞ்சணை மெத்தையில் படுக்க வைத்தார். அவன் அவர் தூங்கிவிட்ட பிறகு அவ் வீட்டிலிருந்த சில வெள்ளிப் பாத்திரங்களைத் திருடிக்

கொண்டு ஓடி வருகையில் போலீசாரின் கையில் சிக்கிக் கொள்கிறான். அவர்கள் அவனைப் பாதிரியின் முன் கையும் களவுமாகக் கொண்டு நிறுத்தியபோது, அவர் சிரித்துக் கொண்டே, 'இவைகளை இவன் திருடவில்லை; நானே இவனுக்குக் கொடுத்தேன்' என்று சொன்னார்'' என்று நான் 'விக்டர் ஹியூகோ'வின் 'லே மிஸ்ரபிளே' என்ற பிரெஞ்சு நாவலில் படித்திருந்தேன். அந்த ஆசிரியர், திருடனான ஜீன்-வால்-ஜீனின் மன நிலையை அச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு விவரித்திருந்தாரோ, அதே நிலையில் தான் நானும் அப்பொழுது இருந்தேன்.

எந்தப் பழியைப் போக்கிவிடக் கோபாலையர் என்னைக் கதை எழுத வேண்டிக்கொள்கிறாரோ, அந்தப் பழியை ஸ்தாபிக்கும் கதையொன்றை எழுதி, அதை அவர் வாசிக்கப்போகும் தருணம் வரையில், நிலைமையை மோசமாக்கிக் கொண்டிருந்த நான், அவருக்கு என்னபதில் சொல்லுவது, எப்படிச் சொல்லுவது என்பது தெரியாது திகைத்தேன்.

நல்ல வேளையாக நளினி அச்சமயம் என் சங்கடத்தைத் தீர்த்தாள். அவள் சொன்னாள்: "அப்பா, இவர் நம் கதையை ஏற்கனவே எழுதி விட்டார். ஆனால் நீங்கள் நினைக்கும் தோரணையில் அது எழுதப்படவில்லை. ஊர் வாய் எந்தச் செய்திகளை இவர் செவியில் புகுத்திற்றோ, அவைகளைக் கொண்டு அந்தக் கதையை எழுதியிருக்கிறார். எனினும் அது நிச்சயமாக நம் பழியைப் போக்க உதவியே இருக்கிறது. அப்பா, நேற்று நான் எழுதிய கதையைப் படித்துவிட்டு, 'உன் கதை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் உலகுக்கு அறிமுகமான ஓர் எழுத்தாளரின் பேனாவிலிருந்து வரும் குப்பைக்கு இருக்கும் மதிப்புக்கூட உன் கதைக்கு இராது' என்றீர்களே. இப்பொழுது மாயாவி அண்ணா என்ன சொல்லுகிறார்

கேளுங்கள். அவரைக் கேட்பானேன்? நீங்களே அவருடைய கதையைப் படித்துவிட்டு, என் கதையையும் நினைவுபடுத்திப் பாருங்கள்; உங்களுக்கே தெரியும். இதோ அவர் கதை.''

விசாரணைக்காகக் கூண்டில் ஏறி நிற்கும் குற்றவாளிக் கைதி தன்னைப்பற்றிக் கூறப்படும் பிரதிகூலமான வாக்கு மூலம் ஒவ்வொன்றையும் கேட்கும்போது எவ்வாறு கலக்க முறுவாஞே அவ்வாறுதான், என் 'வானவில்' கதை அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவர் கைக்குப் போகும் போதும் நான் கலங்கினேன். 'நளினியிடமிருந்து என்னவோ லேசாகத் தப்பிவிட்டேன். ஆனல் இப்பொழுது நிச்சயமாக எனக்குச் சரியான சவுக்கடி கிடைக்கத்தான் போகிறது. சற்று முன்பு என்னை அவ்வளவு உயர்த்திப் பேசிய மனிதரே, இப்பொழுது என்னைத் தூற்றவும் போகிருர்' என்று அஞ்சி, குனிந்த தலையை நிமிர்த்தாது நான் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தபோது, கோபாலையர் கதையைப் படித்துவிட்டு, "ராமு, எழுத்தாளனுக்கு உண்மையைத் துலக்கும் சக்தி எவ்வளவு உண்டோ, அவ்வளவு பொய்யை வளர்ப்பதிலும் உண்டு என்பதை உன் கதை நிரூபித்திருக்கிறது. உன் கதையை நான் எவ்வகையிலும் குறை கூறமாட்டேன். உனக்குக் கிடைத்த செய்திகளைக் கொண்டு நீ இதை எழுதியிருக்கிருய். இருந்தாலும் சாவித்திரி சொல்வதுபோல இதை நமக்குச் சாதகமாகவும் பயன் படுத்திக்கொள்ள முடியும். 'உண்மையும் பொய்யும்' என்ற தலைப்புடன் உன் கதையையும் அவள் கதையையும் சேர்த்துப் பிரசுரிக்க ஏற்பாடு செய்தாயாஞல், அது நாம் எதிர்பார்ப்பதைவிட எளிதாகப் பலனளிக்கும்" என்ருர்.

"என்ன, நளினியின் கதையையும் நான் எழுதியதாகப் பிரசுரிக்கச் செய்வதா!" என்று நான் கேட்ட போதிலுங்

கூடக் கோபாலையர் வெளியிட்ட புதிய வழியில் என் மனம் செல்லாமல் இல்லை. அவர் சொல்கிற வழியில் மாத்திரம் எதாவது செய்ய முடியுமானால்........?

"ஆமாம் ராமு, வாசகர்களிடையே எழுத்தாளர்களின் கதைகளைவிட அவர்கள் பெயருக்கு ஒரு தனிக் கௌரவம் இருக்கத்தான் இருக்கிறது. சாவித்திரியின் கதையை அவள் எழுதியதாக வெளியிடுவதைவிட, நீயே உன் வானவில் கதைக்கு மறுப்பாக வெளியிட்டால், வாசிப்பவர்களுக்கு உண்மை தெற்றெனத் துலங்கும்"

"ஆமாம் அப்பா; அதைத்தான் நானும் அப்பொழுதே முதல் அவரிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் என் கதை இன்னும் முடிந்தபாடில்லையே என்று குறை கூறுகிறார். அதில் அவருக்கு விளங்காத பகுதி ஒன்று இருக்கிறது. அதை மாத்திரம் விளக்கி விட்டால், கதையை அவர் முடித்து அனுப்ப ஏதுவாக இருக்கும்" என்றாள் நளினி.

"விளங்காத பகுதியா? அது என்ன ராமு? சாவித்திரிதான் தன் கதையில் நடந்தது அனைத்தையும் அப்படியே எழுதியிருக்கிறாளே? இன்னும் அதில் உனக்கு எந்தப் பகுதி விளங்கவில்லை?"

விஷயங்கள் என் கலக்கத்திற்கு மாறாக வளர்ந்து விட்டதால் நான் தேறிவிட்டேன். "ஆமாம் ஸார்; நளினியம்மாவின் கதையில், அவள் கணவன் திரும்பி வந்த பகுதி விளக்கப்படாதவரைக்கும், வாசகர்களுக்கு அது உண்மை நிகழ்ச்சி என்ற நம்பிக்கை ஏற்படாது" என்றேன் நான்.

"ஓ, அதையா சொல்கிறாய்? ஆனால், அவ் விஷயம் எங்கள் இருவருக்கும் தெரியாதே? நாங்கள் ராமகிருஷ்ணனை, அவ் விஷயமாக ஒரு வார்த்தையேனும் கேட்கத்

துணிவு கொள்ளவில்லை அப்பா. 'என்ன? ஏது?' என்று ஏதாவது கேட்க, அதிலிருந்து ஏதாவது விபரீதம் கிளம்பி, அதன் நிமித்தம் அவன் மறுபடி எங்கேயாவது போக நேர்ந்துவிடலாகாது என்றுதான் நாங்கள் வாயே திறக்கவில்லை. ராமு, எது எப்படி இருந்தாலும், முன்னாளில் எங்களிடம் சந்தேகம் கொண்டு ஓடிப்போனவன், இன்று தன் குழந்தையுடன் எங்களிடமே புறப்பட்டு வந்து, என் சாவித்திரியையும் ஏற்றுக்கொண்டதொன்றே அவன் சந்தேகங்கள் விலகிப் போய்விட்டன என்பதை அறிவிக்கவில்லையா?"

"உங்கள் வாதம் எனக்கு விளங்குகிறது. ஆனால், வாசகர்களுக்கு அது விளங்க வேண்டுமே! அதிலும் முற்றும் விபரீதமான நினைவிற்கு, என் 'வானவில்' கதையின் மூலம் அவர்களை இழுத்து வந்து வைத்தபிறகு, கதையின் திருப்பத்திற்குக் காரணமான பகுதியைப் பூடகமாக வைத்திருந்தால், அவர்கள் உண்மையான சம்பவங்களைக்கூட நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனை என்றல்லவா தீர்மானித்து விடுவார்கள்?"

"அப்படியானால் ஒரு காரியம் செய் ராமு. ராமகிருஷ்ணன் இப்பொழுது மில் காம்பவுண்டுக்குள்தான் இருக்கின்றான். சுப்புணிக்கு அவனிடம் நல்ல பரிச்சயம் உண்டு. அவனுடன் அங்கே போய் நீயே விஷயங்கள் எல்லாவற்றையும் ராமகிருஷ்ணனுக்கு எடுத்துச் சொல்லி, உனக்கு வேண்டிய விவரங்களைக் கேட்டுத்தெரிந்துகொள்."

"ஆமாம், அதைத்தான் நான் அப்பொழுது முதல் இந்தப் பிரகஸ்பதியிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்: 'உனக்கு ராமகிருஷ்ணனிடம் கேட்கச் சங்கோசமாயிருந்ததென்றால், நான் அதைக் கேட்டுக் கதையை முடிக்க ஏற்பாடு செய்கிறேன், செய்கிறேன்.' என்று. இந்தப் புத்தி

சாலிக்கு அதெல்லாம் ஏன் மண்டையில் ஏறுகிறது?'' என்று சுப்புணி ஒத்துப் பாடினன்.

ஆகவே என் 'வானவில்' கதாபாத்திரங்களில் மூன்ருவது முக்கிய ஆசாமியின் வாக்கு மூலத்தைச் சேகரிக்க, நானும் சுப்புணியும் மில்கட்டிடத்தைநோக்கிச் சென்ருேம்.

## 10

கிராமத்துக்கு வடக்கே ஆற்றிற்கு அப்பால் இருந்த மந்தை மேட்டில் எழுப்பப்பட்டு வந்தது மில் கட்டிடம். காம்பவுண்டுச் சுவர் முடிந்து விட்டது. உள்ளே சிறியவையும் பெரியவையுமான கட்டிட நிர்மாண வேலைகள் நடந்து கொண்டிருந்தன. வானளாவ எழுந்து கொண்டிருந்த மில்லின் புகைபோக்கியை நான் ஒரு முறை நோக்கியதும், பம்பாய் வாசனையை அங்கே நுகர்ந்தேன்.

சுப்புணியும் நானும் காம்பவுண்டுச் சுவரைக் கடந்து உள்ளே சென்ருேம். அங்கே ஒரு மணற்குவியலின் மீது உட்கார்ந்திருந்த மனிதரைப் பார்த்ததும், நான் என் கண்ணையே நம்ப முடியவில்லை. அந்தப் பம்பாய் நண்பர் வாமன ராவ் இங்கே எப்பொழுது வந்தார்?

"நமஸ்காரம் மிஸ்டர் ராமகிருஷ்ணன். என்ன, சௌக்கியமா?" என்று சுப்புணி அந்த மனிதரை நெருங்கியபோது, நான் பின்னும் ஆச்சரியத்தால் திகைத்துப் போனேன்.

"ராமகிருஷ்ணன்! அப்படியானல் வாமன ராவும் அவரும்........?" என்ற வார்த்தைகள் என்னை அறியாது நழுவி விழுந்தன.

"யார்? வாமன ராவா? அவன் யாரடா ஒருத்தன்? ஆள் மாருட்டமாக ஏதாவது உளருதே" என்று சுப்புணி என்னைக் கடிந்து கொள்ள ஆரம்பித்தான்.

"ஆள் மாருட்டம் ஒன்றும் இல்லை, மிஸ்டர் சுப்பிர மணியன். உங்களுக்கு ராமகிருஷ்ணனுகப் பழக்கப் பட்டதே போன்று, மிஸ்டர் ராமுவுக்கு வாமன ராவாகப் பழக்கப் பட்டிருக்கிறேன்" என்ருர் ராமகிருஷ்ணன், சிறிதும் கலவரமோ திகைப்போ இன்றி.

ஆனுல் என்னைச் சுற்றி ஆயிரம் கேள்விகள் எழுந்தன. எவரை வாமன ராவின் சகோதரியின் கணவர் என்ற தீர்மானத்துடன் பார்க்க வந்திருந்தேனே, அவர் வாமன ராவேதான் என்று அறிந்தபோது, "பம்பாயில் இந்த மனிதரின் பூர்விகத்தைப் பற்றி நான் கேட்ட கதைகளுக் கெல்லாம் அடிப்படை என்ன? அங்கு இவர் தம் சகோதரி யென்று, உயிருக்கு உயிராய்க் காப்பாற்றி வந்த மங்கை யார்? எதற்காக அங்கே தம்மைப்பற்றி ஒரு பொய்க் கதையைச் சிருஷ்டித்துக் கொண்டார்?" என்பவை போன்ற கேள்விகளுடன் நான் ராமகிருஷ்ணனை நோக்கிக் கொண்டிருந்தேன்.

நல்ல வேளையாக ராமகிருஷ்ணனே என் சந்தேகங் களைத் தெளிவு செய்ய வலிய வந்துவிட்டார். அவர் சொன்னுர்: "மிஸ்டர் ராமு, நீங்கள் சற்றும் எதிர்பாராத படி என்னை இங்கே கண்டு ஆச்சரியம் அடைந்து விட்டீர்கள். இல்லையா? ஆம், ஆச்சரியம் அடைந்துதான் இருப்பீர்கள். இல்லாவிட்டால், உங்கள் முகத்தில் இத்தனை திகைப்புக் காணப்படுவானேன்?

"ஆமாம் ராமு, நானே மிகவும் ஆச்சரியமான மனிதன் தான். என் வாழ்க்கை முழுவதிலும் பிறருக்குப் புலப்படாத ஆச்சரியமான சம்பவங்களே நிறைந்து விட்டன. ஆனுல் அந்த ஆச்சரியங்கள், திகைப்புகள், சந்தேகங்கள் எல்லாவற்றிற்கும் இன்று முடிவு ஏற்படுத்தி விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.

"மிஸ்டர் ராமு, நீங்கள் எங்கும் அவசரமாகப் போக வேண்டியதில்லையே! எனக்காக ஓர் அரை மணி அவகாசம் ஒதுக்க முடியுமா ?"

"நன்றாக. நாங்களே உங்களைப் பார்த்துப் பேசத் தானே இப்பொழுது வந்திருக்கிறோம் ?"

என்னைப் பார்த்துப் பேசவா? நான் அல்லவா உங்களைப் பார்த்துப் பேசப் புறப்பட்டவன், சில யந்திரங்கள் வந்து இறங்கியிருப்பதால், அவற்றைப் பரிசிலனை செய்துவிட வேண்டுமென்று கோபாலையர் அழைத்ததால் இங்கே வந்துவிட்டேன்? போகட்டும்; நம் இருவர் மனமும் இவ் விஷயத்தில் ஒருமித்ததுபோல என் கோரிக்கையிலும் ஒருமித்துவிடுமாயின், என்னைச் சூழ்ந்து நிற்கும் சந்தேகங்கள், நான் ஊராரிடம் எழுப்பிவைத்த சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்து போகும். ராமு, மிஸ்டர் சுப்பிரமணியன், நாம் இங்கேயே பேசிக் கொண்டிருப்போமா? அல்லது வெளியே எங்கேயாவது தனியிடத்துக்குப் போவோமா?"

"வேண்டாம்; வேண்டாம். இங்கேயேதான் இருப்போம். நமக்கு விஷயந்தான் முக்கியமே தவிர, சூழ்நிலை எப்படி இருந்தால் என்ன? அப்படியும் இந்த இடத்தின் சூழ்நிலை ஒன்றும் குறைவாகிப் போய்விடவில்லை. இதோ குளிர்ந்த மேற்கத்திக் காற்று, அதோ செந்நிறம் காட்டும் வானம்; சுறுசுறுப்புடன் தங்கள் வேலையைச் செய்துகொண்டிருக்கும் கூலியாட்கள்; கண்ணெதிரே, உலகோர் எழுப்பும் கதைகளைப்போல எழுந்து நிற்கும் கட்டிடங்கள், அவற்றுக்குக் கோபுரம் போன்று அந்தப் புகைபோக்கி— இவற்றைவிட வேறு என்ன அழகிய சூழ்நிலை வேண்டும் ? சொல்லுங்கள் கதையை" என்று ராமகிருஷ்ணனை நான் உற்சாகப்படுத்தினேன்.

ராமகிருஷ்ணன் ஆரம்பித்தார்:—"மிஸ்டர் ராமு, என்னை இங்கே கண்டவுடன் நீங்கள் திகைத்துப் போனீர்கள். ஆனால் நான் ஏன் அவ்வாறு திகைப்படையவில்லை என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. பம்பாயில் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட நீங்கள் இவ்வூர்வாசி. என்னுடன் இந்தப் புதிய மில்லில் வேலை செய்யப் சிபாரிசு செய்யப்படுகிறீர்கள் என்பது எனக்கு ஒரு மாசத்துக்கு முன்பே தெரியும். உங்கள் அப்பா அவ் விஷயமாகக் கோபாலையருடன் பேச வந்த பொழுது அந்த உண்மைகளை நான் தெரிந்து கொண்டேன். உங்களை எப்படியாவது இங்கே வரவழைத்துவிட வேண்டுமென்று நானே உங்களுக்குக் கடிதம் எழுத நினைத்தேன் என்றால் நீங்கள் ஆச்சரியப் படலாகாது.

"ராமு, மனிதர்களில் சிலர், எவ்விதமான பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர் பாராமல் சில தருணங்களில் பிறருக்கு உதவி செய்ய முன் வருகிறார்கள் என்பதை முழுவதும் உண்மை என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். கேவலம் 'வந்தனம்' என்ற வார்த்தையையாவது, தங்களால் பலன் எய்துபவர்களிடமிருந்து அவர்கள் எதிர் பார்க்கத்தான் பார்க்கிறார்கள். அதுபோல, நீங்கள் பம்பாயிலிருந்து தெய்வச் செயலாக வந்ததும், உங்களை இங்கேயே தங்கவைத்துவிட வேண்டுமென்று இந்த மில்லில் உதவி மானேஜர் பதவியை உங்களுக்காக ஒதுக்கி வைத்தேன் என்றால், அதற்கு என் சுயநலந்தான் முக்கிய காரணமென்று சொல்லிக்கொள்ள நான் வெட்கப்படவில்லை. அதிலும் உங்கள் கதைகளில் என் மனைவியும் கோபாலையரும் அதிகமான விருப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய நேர்ந்தபோது, என் சுயநலம் உங்கள்

மூலம் எளிதில் நிறைவேறும் என்பது எனக்குப் பின்னும் நிச்சயமாயிற்று.

"ஆகவே உங்களைத் தனியே சந்தித்து நான் சொல்லவேண்டியவற்றைச் சொல்லி, என் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளக் காத்திருந்தேன். நீங்கள் பம்பாயி லிருந்து வந்ததும் தாயின் சேவையில் ஈடுபட்டுவிட்டதால், நம் சந்திப்பைத் தள்ளி வைத்துக்கொண்டே போனேன். இன்று காலையில் உங்கள் அப்பா வந்திருந்தார். உங்கள் அம்மாவுக்கு உடம்பு முற்றும் குணமாகிவிட்டது என்று அவர் தெரிவித்தபோது, கோபாலையர் மாலையில் உங்களைத் தம்மிடம் அனுப்பும்படி சொல்லி அனுப்பினர். நீங்கள் அவரையும் நளினியையும் பார்க்கு முன்பு, நான் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லிவிட்டால், என் கோரிக்கை இன்றே நிறைவேறிவிடுமென்று உங்கள் வீட்டுக்குப் புறப் பட்டவன், யந்திரங்களைப் பரிசிலனை செய்வதற்காக இங்கே வந்துவிட்டேன்.

"ராமு, உங்களை நான் பார்க்க விரும்பிய காரியம் இதுதான்: சந்தேகத்துக்கு இடமான ஆசாமிகளின் வார்த்தைகளை எவரும் அவ்வளவு எளிதாக நம்பிவிடுவ தில்லை. தகுந்த ருசு அல்லது சாட்சியம் இருந்தாலன்றி அவர்கள் மொழி எங்கும் எடுபடுவதில்லை. என்னைப் பற்றி, என் விசித்திரமான பம்பாய் வாழ்க்கையைப்பற்றி, நானே ஒரு சந்தேகத்தை இங்கே கிளப்பி வைத்து விட்டேன். அதை உறுதிப்படுத்தும் வண்ணம், இப் பொழுது ஒரு குழந்தையுடன் இங்கே வந்திருக்கிறேன்.

"மிஸ்டர் ராமு, இதற்குள் எங்களைப் பற்றிய கதை யனைத்தும் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக் கிறேன். தெரியாவிட்டால், இதோ எல்லாவற்றையும் கண்டறிந்த சுப்பிரமணியன் இருக்கிறார். அவரைக் கேட்டு

முதலில் அவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள். இல்லாவிட்டால் நான்பேசும் விஷயம்உங்களுக்குப் புரியவேபுரியாது.''

''இல்லே, வேண்டாம். அவைகளெல்லாம் அவனுக்குப் பல நாட்களுக்கு முன்பே தெரியும். அவைகளை வைத்துக் கொண்டு அவன் ஒரு கதைகூட எழுதியிருக்கிறான்'' என்றான் சுப்புணி, இங்கேயும் குறுக்கே விழுந்து.

''கதையா!'' என்று ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தார் ராமகிருஷ்ணன்.

''ஆமாம், அதை அதில் சம்பந்தப்பட்டவர்களில் நீங்கள் ஒருவர் படிக்கவேண்டியதுதான் பாக்கி.''

இந்தச் சுப்புணி சுத்த மோசமான பேர்வழி. சுவாரஸ்யமான விஷயம் ஏதோ ஒரு வேகத்தில் ஒரு மனிதரிடமிருந்து வந்து கொண்டிருக்கையில், இப்படியா இடையே விழுந்து அதை வேறு பாதையில் திருப்பிச் செல்வான்? இதற்காகத்தானே, உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு கதாசிரியனாக இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்?

''கதை இருக்கட்டும்; அது வெறும் பிதற்றல் புராணம். இருந்தாலும் அதை உங்களுக்குப் படிக்கத்தான் போகிறேன். இப்பொழுது நீங்கள் மேலே சொல்லுங்கள்'' என்று ராமகிருஷ்ணனை நான் துரிதப்படுத்தினேன்.

''சரி, கேளுங்கள். எங்கள் கதைதான் உங்களுக்குத் தெரிந்ததாயிற்றே? அன்று கோவில்பட்டியாரின் சந்தேகத்தை என் மறைவு எவ்வாறு பலப்படுத்திற்றோ, அவ்வாறே இன்று இவ்வூரின் சந்தேகத்துக்கு ஆணி அடித்துக் கொடுத்துவிட்டது நான் கொண்டுவந்த குழந்தை.

''ராமு, எங்கள் வாழ்க்கையைப்பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். அதன் முகவுரையை இப்பொழுது நான் கூறிக் கேட்டுவிட்டீர்கள். இனி எல்லோ

ருக்கும் மர்மமாக இருக்கும் என் பம்பாய் வாழ்க்கையின் பகுதியையும் படித்துவிடுங்கள். இதோ, இவை என் தினசரிக் குறிப்புப் புத்தகங்கள். முந்நூற்று அறுபத்தைந்து பக்கங்கள் அடங்கிய இரண்டு புத்தகங்கள் இருக்கின்றனவே என்று மலைக்காதீர்கள். இவைகளில் நீங்கள் படிக்க வேண்டிய பகுதி மிகவும் சொற்பமே. அவைகளின் தலைப்பில் நான் சிவப்பு அடையாளம் இட்டிருக்கிறேன்.

"மிஸ்டர் ராமு, இன்றைய எழுத்தாளர்களும் வைத்தியர்களும் ஒரு தரப்பட்டவர்கள் என்பதை எந்தச் சாதாரண மனிதனும் அறிந்திருப்பான். வைத்தியரிடம் வியாதியை மறைக்காமல் கூறினால், எப்படி அவர் தகுந்த மருந்தைக் கொடுத்து அதைக் குணப்படுத்திவிடுகிறாரோ, அது போன்று எழுத்தாளர்களும், உண்மையான குறிப்புகளைக் கொண்டு வாழ்வின் சிக்கல்களைத் தங்கள் பேனாமுனைச் சிகிச்சையினால் சரிசெய்துவிட முடியும் என்பது என் தீர்மானம். ஆகவே ரகசியமென்று கருதப்படும் என் நாட் குறிப்புப் புத்தகங்களை உங்களிடம் தருகையில், தன் மர்ம வியாதியைக் குணப்படுத்திவிடுவாரென்று நம்பியிருக்கும் நோயாளியைப் போன்ற நிலையில்தான் இருக்கிறேன் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இவைகளில் படிக்கும் விஷயங்களை நீங்கள் எவ்வாறேனும் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். கதையாக எழுதுங்கள்; கட்டுரையாக வரையுங்கள்; அல்லது பிரசங்கமாகப் பொழிந்து தள்ளுங்கள். ஆனால் அதற்குப் பிரதியாக நான் உங்களிடம் கோரி நிற்பது, பம்பாயில் நான் நடத்திவந்த தூய வாழ்க்கையைத் தகுந்த அத்தாட்சிகளுடன் நளினியையும் கோபாலையரையும் உணரச் செய்ய வேண்டும்; அவர்கள் உறவில் நான் எவ்விதக் களங்கத்தையும் காணவில்லை என்பதையும் அவர்கள் அறியவேண்டும்; அதோடு நான் அவர்களுக்கு

ஏற்படுத்தி வைத்துவிட்ட அவப்பெயரும் மறையவேண்டும் என்பவையே."

ராமகிருஷ்ணன் தம் டைரிகளை என்னிடம் தந்து விட்டு, என் 'வானவில்' கதையையும், நளினியின் 'அந்தி மயக்க'கதையையும் என்னிடமிருந்து வாங்கிக்கொண்டார்.

அவைகளை அவர் திருப்பிப் பார்த்ததும், "இரண்டு கதைகள் இருக்கின்றனவோ?" என்று கேட்டார்.

"ஆமாம்; அவை கதையின் முதல்பாகமும், இரண் டாம் பாகமும். முதல்பாகத்தை நான் எழுதினேன். இரண்டாவது பாகத்தைத் தங்கள் மனைவி எழுதியிருக் கிறாள். இப்பொழுது நீங்கள் எழுதியிருக்கும் மூன்றும் பாகத்தைப் படிக்கப் போகிறேன்" என்று கூறிவிட்டு அவர் டைரியைப் பிரித்தேன்.

ராமகிருஷ்ணனின் டைரிகளில் நான் புதுப் புது விஷயங்களைப் படித்தேன் என்பது ஒருபுறம இருக்கட் டும்; நாட்குறிப்பு எழுதுவதில் ஒரு நூதனமான, படித்து இன்புறுமாறு அமைந்த, பாணியை மேற்கொண்டிருந் ததையும் கண்டேன். அவைகளில் முக்கியமாகச் சிவப்பு அடையாளம் இட்டிருந்த நாட்குறிப்புகளில் சில, பல பக்கங் களுக்குப் போயிருந்தன. பற்பல நாட்களுக்குக் குறிப்பே எழுதப்படாமல் இருந்தது. ஓர் எழுத்தாளர் இவைகளைப் படிக்கப் போகிறார் என்று அவருக்கு முன்பே தெரியுமோ என்னவோ? ஆங்கிலத்தில் அவைகளை எழுதியிருந்தாலும், அழகாக, வேகமாகச் செல்லும் நடையில் எழுதியிருந்தார்.

அவர் சிவப்புக் குறியிட்டிருந்த முதற் பக்கத்தை நான் திருப்பினேன். அதன் ஆரம்பமே மிகவும் கவர்ச்சி யாக இருந்தது. 'விடிவெள்ளி' என்று அர்த்தம் கொடுக்கும் வார்த்தையுடன் அந்தக்குறிப்புத் தொடங்கிற்று. ஆகவே, இக்கதையின் மூன்றும் பாகத்துக்கு அவ்வார்த்தையையே தலைப்பாகக் கொடுப்பது எனக்கு எளிதாகிவிட்டது.

# மூன்றும் பாகம்

## விடிவெள்ளி

**மே-14 தேதி**

விடிவெள்ளி கீழ்வானில் மலர்ந்திருக்கையில், இன்று நான் கோவில்பட்டியை விட்டுக் கிளம்பினேன். 'கட கட', 'குடுகுடு' வென்று சல்லி ரஸ்தாவில் ஸ்டேஷனை நோக்கி அசைந்தாடிச் சென்றுகொண்டிருந்த அந்த மாட்டு வண்டியில் உட்கார்ந்து நான் கீழ்வானைக் கண் கொட்டாது நோக்கினேன்.

இரவுக்கும் பகலுக்கும் இடையில் கிடந்து தத்தளித்தது விடிவெள்ளி. கிட்டத்தட்ட என் நிலையைத்தான் அது நிகர்த்தது போலும்! ஆம், கடந்த ஒரு மாசமாக என்னைப் புண்ணாக்கின அவதூறு, முந்தாநாள் நான் கேட்ட நளினியின் பாசம் பொங்கும் வேண்டுகோள்; இவைகளுக்கு மத்தியில் நானும் இந்த விடிவெள்ளியைப் போலத்தானே தத்தளித்தேன்? அவ்வளவேன்? என் இந்த நிர்ணயமற்ற பயணத்துக்குக்கூட அந்தத் தத்தளிப்புத்தானே காரணம்?

பகலின் வெளிச்சத்தில் மனிதன் எவ்வளவு ஆறுதலைக் கண்டாலும், இரவின் பயங்கரத்தால் ஏற்படும் திகில் அவனைக் கலக்கத்தான் கலக்குகிறது. ஆனல் அதைத் திறந்து சொல்லியுங்கூட நளினிக்கு ஏன் அது தெரியவில்லை? பாசத்துக்கும் காதலுக்கும் நடந்த போரில் பாசந்தான் வெற்றி பெற்றது. தோல்வியுற்ற நான் எதற்காக ஊர்ப் பழியைச் சுமந்துகொண்டு அங்கே இருக்கவேண்டும்? என்றைக்காவது ஒரு நாள் உலகம் உண்மையை உணர்ந்து

கொள்ளத்தான் போகிறது. அதுவரையில் நான் தலை மறைந்திருப்பதுதான் நலம்.

ஆகவே கிளம்பிவிட்டேன்; எவருக்கும் அறிவிக்காமல் கிளம்பிவிட்டேன்.

"எந்த ஊருக்கு ஸார் டிக்கட்டு வேணும்?" என்று கேட்டான், 'கௌண்ட்டரு'க்குள்ளே இருந்த ரெயில்வே குமாஸ்தா

"இந்தப் பணத்துக்கு உங்கள் ரெயில் என்னை எது வரையில் ஏற்றிச் செல்லுமோ அது வரையில் டிக்கட்டுக் கொடு" என்றேன் நான், அவன்முன் நீட்டிய நோட்டுகளைப் பார்த்துக்கொண்டு.

அவன் டிக்கட்டுக் கொடுக்கும் ஒட்டை வழியாகத் தன் முகத்தை நீட்டி என்னை விநோதமாகப் பார்த்தான். ஆனால் விடிவெள்ளி வெளிச்சத்திலும் கேவலமான ஒளியையுடைய ரெயில்வே விளக்கின் வெளிச்சத்தில் என் முகம் அவனுக்குத் தெரிந்திருக்கவா போகிறது?

சட்டென்று முகத்தை இழுத்துக்கொண்டு, உள்ளேயிருந்த வேறொரு குமாஸ்தாவிடம், "பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு இங்கிருந்து என்ன ஸார் சார்ஜ்?" என்று அவன் கேட்டது பளீரென்று என் செவியில் விழுந்தது.

அவன் கொடுத்த டிக்கட்டைச் சந்தேகத்துடன் விளக்கடியில் கொண்டு போய்ப் பார்த்தேன். நல்ல வேளை! 'பைத்தியக்கார ஆஸ்பத்திரி' என்ற பெயர் அதில் இல்லை. "தாதர்-பம்பாய்" என்ற பெயரைப் பார்த்ததும், 'இப்போதைக்கு நம் பைத்தியத்தைப் போக்கும் ஆஸ்பத்திரி அதுதான்' என்று எண்ணிக்கொண்டு நடந்தேன்.

"ஸார், ஸார், பாக்கிச் சில்லறை வாங்கிக் கொள்ளாமல் போகிறீர்களே!" என்று உள்ளே யிருந்து கத்தினான் அந்த டிக்கட்டுக் கொடுப்பவன்.

"அதைச் சற்று முன் சொன்னாயே, அந்த இடத்திற்கு நீ போகும்போது டிக்கட்டு வாங்கவைத்துக்கொள்" என்று கூறிவிட்டுப் பிளாட்பாரத்தை நோக்கி நடந்தேன்.

மே-16 தேதி

இன்று மத்தியான்னம், கடப்பை ரெயிலடி ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் நினைத்தேன்: 'நாளைக்கு இவ்வேளையில் என் ஆஸ்பத்திரியை அடைந்துவிடுவேன். அங்கு என்ன சிகிச்சையை மேற்கொண்டு நான் சாதாரண மனிதனாக வாழப்போகிறேனோ?'

'மனிதன் நினைக்கிறான்; தெய்வம் நடத்துகிறது' என்பதுபோல் இருந்தது இரவு நடந்த விபரீதம். ஹைதராபாத் சமஸ்தானத்தின் வழியே நடு இரவில் ரெயில் போய்க்கொண்டிருந்தபோது, ஒரு பேரோசை என்னை விழிக்கச் செய்தது.

'ரெயில் தண்டவாளத்தை விட்டு விலகிவிட்டது; இஞ்சினும் முதல் மூன்று வண்டிகளும் குடை சாய்ந்துவிட்டன' என்ற திகிலான சமாசாரம் கடைசி வண்டியில் இருந்த எனக்கு எட்டியது. கதவைத் திறந்துகொண்டு வெளியே குதித்து விபத்து நடந்த இடத்துக்கு ஓடினேன். பிரயாணிகளில் பலர், விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி அளித்துக்கொண்டிருந்தனர்.

நிலவு மங்கும் நிலையில் இருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் எங்கும் இருள் சூழ்ந்துவிடும். அதற்குள், முடியும் மட்டும் வண்டிகளுக் கிடையே அகப்பட்டுக்கொண்டிருப்பவர்களில் விடுவிக்கக்கூடியவர்களை விடுவித்துவிட வேண்டுமென்று ஒவ்வொருவரும் மும்முரமாகவும் துரிதமாகவும் உதவும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

நானும் என்னாலான கைங்கரியத்தைச் செய்ய அவர்களுடன் கலந்துகொண்டேன். ஏதோ ஒரு வண்டியில்

கதவுக்கும் நிலைக்கும் இடையில் அகப்பட்டுக்கொண் டிருந்த ஒரு சரீரத்தை நான் தூக்கிவந்து கிடத்தினேன். அவள் ஒரு பெண். கர்ப்பிணி போலக் காணப்பட்டாள். சடாரென்று பின் வண்டிகளில் ஒன்றுக்கு ஓடி என் சட்டையை அங்கிருந்த கக்கூஸ் ஜலத்தில் நனைத்தெடுத்துக் கொண்டு வந்து அவள் முகத்தில் பிழிந்தேன். காய மொன்றும் படாதிருந்ததால், அந்தப் பெண் சீக்கிரமே பிரக்ஞை அடைந்துவிட்டாள். கண்களை விழித்ததும், அவைகளை இன்னும் அகலமாகத் திறந்துகொண்டு, "அண்ணையா !" என்றாள்.

அவள் ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவள் என்பது எனக்கு உடனே தெரிந்து போயிற்று. கோவில்பட்டியில் என் பக்கத்து வீட்டுத் தெலுங்கருடன் வேடிக்கையாகப் பேசிப் பேசிச் சிறிது தெலுங்கு பாஷை கற்றுக்கொண் டிருந்தேன். அதைக்கொண்டு அவளுடன் பேச்சைத் தொடர்ந்தேன்.

"உங்கள் அண்ணா இந்த வண்டியில் வந்தாரா அம்மா ?" என்று நான் அவளைக் கேட்டேன்.

"எனக்கு எப்படித் தெரியும்? என்னைப் பின் தொடர்ந்து இங்கேயும் வந்திருக்கிறாய் என்பதை, இதோ என்முன் உட்கார்ந்திருப்பதி லிருந்துதான் தெரிந்து கொண்டேன்."

நன்றாயிற்று ; இந்தப் பெண் என்னை அவளுடைய அண்ணாவாக அல்லவா எண்ணிவிட்டாள் போலிருக்கிறது? உடனே நளினியைக் கொண்டு நடத்திவைத்த நாடகத்தின் விளைவு என்முன் வந்து நின்றது. போதும், ஒரு விபரீதம். இனி வேண்டாம் இந்த நாடகம்.

"நான் உங்கள் அண்ணா இல்லையம்மா ; ஏதோ ஆள் மாறாட்டமாகப் பேசுகிறீர்கள்."

"பயப்படாதே அண்ணு; நான் மறுபடியும் உன் வீட்டில் காலடி எடுத்து வைக்க மாட்டேன். மதனியும் நீயும் சேர்ந்து எனக்குக் கட்டிவைத்த பழியை என்றென்றும் மறக்க மாட்டேன். நீ போ இங்கிருந்து. எதற்காக என்னை இப்படித் தொடர்ந்து வந்து துன்புறுத்துகிருய்? இன்னும் ஏதாவது பழியைச் சுமத்தலாம் என்ரு? அல்லது எவர் காலடியில் விழுந்து என் குறை வாழ்நாளைத் தள்ளலாம் என்று புறப்பட்டேனே அவர் மனசையும் களங்கப்படுத்தி விடவேண்டுமென்ரு? கடவுளே, இந்த விபத்தில் எத்தனையோ பேர்களைக் கொன்றிருக்கிருயே; அவர்களோடு என்னையும் கொன்றிருக்கலாகாதா?''

அந்தப் பெண் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

**மே-17 தேதி**

இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு மறுநாள் வந்து விடுகிறது என்பது ரெயில்வே கால அட்டவணையின்படி ஏற்பட்டுவிடுகிறது. அப்படியானுல் அந்தப் பெண்ணை, அவள் அண்ணன் நானல்ல என்று நம்பச் செய்து, அவளுடைய சரித்திரத்தைக் கூறச் செய்த சம்பவங்களை இன்றைத் தேதியில் எழுதுவது சரியானதே யாகும். மேலும், நேற்றைத் தேதித் தாளில் இன்னும் ஒரு வார்த்தை எழுதக்கூட இடம் இல்லையே!

சௌரம்மா என்ற அந்தப் பெண்ணின் பூர்விகம் பார்வதிப்பூர் என்ற கிராமம். சிறுவயதில் பெற்ரோர் இறந்துவிட்டதால் அண்ணன் வாமன ராவின் போஷிப்பில் அவள் வளர்ந்தாள். அண்ணன் என்னவோ நல்லவன் தான். ஆனுல் அவனுக்கு வாய்த்திருந்த மனைவி ராக்ஷஸி யாக இருந்தாள். அவள் போதனையைக் கேட்டுக்கொண்டு வாமன ராவ் தன் தங்கையைத் தெரிந்தும், சூதாடியும்

குடிகாரனுமான ஒரு வாலிபனுக்கு வாழ்க்கைப்படுத்தி வீட்டை விட்டு ஒழித்துவிட்டான்.

சௌரம்மாவின் கணவன் பம்பாயில் வேலைபார்த்து வந்தான். ஆரம்பத்திலிருந்தே அவனிடம் அடியும் மிதியும் வாங்குவது அவளுக்குச் சகஜமாகப் போய்விட்டது. எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு இரண்டு வருஷங்களை அவனுடன் கழித்தாள்.

கணவனின் குடியும் சூதாட்டமும் வளர்ந்துகொண்டே போயின. சம்பாதித்த தெல்லாவற்றையும் தொலைத்து விட்டு, ஒவ்வொன்றாய்ச் சௌரம்மாவின் நகைகளையும் அவன் கரைத்தான். கடைசியாக ஒருநாள் நன்றாகக் குடித்துவிட்டு வந்து அவள் மாங்கலியத்தைச் சூதாட்டச் செலவுக்குக் கழற்றித் தரும்படி அடித்துத் துன்புறுத்திய போது, அவளால் பொறுக்க முடியவில்லை. அவள் அவனை முதல் முறையாக எதிர்த்தாள். அந்த எதிர்ப்பின் பலன் அவளை வீட்டை விட்டுத் துரத்தியது.

மூன்று மாசக் கர்ப்பிணியாக இருந்த அவள் வேறு புகலில்லாததால், தன் அண்ணன் வேலையாயிருந்த அதோனிக்கு மறுபடியும் வந்தாள்.

மதனி என்ற அரக்கி 'குதி குதி' என்று குதித்தாள். கணவன் ஏதோ சந்தேகப்பட்டு அவளை வீட்டை விட்டு விரட்டிவிட்டானென்றும், அதனால் அவளுக்குத் தன் வீட்டிலும் இடம் இல்லை என்றும் கத்தினாள். ஆனால் பேதை சௌரம்மா வயிற்றில் இருந்த சிசுவுக்காகத் தன்னை உயிருடன் வைத்துக்கொண்டிருக்க விரும்பி, அண்ணனின் கால்களைப் பிடித்துக் கொண்டு தனக்கு ஆதரவு அளிக்கும்படி மன்றாடினாள். அண்ணனின் உள்ளம் கசிந்தது. என்ன இருந்தாலும் ரத்த பாசம் விட்டுப் போகுமா?

ஆனால் மனைவியாகிய ராக்ஷஸியின் மனசில் அது ஆத்திரத்தையே கிளப்பியது. கல்யாணமாகிப் பத்து வருஷங்களுக்கு மேலாகியும், தனக்கு ஒரு குழந்தை பிறக்காத போது, நேற்றுத் தாலி கட்டிக்கொண்ட இந்தப் பெண், குழந்தையும் கையுமாய்க் கொழித்துக் கொண்டிருப்பதா என்ற கெட்ட எண்ணம் அவளிடம் உதித்தது.

நான்கு மாசங்களாகச் சௌரம்மாவின் கருவை எப்படியாவது அழித்து விடவேண்டுமென்று அவள் செய்த பிரயத்தனங்களெல்லாம் பயனற்றுப் போயின. ஆகவே அவளை மறுபடியும் வீட்டை விட்டுத் துரத்திவிட வழி தேடிவிட்டாள்.

நேற்றுப் பகலில் அவள் யாரோ ஒரு சோதாப் பயலையும் சௌரம்மாவையும் ஓர் அறையில் அடைத்துப் போட்டுவிட்டு, தன் கணவனையும் ஊராரில் சிலரையும் அழைத்து வந்துவிட்டாள்.

முடிவு என்ன?

அடியையும் மிதியையுமாவது சகித்துக்கொண்டிருக்கலாம்; இது போன்ற கொடுமையைச் சகித்திருக்க முடியாதென்று சௌரம்மா கணவனிடம் கிளம்பிவிட்டாள்.

இந்தக் கதையை அவள் கூறி முடித்ததும், "ஆமாம்; இப்பொழுது பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டீர்களே; அங்கு உங்கள் கணவர் உங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தால்........?" என்று நான் கேட்டேன்.

"மறுத்தால் என்ன? பம்பாய் ஒரு தீவு என்பது எனக்குத் தெரியும். அதைச் சுற்றிலும் சமுத்திரம் இருக்கிறது" என்றாள் அவள்.

அந்த அபலையினிடம் எனக்கு இரக்கம் பிறந்தது.

மே - 19 தேதி

இன்று உச்சிவேளையில் நாங்கள் தாதரில் வந்து இறங்கினோம்.

"உங்கள் கணவர் எங்கே வசிக்கிறார்? அவரிடம் உங்களைக் கொண்டுபோய் ஒப்படைத்து விட்டுப் போகிறேன்'' என்று செளரம்மாவிடம் சொன்னேன்.

"வேண்டாம்; உங்களுக்கு எதற்கு அந்தச் சிரமமெல்லாம்? மாதுங்கா இங்கிருந்து அதிகத் தூரம் இல்லை. என் கணவர் வசிக்கும் வீட்டுக்கு எனக்கு வழி தெரியும். மேலும் அயல் மனிதர் ஒருவருடன் நான் வந்து இறங்குவதை அவர் பார்த்துவிட்டால் போதும். அவ்வளவுதான், அங்கே மூண்டுகொண்டிருக்கும் தீ ஜுவாலை படர்ந்து எரிய ஆரம்பித்துவிடும்.''

"நான் ஒன்றும் அயலானல்லவே? நான் உங்கள் தமையன் அல்லவா?'' என்று அவளுக்குப் பதில் கூறிவிட்டு டாக்ஸி ஒன்றை வாடகை பேசிக்கொண்டு வந்தேன்.

அவள் கணவன் வசித்துவந்த வீட்டை நாங்கள் அடைந்தோம். ஆனால் அங்கு வேறு யாரோ குடியிருந்தனர். அவர்களை விசாரித்தபோது கேசவ ராவ் ஏதோ களவுக் கேசில் பிடிபட்டு ஒன்றரை வருஷம் தண்டனை அடைந்துவிட்டதை அறிந்தோம்.

நான் எதிர்பார்த்தபடி இந்தச் செய்தியைக் கேட்டதும் செளரம்மா கதறவும் இல்லை, கண்ணீர் விடவும் இல்லை. சாந்தமாக என்னை நோக்கி, "நீங்கள் எதற்காகக் காத்திருக்கிறீர்கள்? நீங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போகலாமே'' என்றாள்.

"நீங்கள்?''

"நானும் போகவேண்டிய இடத்திற்குப் போய்விடுகிறேன்.''

"அது முடியாது; எந்தச் சகோதரனும் தன் உடன் பிறந்தவளை, அதிலும் கர்ப்பிணியை, உயிருடன் பலி கொடுக்கத் துணிவு கொள்ளமாட்டான்."

"ஆனல் அந்தச் சகோதரன், இப்பொழுது எனக்கு இந்த வழியைத்தானே காட்டியிருக்கிருன்?"

"தவறு; எல்லாச் சகோதரர்களும் அவ்வளவு கடின சித்தமுடையவர்களாக இருப்பதில்லை."

"நீங்கள் எதற்காக உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத விஷயங்களிலெல்லாம் இவ்வளவு கவனம் எடுத்துக்கொள் கிறீர்கள்?"

"நீங்கள் என்னை 'அண்ணு' என்று அழைத்ததனல்."

"ஆமாம்; உங்களை அண்ணு என்று அழைத்த நான் பாவிதான்; அந்த அண்ணுவிற்கும் இந்த அண்ணுவிற்கும் எவ்வளவு வித்தியாசம்?"

ஹோட்டலில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டதும் அந்த மானேஜர், "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"என் பெயர் வாமன ராவ்" என்றபோது சௌரம்மா என்னை வியப்புடன் பார்த்தாள்.

"கூட வந்திருப்பவர் யார்? தங்கள் மனைவியா?"

சீ! இந்த உலகந்தான் எவ்வளவு கேவலமான பார் வையை உடையது? ஓர் ஆடவனையும் பெண்ணையும் சேர்ந்து பார்த்துவிட்டால், உடனே அவர்கள் தம்பதி களாகத்தான் அதன் கண்ணுக்குத் தோற்றுகிருர்கள்.

"இல்லை; இவள் என் சகோதரி" என்று கோபத் துடன் அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு, சாமான்களை எடுத்துக்கொண்டு அறையை நோக்கி நடந்தேன்.

ஜூன் - 19 தேதி

சரியாக ஒரு மாசம் சுற்றுச் சுற்றென்று சுற்றிய

பிறகு, இன்று பம்பாயில் நாங்கள் குடியிருக்க ஓர் இடத்தைப் பேசி அமைத்தேன்.

"இடம் பிடித்துவிட்டோம். நாளைக்கு நாங்கள் அங்கே போகிறோம்" என்று ஹோட்டல் கணக்கைத் தீர்க்கும்போது அந்த மானேஜரிடம் சொன்னேன். அவன் 'ஆ' என்று பெருமூச்சு விட்டதை அப்பொழுது பார்க்க வேண்டுமே! "நீங்கள் பாக்கியசாலிதான் ஸார்; ஆயிரம் இரண்டாயிரம் கைக்கூலி கொடுக்கத் தயாராயிருப்பவர்களெல்லாம், இன்று பம்பாயில் இடம் கிடைக்காது கஷ்டப்படுகிறார்கள். நீங்கள் எப்படியோ.......?" என்று அவன் பேசிக்கொண்டே போனான். ஆனால் நான்கூட அப்படி ஒரு பெருந் தொகையைக் கொடுத்துத்தான் இடம் பிடித்தேன் என்பது அவனுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது? ஆம்! நிறை கர்ப்பிணியாக இருக்கும் சகோதரி நாளைக்குப் பிரசவித்து வந்துவிட்டால் அவளும் குழந்தையும் உட்காரச் சாண் இடம் வேண்டாமா?

ஜூன் - 30 தேதி

எந்த நாடகத்தை நடிக்கக்கூடாது என்று ஆரம்பத்தில் எண்ணியிருந்தேனோ, அதையே முழுவதும் நடிக்க வேண்டியதாயிற்று. சௌரம்மாவுக்குத் தமிழ் கொஞ்சமும் தெரியாது. ஆகவே அவள் தெலுங்கிலும், நான் தமிழிலும் பேசிக்கொண்டு ஒரே வீட்டில் ஒன்றாய் வசித்தால் இந்தச் சண்டாள உலகம் என்ன நினைக்கும்? அன்று அந்த ஹோட்டல் மானேஜர் முதல் பார்வையிலே கேட்ட கேள்வி!

ஆகவே என்னை வாமன ராவாகவே பம்பாய்க்கு அறிமுகப்படுத்திக்கொண்டேன். தொட்டதற்கெல்லாம் சந்தேகப் பார்வையைப் பாய்ச்சும் உலகின் கண்களைக் கட்ட, எங்கள் பிறப்பு வளர்ப்பைப் பற்றியும் ஓர் விசித்திரமான தையை வளர்த்தேன்.

பர்மாவாசியான வாமன ராவ், தன் சகோதரியின் கணவன் மிலிடரியில் சேர்ந்தவன் திரும்பி வராது போகவே அந்த நாட்டில் இருக்கப் பிடிக்காமல் இந்தியாவுக்கு வந்திருக்கிறான்.

சீ! பொய் உலகில் பொய் இல்லாமல் மனிதன் ஜீவிக்கவே முடியாது போலிருக்கிறதே!

ஜுலை - 6 தேதி

இன்று சௌரம்மா ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். எனக்கு மருமகன் கிடைத்து விட்டான் என்றபோது சிறு குழந்தையைப்போல நான் பெருமைப் பட்டேன்.

ஜுலை - 16 தேதி

நர்ஸிங்ஹோமிலிருந்து சௌரம்மா இன்று வீடு திரும்பி விட்டாள். இருந்தாலும் அவள் முகத்தில் முதற் குழந்தையைப் பெற்றெடுத்த தாயின் களிப்புக் காணப்படவில்லை.

மிகவும் வற்புறுத்திக் கேட்டபொழுது, குழந்தை தன் கணவனின் நினைவைச் சதா எழுப்பிக்கொண்டிருக்கிறது என்று சொல்லி அழுதாள்.

"ஆமாம், இன்று நினைவை எழுப்புபவன் நாளைக்கு அவரையே கொண்டுவந்து விடுவான்; பார்'' என்று அவளுக்கு ஏதோ சமாதானம் கூறினேன்.

ஜுலை - 30 தேதி

பணம் என்பது களிமண்ணிலும் எளிதாகக் கரையக் கூடிய வஸ்து. ஊரிலிருந்து புறப்பட்டபோது இரண்டாயிரம் ரூபாய் என் பெட்டியில் இருந்தது. ஆனால் இன்று - இரண்டரை மாசங்களுக்குப் பிறகு - என் கையில் மிஞ்சியிருப்பது இரண்டே இரண்டு ரூபாய்தான்.

பம்பாயில் பணத்தின் பெறுமானம் எவ்வளவு திருணமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது! இல்லாவிட்டால், ஒன்

றுக்கு இரண்டாக வாடகை கொடுத்துங்கூட இந்த வீட்டுக்கார ஸேட் வாய் கூசாமல், ''ஆயிரம் ரூபாய் 'பகடி' கொடுத்தால்தான் வீடு தர முடியும்'' என்று சொல்லுவானு?

அப்புறம் சௌரம்மாவின் நர்ஸிங்ஹோம் பீஸ்; குழந்தைக்கு ஆகார வகைகள்; அவளுக்கு டானிக்குகள்; வீட்டுச் செலவுகள்.

இந்தச் செலவு ஒன்றும் பிரமாதமானதல்ல; எப்படியாவது என் சகோதரியை அவள் கணவனிடம் சேர்த்து விட்டேனுனல் போதும்.

ஜூலை - 31 தேதி

இன்று காலையில் பக்கத்து வீட்டிலிருந்த கிருஷ்ணசாமியிடம் பத்து ரூபாய் கைமாற்று வாங்கி வந்தபோது, "எங்கேயாவது ஓர் உத்தியோகம் இருந்தால் சொல்லுங்கள் ஸார்'' என்று சொன்னேன்.

''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் அவர்.

நான் அவருக்குப் பதில் கூறியதும், மனிதர் மூக்கின் மேல் விரலை வைத்துக்கொண்டு, "இவ்வளவு சக்தியை வைத்துக்கொண்டா, இத்தனை நாட்களாய் வேலை கிடையாமல் திண்டாடினீர்கள்?'' என்று கேட்டார்.

மாலையில் காரியாலயத்திலிருந்து திரும்பியதும், என்னிடம் தமது பெயரடித்த சீட்டு ஒன்றைக் கொடுத்து, "இந்தச் சீட்டுடன் நாளைக்கு என்னை ஆபீசில் வந்து பாருங்கள் என்றூர்.''

ஆகஸ்டு - 1 தேதி

வேலை கிடைத்துவிட்டது.

மாலையில் காரியாலயத்திலிருந்து திரும்பியதும் சௌரம்மாவிடம் சொன்னேன்: "உன் அண்ணு வாமன

ராவ், இப்பொழுது 'அப்பலோ' மில்லில் உதவிக் காரிய தரிசி. முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் கௌரவமான பதவி வகிப்பவர்."

"குயில் குஞ்சு பொரிக்கக் காக்கை அடைகாக்கிறது. ஆனால் என்ன பிரயோசனம்? நாளைக்குக் குஞ்சுக்கு இறக்கை முளைத்ததும் அது தாய்ப் பறவையை நோக்கி ஓடிவிடுமே!" என்றாள் அவள்.

அவள் உள்ளக் கிடக்கையின் எதிரொலி அவ் வார்த்தை.

அக்டோபர் - 7 தேதி

என்றும் இல்லாதபடி இன்று நளினியின் நினைவு என் உள்ளத்தில் எழுந்தது.

அவளை எந்த வாழ்வில் நுழைத்துப் பிறகு பிரிக்க முடியாமல் தோற்று ஓடிவந்தேனோ, அதே வாழ்க்கையைத் தானே நானும் மேற்கொண்டிருக்கிறேன்? இப்பொழுது என்னைச் சௌரம்மாவிடமிருந்து பிரிக்க யாராவது முற் பட்டால் அது எளிதில் நடக்கக்கூடியதா? சீ! எவ்வளவு மடத்தனமாக அன்று என் உத்தம மனைவியைத் தவிக்க விட்டு வெளியேறி விட்டேன்!

அவளுக்கு ஆறுதலாக ஒரு கடிதமாவது, என் வாழ்க்கையை உணர்த்தும் குறிப்பாவது எழுதவேண்டு மென்று தோன்றிற்று.

"நீ எதில் ஆறுதலைக் கண்டாயோ, அதிலே நானும் ஆறுதலைக் கண்டுகொண்டு சௌக்கியமாக இருக்கிறேன்...." என்று ஓர் குறிப்பை எழுதி அனுப்பி விட்டேன், ஏதோ ஒரு வேகத்தில்.

அக்டோபர் - 10 தேதி

நளினிக்கு எழுதிய குறிப்பின் பிரதியைக் கையில் வைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். பூடக

மாக எழுதவேண்டுமென்று எழுதிய குறிப்பு இவ்வளவு விபரீதமாகத் தொனிக்கும் என்று நான் அப்பொழுது எண்ணிப் பார்க்கவே இல்லையே!

அன்று ஊர்ப்பழியைக் கூறி அவளைப் பிரித்து அழைத்து வந்துவிட முயன்றதும், யாருக்கும் அறிவிக்காமல் தலைமறைந்து வந்ததும் இவை எல்லாம் சேர்ந்து அவள் நடத்தையில் நானும் சந்தேகம் கொண்டுவிட்டதாக அல்லவா முடிவு கொள்ளச் செய்திருக்கும்? அப்படியிருக்க, என்னுடைய இந்தக் குறிப்பு அதைத் தீர்மானப் படுத்துவதோடல்லாமல், நானும் கெட்ட வழியில் பிரவேசித்திருக்கிறேன் என்றல்லவா அவளுக்கு அறிவித்துவிடும்?

கொஞ்சங்கூட ஆலோசித்துப் பாராமல், மாற்ற முடியாத வீண் சந்தேகத்தை ஏன் நானே கிளப்பி வைத்து விட்டேன்?

ஜனவரி - 4 தேதி

நான்கைந்து நாட்களாகச் சௌரம்மாவுக்கு மாலை தோறும் ஜுரம் வந்துகொண்டே இருக்கிறது. அவள் உடம்பும் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வருகிறது.

மாலையில் மில்லிலிருந்து வந்ததும் அவளை டாக்டரிடம் காட்ட அழைத்துச் சென்றேன்.

“மிஸ்டர், க்ஷயரோகத்தை இவ்வளவு தூரம் முற்ற விட்டு விட்டீர்களே! இனிமேல் மருந்துகள் என்ன பலன் அளிக்கப்போகின்றன?” என்ற அதிர்ச்சியான செய்தியை அவர் அறிவித்தார்.

அட பாவமே! கடைசியாக இந்த அபலைப் பெண் கணவனைக்கூடப் பார்க்க முடியாமல்....?

ஜுலை - 6 தேதி

ஆங்கிலத் தேதிக் கணக்குப்படி இன்று மருமகனுக்கு ஒரு வயசாகிறது. நாலு சிநேகிதர்களைக் கூப்பிட்டு ஒரு

வேளைச் சாப்பாடாவது போடுவோமென்றால், சௌரம்மா வின் தேகநிலை மிகவும் மோசமாக அல்லவா இருக்கிறது?

அப்படியும் அடுத்த வீட்டுக் கிருஷ்ணசாமியையும், இன்னும் நெருங்கிய சிநேகிதர்கள் ஒருவர் இருவரையும், மாலையில் ஒரு 'பார்ட்டி'க்கு அழைத்திருந்தேன்.

கிருஷ்ணசாமி புதிய சிநேகிதர் ஒருவரை எனக்கு அப்பொழுது அறிமுகம் செய்து வைத்தார். அவர் ஓர் எழுத்தாளராம். கிழவர் மாதிரி தலையெல்லாம் வழுக்கை விழுந்து காணப்பட்ட அவர் நம் வயசுடைய வாலிபர்தாம் என்று கிருஷ்ணசாமி சொன்னபோது, நான் பரிதாப மாக அவரை நோக்கினேன்.

"நீங்கள் யாராவது ஒரு வைத்தியரிடம் உங்கள் தலை யைக் காட்டக்கூடாதா?" என்று நான் அவரைக் கேட்ட தற்குக் கிருஷ்ணசாமி சிரித்துக்கொண்டே சொன்னார்: "தலையையா? தலையெழுத்தையா? ராவுஜீ, அவன் தலை யிலிருந்து உதிர்ந்த ரோமம் ஒவ்வொன்றும் வாசகர்களுக்கு ஒவ்வொரு புதுமையைக் கொண்டு வந்து கொடுத்திருக் கிறது. ஆகவே அவன் வழுக்கை வளர வளர நான் பெரு மைப்படவே செய்கிறேன்."

நாங்கள் எல்லாரும் சிரித்தோம். அந்த எழுத்தாள ரும் தம் வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டே சிரித் தார். கூடவே இன்னொரு சிரிப்பொலியும் எனக்குக் கேட்டது. அது சௌரம்மாவினுடையது. அவள்கூட அந்த ஹாஸ்யத்தைப் புரிந்துகொண்டாள் போலும்.

பாவம்! அவளுடைய சிரிப்பொலியை நான் கேட்டு எவ்வளவு நாளாயிற்று?

**நவம்பர் - 30 தேதி**

சௌரம்மாவின் நிலைமை மிகவும் மோசமடைந்து விடவே, வேலையை ராஜிநாமாச் செய்து விட்டு வீட்டில்

தங்க நிச்சயித்து விட்டேன். அவளையும் குழந்தையையும் கவனிக்கத் தனித்தனியே ஆட்களை ஏற்படுத்தியிருந்தும், நினைவு வரும் சமயத்தில் அவள் 'அண்ணு, அண்ணு!' என்று புலம்புவதால், நான் எப்பொழுதும் அவள் அருகில் இருக்க வேண்டியது அவசியமாகிவிட்டது.

"உன் அண்ணுவுக்குத் தந்திகொடுக்கட்டுமா?" என்று நேற்றிரவு அவள் நினைவுடன் இருக்கையில் கேட்டேன்.

"என் அண்ணு அருகிலே இருக்கும்போது தந்தி கொடுத்தால் அதுவும் இங்கேதான் வந்து சேரும்" என்ருள் அவள், பளிச்சென்று.

அவள் முகத்திலும் பேச்சிலுங்கூட இன்று ஒரு தெளிவு காணப்படுகிறது.

டிசம்பர் - 3 தேதி

காரியாலயத்தில் சம்பளப் பணத்தைக் கணக்குத் தீர்த்து வாங்கும் பொருட்டுக் காலையில் சென்றவன், மாலையில்தான் திரும்ப முடிந்தது.

வீட்டில் நுழைந்ததும் நடையில் ஒரு புதிய மனிதர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்.

"நீங்கள் வாமனராவ்தானே?" என்று கேட்டார் அவர், என்னை உற்று நோக்கிக் கொண்டு.

"ஆமாம்; உங்களுக்கு என்ன வேண்டும்?"

"என்னை அடையாளம் தெரியவில்லையா? நான் கேசவனல்லவா?"

நல்ல வேளையாக நான் சட்டென்று புரிந்துகொண்டேன். "உள்ளே வா கேசவா; விதி உன்னை எப்படிக் கொடுமைப்படுத்திவிட்டதோ, அப்படியே உன் மனைவியையும் செய்திருக்கும் அலங்கோலத்தை வந்து பார்" என்று செளரம்மாவின் கணவனின் கைகளைப் பிடித்து உள்ளே அழைத்து வந்தேன்.

ஆனால் அந்த அபாக்கியப்பெண் தன் கணவனைப் பார்க்க உயிருடன் இருக்கவில்லையே !

டிசம்பர் - 4 தேதி

சௌரம்மாவின் ஈமக்கடன்கள் நிறைவேறி விட்டன. அவளுக்கு இந்தப் பைசாச உலகிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டது. ஆனால் எனக்கு?

'உனக்கும் விடுதலை கிடைத்துவிட்டது. நீ பிணைத்துக் கொண்டிருந்த பந்தங்கள் அறுபட்டுவிட்டன. ஒன்று மறைந்துவிட்டது; மற்றொன்றுக்கு உரியவன் வந்து விட்டான். குழந்தையைக் கேசவனிடம் ஒப்படைத்து விட்டு நீ உன் மனைவியிடம் போ' என்றது என்னுள்ளிருந்து ஏதோ ஒன்று.

டிசம்பர் - 6 தேதி

கடைசியாகக் குழந்தையைக் கேசவனிடமே ஒப்படைத்துவிடுவதென்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டேன். 'ஜெயில்வாசம் அவன் குணங்களைத் திருத்திவிட்டது; மனைவியை இழந்த சோகத்தை வீட்டைவிட்டு வெளியேவராது, எவ்வளவு மௌனமாக அவன் அநுபவித்து வருகிறான்!' என்று பச்சாத்தாப முற்றேன்.

மருமானை விட்டுப் பிரியுமுன், அவனுக்கு என் ஞாபகார்த்தமாக ஏதாவது விலை உயர்ந்த பொருள் ஒன்று வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று, சாயங்காலம் கடை வீதிக்குப் புறப்பட்டேன்.

"நாயனா!" என்று அவன் அச்சமயம் கால்களை வந்து கட்டிக்கொண்டபோது என் மனம் எவ்வளவு வேதனை அடைந்தது! ஆமாம், அந்தச் சொல் என்னைப் பார்த்து அவன் சொல்லக்கூடியதல்ல; அதை நிறுத்திவிட வேண்டுமென்று நான் எவ்வளவு பாடுபட்டேன்!

ஆனால் சிறு குழந்தைகளும் மைனாப்பறவைகளும் ஒன்றேயன்றோ? புதிதாகக் கற்றுக்கொண்ட வார்த்தையைச் சொல்லிச் சொல்லிப் பார்ப்பதில் அவை எவ்வளவு ஆனந்தத்தை அடைகின்றன!

இதுகூடப் பெரிதல்ல; ஆனால் அவனுடைய இந்த உறவுமுறைக்குச் சௌரம்மா காட்டிய காரணத்தை நினைக்கும்போதுதான் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. "அண்ணா, பெற்றுவிட்டால் மாத்திரம் ஒருவர் குழந்தைக்குத் தந்தையாகி விடமாட்டார். எவர் அதை ஆதரித்து வளர்க்கிறாரோ அவர்தாம் குழந்தைக்கு உரிமை கொண்டாடும் தந்தை" என்ற அந்த வாக்கியங்களில் அவள் எவ்வளவு நன்றியறிதலைப் பொதிந்து வைத்திருந்தாள்!

என் கால்களைக் கட்டிக்கொண்டிருந்த குழந்தையிடம், "உன் நாயனா அதோ இருக்கிறார் பாரடா" என்றேன்.

குழந்தை உடனே என்னிடமிருந்து கேசவனை நோக்கிப் பாய்ந்தது. ஆனால் அவன், பாய்ந்து வந்த குழந்தையைக் கையில் ஏந்திக்கொள்ளாமலே, "நீங்கள்தாம் வெளியே போகிறீர்களே; அவனையும் சற்றுக் கொண்டு போய் வாருங்கள். என்மனம் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் இல்லை" என்றான், வெகுநாள் அந்தக் குழந்தையிடம் அநுபவப்பட்டுத் துன்பமுற்றவன் போல.

"இவனிடம் குழந்தையை ஒப்படைப்பது சரியா?" என்று என்னை நானே கேட்டுக்கொண்டு, குழந்தையுடன் கடைவீதிக்குச் சென்றேன்.

திரும்பி வந்தபோது கேசவன் வீட்டில் இல்லை. என் கைப்பெட்டியுடன் அவன் எப்பொழுதோ மறைந்திருந்தான்!

டிசம்பர் - 7 தேதி

இன்று குழந்தையுடன் நளினியிடம் புறப்பட்டுவிட்டேன்.

டிசம்பர் - 11 தேதி

கோவில்பட்டியிலிருந்து அவர்கள் ஊருக்குப் போய் விட்டார்கள் என்பதை அறிந்து இன்றிரவு இங்கே வந்து இறங்கினேன்.

பங்களா வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த கோபாலையர், "ராமகிருஷ்ணனு? வந்தாயா அப்பா? உள்ளே போ" என்றார்.

நளினி என்னை மௌனமாக வரவேற்றாள். கையில் இருந்த குழந்தையை, "ஏது?" என்று கேட்காமலே வாங்கிக்கொண்டு உச்சி மோந்தாள்.

அது, "அம்மா" என்று அவளைக் கட்டிக்கொண்ட போது, அவள் பூரிப்புடன் என்னை நோக்கினாள்.

"இனி எங்கும் போகவேண்டியதில்லையே, ராம கிருஷ்ணு? போவதானால் சாவித்திரியையும் கூட்டிக் கொண்டு போய்விடு அப்பா. என் சாந்திக்காக இனி எந்தத் தம்பதிகளையும் பிரித்துப் பார்க்கமாட்டேன்" என்றார், உள்ளே வந்த கோபாலையர்.

நான் அவர் பாதங்களில் நமஸ்கரித்து, "இனி உங்களை விட்டு நாங்கள் எங்குமே போகப் போவதில்லை" என்று கூறினேன்.

குழந்தை, "நாயனு" என்று அவரிடம் பாய்ந்தது.

"நாயனு இல்லேடா கண்ணு; தாத்தா. தாத்தா சொல்லு பார்ப்போம்" என்று நளினி குழந்தையைக் கோபாலையரிடம் கொடுத்தாள்.

அது சிரித்துக்கொண்டே மறுபடியும், "நாயனு ஏ?...." என்று அவர் மூக்கைப் பிடித்து இழுத்தது.

நாங்கள் எல்லோரும் சிரித்தோம்.

* * *

ராமகிருஷ்ணனின் டைரிகளில் படிக்கவேண்டிய பக்கங்களைத் தேடிப்பிடித்துப் படிக்கவேண்டி யிருந்ததாலும் அவை சிக்கலான ஆங்கிலத்தில் இருந்ததால், பற்பல இடங்களில் சிறிது சிந்தித்து அர்த்தம் செய்துகொள்ள வேண்டியிருந்ததாலும், எனக்கு முன்பே அவர் நான் கொடுத்த இரு கதைகளையும் படித்து விட்டார்.

தலையை நிமிர்த்தியதும், "என்ன, படித்து விட்டீர்களா?" என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டுக் கொண்டோம்.

"நீங்கள் கொடுத்த கதைகளைப் படித்த பிறகு எங்கள் வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து பார்த்தது போன்ற உணர்ச்சி உண்டாகிறது. ஆனால் என் டைரிகளில் நீங்கள் படித்த விஷயங்கள்தாம்........" என்று ராமகிருஷ்ணன் தொடர்ந்தபோது, நான் அவரை இடைமறித்து, "அதோ பாருங்கள் மிஸ்டர் ராமகிருஷ்ணன், அந்தப் புகைபோக்கியை. ஆகாயத்தை அளாவும்படியாக அதை எழுப்பியிருப்பது, வெறும் அலங்காரத்திற்காக அல்ல. இந்த மில்லின் யந்திரங்கள் கக்கும் புகை அனைத்தையும் வெளிப்போக்கி, இடத்தை நிர்மலமாக்குவதற்காகவே அது இருக்கிறது. அதுபோல நான் கொடுத்த இரு கதைகளும் கிளப்பும் சந்தேகங்களையும் போக்கி, எல்லோர் மனத்தையும் நிர்மலமாக்கப் போவது, உங்கள் டைரிகளிலுள்ள விஷயங்களே."

"எப்படி?" என்று ஆவலுடன் கேட்டார் ராமகிருஷ்ணன்.

"எப்படியா? அடுத்த மாசம் பாருங்கள் தெரியும்" என்றேன் நான்.

* * *

வீட்டுக்குத் திரும்பி வந்துகொண் டிருந்தபோது சுப்புணி, "என்னடா? பிரமாதமாக எல்லோரிடமும் அளந்துவிட்டு வந்துவிட்டாயே? இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

"எல்லாம் அடுத்த மாசம் பாரடா; தெரியும்" என்று அவனிடமும் அழுத்தலாகப் பதில் சொன்னேன்.

அந்த அழுத்தல் இப்பொழுது அவனுக்குத் தெரிந்து போயிருக்கும். ஆசிரியர் கேட்ட நெடுங்கதையிலும் நெடுங்கதையை, அவனும் அந்தக் கதையில் சம்பந்தப்பட்டவர்களும் இன்னும் அநேகரும் இப்பொழுது படித்து, உலகம் கட்டும் கற்பனைகளுக்கும், உண்மை நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தாரதம்மியத்தை உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

முற்றும்

# அமுத நிலைய வெளியீடுகள்

ரூ. அ.

கலைச் செல்வி: கி. வா. ஜகந்நாதன் 2 0

கலையின் நுணுக்கத்தையும், வாழ்க்கையின் மேடு பள்ளங்களையும், பலவகை மனக்குரங்குகளின் சேஷ்டைகளையும், தடைகளை யெல்லாம் மீறி உணர்ச்சி பொங்கிவரும் அடியே நிகழும் குமுறல்களையும் விளக்கும் இனிய கதைகள்.

கஞ்சியிலும் இன்பம்: கி. வா. ஜகந்நாதன் 1 8

கூழ் குடிக்கும் வாழ்க்கையிலும் இன்பமும் அமைதியும் இருப்பதை எளிய மக்கள் பாடும் பாடல்கள் தெளிவிக்கின்றன. உள்ளத்தைப் பிணிக்கும் உணர்ச்சியும், இயற்கையாக எழுந்த சோக சித்ரமும், தாயன்பும் நிரம்பிய பாடல்களின் விளக்கமும் கதையும் அடங்கிய புத்தகம்.

எல்லாம் தமிழ்: கி. வா. ஜகந்நாதன் 1 8

புலவர்கள் யாருக்கும் அஞ்சுவதில்லை. தம்முடைய பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலிப்பவர்கள். அவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த அரிய சம்பவங்கள் கதைபோலச் சொல்லப் பட்டுள்ளன.

எட்டையபுரத் தேவன்: ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் 0 4

வெள்ளைக்காரக் கும்பினியார் வந்த புதிதில் நிகழ்ந்த வீரக்கதை. எட்டையாபுரத் தேவன் ஏழு காளைகளை அடக்கிய தீரச் செயலைச் சொல்லும் கதை.

துணைவி: "அகிலன்" 2 0

'அகிலன்' தம்முடைய சிறு கதைகளாலும் நாவல்களாலும் தமிழர்களின் அன்புக்குப் பாத்திரரானவர். 'கலைமகள்' நாவல் பரிசைப் பெற்ற 'பெண்' என்ற அரியநாவலுக்கு ஆசிரியர்.

இந்த நாவலில் மக்களின் உள்ளத்து உணர்ச்சிகள் மோதும்போது உண்டாகும் நிகழ்ச்சிகள் சித்திரிக்கப் படுகின்றன. இளமையிலேயே எழும் உணர்ச்சிகளும் அன்பிலே தோன்றும் ஆர்வமும் வாழ்க்கைப் பிரயாணத்திலே நிகழும் பல பல அற்புத நிகழ்ச்சிகளும் கதையினூடே விரவி விளங்குகின்றன. ஆரம்ப முதல் முடிவு வரையில் விறுவிறுப்பமைந்த போக்கிலே உள்ளது.

விடுதலை : த. நா. குமாரஸ்வாமி 1 8

தேவராஜனின் பரபரத்த சுபாவத்திற்கும் நிர்மலாவின் அமரிக்கையான போக்குக்கும் ஒத்து வரவில்லை. ஆர்வமுடன் நேசித்து மணந்த தம்பதிகள் ஒருநாளேனும் சந்தோஷ வாழ்க்கை நடத்தவில்லை. சந்தர்ப்பங்கள் அவர்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கின்றன. புத்தக உலகில் புதைந்து கிடந்த நிர்மலாவின் தந்தை தம் மகளை வெளி யுலகம் தெரியாத பெண்ணாக வளர்த்ததன் பலனை அநுபவிக்கிறார். குடிக்கும் சூதுக்கும் அடிமையான தேவராஜன் மீண்டும் நிர்மலாவோடு சேர்ந்து வாழ்க்கையில் ஈடுபடுவதே ஒரு புதிய சகாப்தமாகிறது. தெளிவான நடையில் விறுவிறுப்புடன் செல்லும் கதை.

மறுமலர்ச்சி : 'மாயாவி' 7 0

[மலிவுப் பதிப்பு] 5 8

அழகையும் அறிவையும் பெற்ற கல்யாணியை அதிருஷ்டம் அற்றவளாக்கி அவளைச்சுற்றி அநேகம் முட்புதர்களையும் பயிராக்கி அவளது கணவனை அஞ்ஞாத வாசத்தில் வைத்து உடன் பிறவாத சகோதரன் வாசுவைக் குண சித்திர பாத்திரத்திற்கு இணையற்ற உதாரண புருஷனாகச் செய்து படிக்கப்படிக்கத் தெவிட்டாத சுவையுடையதாக இந்தக் கதையைச் சிருஷ்டித்திருக்கிறார் மாயாவி.